கல்கி




KALKI 25.4.1965 35 காசு



பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர்

இதமான நறுமணம் கொண்டது
புத்துணர்ச்சி யளிக்கிறது
வியர்வையை உறிஞ்சுகிறது



ஸ்னானத்திற்குப் பின் அனுபவமாகும் புத்துணர்ச்சி நீடித்து நிற்க, நாள் முழுவதும் நறுமணத்துடன் திகழ, பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள். இதமான வாசனையுள்ள இந்த டால்கம் பவுடர் வியர்வையை விரைவில் உறிஞ்சி, எல்லாக் காலநிலைகளிலும், உங்களை நாள் முழுவதும் குளுமையுடனும் மனோ உல்லாசத்துடனும் வைக்கும். பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் குடும்பத்தினர் அனைவர்க்கும் ஏற்றது.


சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

யாவரும் வாங்கக்கூடிய
உயர்தர டால்க்

JWT-P-3216

கல்கி

பொருளடக்கம்



விகவாவக, சித்திரை 13 —o— ஏப்ரல் 25

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


"காப்பி அடி!"
கம்யூனிஸம்
தனியார் சுதந்திர முயற்சி
இலவச யோசனைகள்
விஷவாயுச் சண்டை, வியட்நாம்,
ஆப்பிரிக்க - ஆசியநாடுகள் பிரச்னை
முதலியவற்றைப் பற்றி இலவசமாக
யோசனைகள் வழங்கப்படும்.
இல்லை, எங்கள் மூளை வறண்டு விட்டது!
நம் பிரச்னைகளைப் பற்றி யோசித்தீர்களா?
PK



அதிமுக்கியமானதோர் அறிக்கை

மலர் 24 • இதழ் 39

விவசாயப் பண்டங்களின் ஏற்றுமதி குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக ஸ்ரீ வி. சங்கர் அவர்களின் தலைமையில் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது. சர்க்காரின் நிலக் கொள்கையால் பாதிக்கப்பட்ட தேசத்துக்கு இவ்வறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகி அந்நியச் செலாவணி பெறக்கூடிய எல்லாப் பயிர்களுக்கும் உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென இந்த ஆராய்ச்சிக் குழு அழுத்தமாக யோசனை கூறியுள்ளது. நில உடைமைகள் சிறியனவா யிருப்பது உற்பத்திப் பெருக்கத்துக்குப் பெருந்தடை என்பது இந்தக் குழுவின் அபிப்பிராயம். இந்தியாவில் இரண்டு ஏக்கரிலும், மூன்று ஏக்கரிலும் பண்ணைகள் இருப்பதற்கு மாறாக வெளி நாடுகளில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் கொண்ட பண்ணைகளிருப்பதை அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. 'ஒரு புறம் நாம் மற்ற நாடுகளில் அதிக உற்பத்தி செய்யப்படுவதை எடுத்துக் காட்டுகிறோம்; மறுபுறம் புதிய விவசாய முறைகளைப் பின்பற்ற முடியாமல் பழங்கால முறையிலேயே விவசாயத்தைத் தொடரச் செய்யும் சட்டங்களை விதித்து வருகிறோம்' என்று ஆராய்ச்சிக் குழு கூறுகிறது. காப்பி, தேயிலை முதலிய மலைத் தோட்டங்களுக்கு உச்சவரம்புச் சட்டத்தில் விலக்குத் தந்தது போல், அந்நியச் செலாவணி பெற்றுத் தரும் எல்லாப் பயிர்களுக்கும் விலக்களிக்க வேண்டும் என்பது குழுவின் யோசனை.

மலைத் தோட்டம், ஏற்றுமதிப் பயிர் என்றெல்லாம் பிரித்துப் பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. உள்நாட்டில் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் உணவு தானியங்களுக்கும் குழுவின் யோசனை பொருந்தும். எந்தப் பயிரின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமாயினும் நவீன உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். நடைமுறை உபகரணங்களுக்குப் பதில் விலை உயர்ந்த நவீன உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டுமாயின், அதற்குத் தேவைப்படும் மூலதனத்துக்கு ஏற்ப நில உடைமைகள் விஸ்தாரமா யிருக்க வேண்டும். நில வரம்புச் சட்டத்துக்கு ஆளாகியுள்ள சிறு உடைமைகளுக்காக யாரும் பெரும் முதலீடு செய்ய முடியாது. சுருக்கமாகச் சொன்னால் உணவு உற்பத்தி பெருக வேண்டுமாயின் நிலவரம்பு ஒழிய வேண்டும்.

காங்கிரஸ் சோஷலிஸத்தின் தாரக மந்திரமாகிய நிலவரம்புச் சட்டம் உற்பத்திக்கு ஊறு விளைவிக்கிறது என்று அதிகார பூர்வமான அறிக்கையில் இவ்வாறு வெளியாகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். சில இனங்களுக்கு மட்டும் விலக்கு அளிப்பதால் புதிய தீமைகள் உண்டாகும். முன்பு நெல்வயல்கள் கரும்புச் சாகுபடிக்கு மாற்றப்பட்டது போல், உணவுதானிய நிலங்களில் ஏற்றுமதிப் பயிர்கள் பயிரிடப்படும். அரிசி உற்பத்தி இதனால் குறைந்து போகும். எனவே, நிலவரம்பே கூடாது என்பது பொது விதியாக வேண்டும்.

நிலமற்ற உழவருக்கெல்லாம் நிலம் தர இந்நாட்டில் வசதி கிடையாது என்பதை அரசாங்கமே

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

உணர்ந்து விட்டதால்தான், 'உழுவருக்கெல்லாம் சொந்த நிலம்' என்கிற பிரசார கோஷத்தைக் கைவிட்டு விட்டது. உழுவர்கள் யாவரும் திருப்தியாக வாழ வேண்டுமெனில், அவர்களை நிலச் சொந்தக்காரர்களாக்கி முதலீடு செய்ய முடியாமல் தவிக்கச் செய்வதில் பொருளில்லை; சர்க்கார் பாதுகாப்பின் கீழ் அவர்கள் உரிய குத்தகை வருமானம் பெறச் செய்தாலே போதும். இதைக் காங்கிரஸில் உள்ள ஒருசில ஆன்மாக்களேனும் உணர்ந்தால் நலமாயிருக்கும். புதிதாக உற்பத்தி செய்யப்படும் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கெல்லாம் சர்க்கார் கடனுதவி செய்வது சாத்தியமில்லை என்பதைப் பிரத்தியட்சமாகப் பார்த்து விட்டோம். அப்படியே உதவி செய்தாலும் சிறு சிறு உடைமைகளைக் கொண்டு உற்பத்திப் பெருக்கம் காண முடியாது என்கிற உண்மையை இப்போது அரசாங்கம் நியமித்த ஆராய்ச்சிக் குழுவே சந்தேகமற வெளியிட்டுள்ளது.

உழைப்பு, முதலீடு இவற்றோடு நிர்வாகத் திறனும் விவசாய வளர்ச்சிக்கு மிக மிக அவசியம் என்பதைப் பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் சமீபத்தில் எடுத்துக் காட்டினார். நிர்வாகத் திறன் பெற்றிருந்தவர்களின் உடைமைகளைச் சர்க்கார் பின்னப்படுத்தியதன் விளைவாகத்தான் செயற்கைப் பஞ்சத்தை அநுபவித்து வருகிறோம். சிறிய நில உடைமைக்காரர்கள் மகசூலைத் தம் குடும்ப உபயோகத்துக்கு மட்டுமே வைத்துக் கொள்வார்கள்; பெரிய விவசாயி செய்தது போல், தங்கு தடையின்றி விற்பனைக்கு விட முன்வர மாட்டார்கள். இதனாலேயே நாட்டில் விளைச்சல் சரியாயிருந்த போதிலும் நகர்ப்புற 'சப்ளை' குறைந்து, செயற்கைப் பஞ்சம் உண்டாகி யிருக்கிறது. நிலவரம்புச் சட்டம் ஒழிவதால் இந்த நிலைமைகள் யாவும் விலகும். விவசாயிகள் நவீன யந்திரங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய நல்ல தருணத்தில் நிலவரம்புச் சட்டம் யமனாக வந்து முன்னேற்றத்தைத் தடுத்து, நம்மை வெளிநாடுகளின் நிரந்தரப் பிச்சைக்காரர்களாக்கி விட்டது. இப்போதேனும் சர்க்கார் கண் விழித்தால் பயனடைவோம். தற்போது சர்க்காரின் வரிக் கொள்கை ஒன்றுக்குத்தான் வரம்பு விதிக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து நிலவரம்பை ரத்தாக்கச் சர்க்கார் முன் வந்தால் அது நாட்டுக்கே வரப்பிரசாதமாகும். ஸோவியத் ருஷியாவில் லாப நோக்கத்துக்கு இடம் தர முற்பட்டிருப்பது எத்தகைய ஓர் உத்தமமான முடிவோ, அதற்கீடானதொரு நல்ல முடிவை எடுத்த பெருமை சர்க்காருக்குக் கிடைக்கும். ருஷியாவின் கம்யூனிஸ ஏகாதிபத்தியமாயினும் சரி, இந்தியாவின் மறைமுக சர்வாதிபத்திய ஆட்சியாயினும் சரி இயற்கை விதிகளை எதனாலும் மாற்ற முடியாது. இந்த உண்மையைச் சுதந்திரக் கட்சி கூறி வந்த வரையில் சர்க்கார் கேட்கவில்லை. அரசாங்கத்தின் வர்த்தகக் கமிட்டியே கூறிய பின்னும் அப்படிச் செய்ய முடியுமா? ஆனால் அறிக்கையின் மீது நீண்ட காலம் நடவடிக்கை எடுக்காமலே அதை அலமாரியில் தூக்கிப் போட்டு, காலக்கிரமத்தில் மறந்து விடலாம்; கடந்த பதினேழாண்டுகளில் செய்தது போலத் தொடர்ந்தும் தேசத்தை விநாசத் திசையில் அழைத்துச் செல்லலாம். தவற்றை உணர்ந்து திருத்திக் கொள்ளும் திறம் படைக்காத ஒரு கட்சியை ஆட்சியில் அமர்த்திய பின் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

காமராஜருக்கு நன்றி!

'அறிவாளிகளின் யோசனை இங்கு யாருக்கு வேண்டிக் கிடந்தது? எங்களுக்கு மக்களை ஏமாற்றத் தெரியும். அந்த சாதுரியமே எங்களுக்குப் போதும்' என்கிற தோரணையில் சமீபத்தில் திரு காமராஜ் அவர்கள் பேசியிருக்கிறார். தருமபுரித் தேர்தலுக்குப் பின் சென்னையில் நடைபெற்ற ஒரு காங்கிரஸ் வெற்றி விழாவில் திரு காமராஜ் அவர்கள் வழக்கத்துக்கு மீறி நீண்ட உரையாற்றி யிருக்கிறார். 'தருமபுரி வெற்றி சுயநலம்பிடித்த பணக்காரர்களுக்கும், அவர்களுடைய பத்திரிகைகளுக்கும் படுதோல்வி' என்று கூறிய காமராஜ் அவர்கள் தம்முடைய மகிழ்ச்சி வேகத்தில், 'பத்திரிகைகளோ அறிவாளிகளோ பொதுமக்களிடம் எதுவும் சாதித்துவிட முடியாது என்பதற்குச் சுதந்திரப் போராட்டச் சரித்திரமே சான்று' என்று பேசியிருக்கிறார். பொதுவாகக் காங்கிரஸை ஆதரிப்பதும், மிகவும் நம்பகமானதுமான 'ஹிந்து' பத்திரிகை இவ்வாறுகூறுகிறது:

Mr. Kamaraj said the history of the freedom struggle had shown that neither the intelligentsia nor the newspapers could stir the masses.

சுதந்திரப் போராட்டத்தை நடத்தியவர்கள் எத்தகைய அறிவாளிகள் என்பதையும், அப்போது பத்திரிகைகள் விடுதலை வேட்கைக்கு எப்படி உரமூட்டி வந்தன என்பதையும் திரு காமராஜ் மறுத்தாலும் நாடு மறக்காது; மறக்கவும் மறக்காது.

சுயநலம்பிடித்த பணக்காரர்களையும், அவர்களுடைய பத்திரிகைகளையும் கண்டனம் செய்ய முன்வந்த திரு காமராஜ் சகட்டுமேனியாக எல்லாப் பத்திரிகைகளையும் கண்டிக்க வேண்டிய அவசியமோ, அறிவாளிகளை யெல்லாம் குறைகூற வேண்டிய அவசியமோ என்ன என்று புரியவில்லை. காங்கிரஸில் இன்னும் பல நல்ல படிப்பாளிகளும் விஷய ஞானமுள்ளவர்களும் இல்லையா? பத்திரிகைத் தொழிலின் தலையிலேயே சர்க்கார் கைவைத்தாலும்கூட வாயை மூடிக் கொண்டு அதை ஆதரித்து சலுகைபெறமுயலும் பத்திரிகைகள் சில இல்லையா? அவ்வாறிருக்க திரு காமராஜ் பத்திரிகைகளும், அறிவாளிகளும் என்றுமே எதுவுமே சாதிக்க முடியாது என்று ஏன் கூறுகிறார்? பத்திரிகைகளையும் அறிஞர் கூற்றுக்களையும் தேர்தல் வெற்றிக்கு விசேஷ சாதனங்களாக அவர் கருதவில்லை என்பதே காரணம். அதிகார பலமும் பண பலமும்

பெற்ற் காங்கிரஸிடம் மக்களை ஏமாற்றும் சாதுரியமும் யதேஷ்டமாக இருக்கிறது. பொதுமக்களின் நலனுக்காக எந்த சர்க்காரும் செய்ய வேண்டிய நிருவாகக் காரியங்களையெல்லாம் காங்கிரஸின் நன்கொடை போலக் காட்டிக் கட்சிக்கு நல்ல பெயர் பெறும் சாமர்த்தியம் உள்ளது. சர்க்கார் மூலமாகத் தொகுதிக்கு இன்னின்ன நல்லது செய்வோம் என்று ஆசை காட்டும் வாய்ப்பும் காங்கிரஸுக்கே உள்ளது. தேர்தல் வெற்றிக்கு வேறென்ன வேண்டும்? இந்த உண்மையை இவ்வளவு ஸ்பஷ்டமாக விளக்கி வைத்த காமராஜ் அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தருமபுரித் தேர்தல் வெற்றிக்குக் காரணம் என்ன என்பதை இனியும் நாம் ஆராய வேண்டிய அவசியம் இல்லை. புராணங்களைப் பார்த்தால் அசுரர்கள் அடிக்கடி அமோக வெற்றிகள் பெற்றதும், அநேக கோடி ஆண்டுகள் அதிகார போகத்திலிருந்ததும் தெரிய வரும். இது எதனால் என்பதற்கு நம் பகுத்தறிவினால் விடைசொல்ல முடியாது. ஆட்சி மொழிப் பிரச்னையில் சர்க்கார் அவிவேகமாக நடப்பதால் என்னென்ன விபரீதம் விளையுமோ என்பதைக் குறித்துச் சென்ற வாரம் 'ஸ்வராஜ்யா'வில் கவலை தெரிவித்த ராஜாஜி, ''ஆண்டவன் எப்படியெல்லாம் லீலை புரியப் போகிறானோ?'' என்று முடித்திருந்தார். நமக்கு விடை தெரியாமல் குழம்பும் சூழ்நிலையில் 'இது ஆண்டவன் லீலை' என்றெண்ணித் தேறித் தருமத்தின் வழியில் தளராமல் செல்வதன்றி வேறு வழியில்லை.

எனினும், தர்மபுரித் தேர்தல் வெற்றியைப் பற்றி இம்மாதம் 13ந் தேதி 'ஹிந்து'வில் வெளியாகியுள்ள விமரிசனத்திலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுவதன் மூலம் திரு காமராஜரின் கூற்றிலுள்ள உண்மைக்குச் சான்று காட்டுகிறோம் :

> ''காங்கிரஸ் அபேட்சகரைத் தேர்ந்தெடுத்தால் மட்டுமே, சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் போது வடசேலத்தின் தலைநகராகத் தருமபுரி தேர்ந்தெடுக்கப்படும் என்று காங்கிரஸ்காரர்கள் தங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது தொகுதியாளருக்குக் கூறினார்கள். (காங்கிரஸுக்கு வாக்களித்தால்) அடுத்த கல்வியாண்டிலேயே தருமபுரியில் ஒரு சர்க்கார் கல்லூரி தொடங்கப்படும் என்றும் அவர்கள் பிரசாரம் செய்தார்கள்.''


இப்படிப்பட்ட பிரசார வித்தை இருக்கும் போது பத்திரிகைகளும், அறிவாளிகளும் வேண்டியதில்லை என்று திரு காமராஜ் கூறியது நியாயமே அல்லவா?

தருமபுரியில் இடைத்தேர்தல் நடந்தது போல் கிருஷ்ணகிரியில் ஸ்தானம் காலியாகி அந்தத் தொகுதியில் உபதேர்தல் நடந்திருந்தால், ''எங்களுக்கு வாக்கு அளித்தால் கிருஷ்ணகிரியை வடக்கு சேலத்துத் தலைநகராகச் செய்வோம்'' என்றே சொல்லியிருப்பார்கள் அல்லவா? இந்த மாதிரியான பிரசாரம் சட்டத்துக்கும் நீதிக்கும் விரோதமல்லவா? ஆனால் நீதியைப் பற்றிக் காங்கிரஸுக்கு என்ன கவலை?

என்ன சேதி?

பழனிசாமிக் கவுண்டரின் மறைவு

ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண்டர் மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டவுடன், ''யார்? 1952ல் ராஜாஜி மந்திரி சபை அமைத்த போது, மதுவிலக்கு மந்திரியாக இருந்து ராஜாஜிக்குத் துணை புரிந்தாரே, அந்தப் பழனிசாமிக் கவுண்டரா?'' என்றுதான் தமிழுலகம் கேட்டது. அன்று மட்டுமல்ல, அதற்கும் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ராஜாஜிக்குத் துணை நின்று பல சேவைகள் புரிந்தவர் பழனிசாமிக் கவுண்டர்.



கோவை, சேலம் மாவட்டங்களில் வெள்ளக்கிணறு கவுண்டர் குடும்பம் என்றால் தனி மதிப்பும் மரியாதையும் உண்டு. காங்கிரஸில் சேர்ந்தால் கஷ்டமும் தியாகமும் சிறைவாசமும்தான் கிடைக்கும் என்றிருந்த நாட்களில் ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண்டர் அவர்கள் தைரியமாகக் காங்கிரஸில் சேர்ந்து தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்குப் பிரசாரம் முதலிய நிர்மாணப் பணிகள் புரிந்தார். சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு மனைவியுடன் சிறைவாசம் மேற்கொண்டார்.

வேளாளக் குடும்பத்தில் பிறந்த அவருக்கு இயற்கையாகவே விவசாயத்தில் அபரிமித ஈடுபாடு உண்டு. ஆனால் பிற்காலத்தில் விவசாயத் துறையில் காங்கிரஸ்காரர்கள் புகுந்து புரியும் குழப்பங்களைக் கண்டு மனம் பொருமினார். எனினும், அவர் காங்கிரஸை விட்டு வெளியேறாமல் இருந்து வந்தார். ராஜாஜி சுதந்திரக் கட்சி ஏற்படுத்திய போது அவருடைய தம்பியான வி. சி. சுப்பையா கவுண்டர் அவர்கள் கோவை மாவட்டத் தலைவராக இருந்து பேருதவி புரிந்தார். அவர் மறைவுக்குப் பிறகு பழனிசாமிக் கவுண்டரின் மூத்த மகன் திரு வி. பி. கந்தசாமிக் கவுண்டர் சுதந்திரக் கட்சித் தலைவராக

இருந்து பணியாற்றி வருகிறார். திரு வி. சி. பழனிசாமிக் கவுண்டரின் மறைவினால் தமிழகம் ஓர் உத்தம புருஷரை இழந்துநிற்கிறது. அவரது பிரிவினால் வருந்தும் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

சதாசாரம் பறி போகிறது

சர்க்காரின் இலாகா என்ற பெயரைப் பெறாமலே சர்க்கார் இலாகா போல் செல்லமாக வளர்ந்து வரும் பாரத சேவகசமாஜம் இது வரையில் கணக்குக் காட்டியதேயில்லை என்று மக்கள் சபைக் கமிட்டி தெரியப் படுத்தியுள்ளது.

பதின்மூன்றாண்டுகளாகச் செயலாற்றி வரும் சமாஜத்துக்கு இது வரை மத்திய சர்க்கார் இரண்டு கோடியே முப்பது லட்சம் ரூபாய் உதவி மானியம் அளித்திருக்கிறது. இது தவிர ராஜ்ய சர்க்கார்கள் 96 லட்சம் ரூபாய் மானியம் அளித்துள்ளன.

காங்கிரஸ் கட்சியின் அங்கம் போலவே செயல் புரிந்து வரும் சமாஜம் சர்க்காருடனும், கட்சி அரசியலுடனும் சம்பந்தப்படவில்லை என்று சொல்வது முழுப் பொய். பாரத சேவக் சமாஜம் இவ்வளவு சலுகைகளுடன் தட்டிக் கேட்பாரில்லாமல் வளர்ந்து வரக் காரணம் அதன் தலைமையில் காங்கிரஸ் ஆட்சித் தலைவர்கள் இருப்பதுதான். சமாஜத்தின் பெருந்துணையாக இருப்பவர் நமது உள்துறை மந்திரி ஸ்ரீ நந்தர் அவர்கள். சதாசாரத்துக்காகப் படாதபாடு படும் நந்தர் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால்தான், பாரத சேவக சமாஜம் இப்படிக் கேட்பாரின்றித் தன்னிச்சையாக இயங்கி, ஊழல்களின் நிலைக்களனாகி யிருக்கிறது என்று பிரபல பத்திரிகைகள் கட்டிக்காட்டுகின்றன. பாவம், சதாசாரம்!

மேற்கு ஜெர்மானியரும் நாமும்

சென்னைக்குச் சென்ற வாரம் வந்திருந்த மேற்கு ஜெர்மனி பார்லிமெண்ட் தூதுக் குழுவினர் சில உண்மைகளை வெளியிட்டனர்.

மேற்கு ஜெர்மனி அரசாங்கம் கம்யூனிஸ நாடுகளைப் போல், தொழில் உற்பத்தித் துறையில் தானே ஈடுபடுவதில்லை. அது, தனது நாட்டிலுள்ள தொழில் அதிபர்களைத் தான் நம் நாட்டில் முதலீடு செய்ய ஊக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்கள் அதற்குத் தயாராயில்லை. ஏனெனில், நம் அரசாங்கம் பல கட்டுத் திட்டங்களை விதிக்கிறது.

நம் அரசாங்கம் விதிக்கும் வரிகளையெல்லாம் செலுத்தினால் முதலீடு செய்தவர்களுக்கு ஒன்றுமே லாபம் நிற்பதில்லையாம். லாபத்தில் குறைந்தபட்சம் பதினாறு சதவிகிதமாவது தங்கள் நாட்டுக்குக் கொண்டு செல்ல அனுமதித்தாலன்றி ஜெர்மானியத் தொழிலதிபர்கள் நம் நாட்டில் முதலீடு செய்ய மாட்டார்கள்.


இந்தியத் தேயிலைக்கு ஜெர்மனியில் நல்ல கிராக்கி ஏற்பட்டு வருகிறது. ஆனால் நம் நாட்டுப் பொருள்களுக்கு, அவர்கள் நாட்டில் போதியஅளவு விளம்பரம் செய்யாததாலும், நமது நாட்டுப் பொருள்கள் விலை மிகவும் அதிகமாக இருப்பதாலும் ஜெர்மனியில் நல்ல மார்க்கெட் பிடிக்க முடியாமல் இருக்கிறது. இந்தக் குறைபாடுகளை மேற்கு ஜெர்மனி பார்லிமெண்ட் குழுவினர் எடுத்துக் காட்டினார்கள். இதற்குமேல் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் நம்மைக் குறைகூற முடியுமா?

ஆதிசங்கரருக்கு அஞ்சலி



பகவத்பாத ஸ்ரீ ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகளின் புனித நினைவைக் கல்கத்தாவில் நீங்காமல் நிலைபெறச் செய்வதற்காக ஸ்ரீ பி. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் அகில பாரத சங்கர சேவா சமிதியின் மேற்கு வங்கக் கிளையினர் நன் முயற்சி தொடங்கியுள்ளனர். ஸ்ரீ சங்கரரின் திருநாமத்தில் தத்துவ ஆராய்ச்சி நிலையமொன்றும், மன்றமும் எழுப்ப உத்தேசித்துத் தெற்குக் கல்கத்தாவில் மையமான ஒரு பகுதியில் நிலம் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருப்பணிக்கு ஆசிகூறி அருளியுள்ள ஜகத்குரு ஸ்ரீ சிருங்ககிரி சங்கராசாரிய சுவாமிகள் இரண்டரை லட்சம் ரூபாய்களை அளிக்க மனமுவந்து முன் வந்திருக்கிறார்கள். தலைவர் ஸ்ரீ பி. சுப்பிரமணியம் அவர்களும், ஸ்ரீமான்கள் வி. ஏ. பி. ஐயர், எஸ். ஸ்ரீகிருஷ்ணய்யர், எஸ். நடேசன், பி. ஆர். நீலகண்டன் ஆகியோரும் அடங்கிய விசேஷக் கமிட்டி பூர்வாங்க வேலைகளைத் தொடங்கியுள்ளது. அரிய முறையில் பெரிய அளவில் ஆசாரியர்களின் நினைவுக்காக அமைக்கப்படவிருக்கும் இந்தத் திருப்பணியில் ஆஸ்திகர் யாவரும் பங்கு பெறவேணும்.

ராஜாஜியின் கருத்துக்கள்



நீண்ட கால அக்ஞாத வாசத்துக்குப்பின் நிகிடோ குருஷேவ் என்ற நல்ல மனிதரைப் பற்றி மீண்டும் செய்தி வெளியாகியிருக்கிறது. உலக நாடுகள் சமாதானமாகக் கூடி வாழ முடியும் என்ற கருத்தை இப்போதும் அவர் நம்பிக்கையுடன் வெளியிட்டிருக்கிறார். இதற்கு நேர் மாறான கருத்துத்தான் மாவ் — ஸே — துங் அவர்களுடையது. ''நான் மாறாத கம்யூனிஸ்ட்தான்; ஆனாலும் நாம் கம்யூனிஸத்தைப் பின்பற்றாத நாடுகளுடனும் சமாதானமாக வாழ முடியும் என்று நம்புகிறேன்'' என்கிறார் குருஷேவ். சர்ச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகப் போர் புரிவதை அவர் விரும்பவில்லை. மாவ்—ஸே—துங் அவர்களும் இதையே சொல்லக் கூடும். ''சர்ச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகப் போர் புரியக் கூடாது; அதாவது **எதிராளி** போர் புரியக் கூடாது'' என்று அவர் சொல்லுவார்!

* * *

உலக நாடுகள் பனிப் போரை விட்டுச் சமாதானமாக வாழ உதவும் உபாயங்களில் சர்வதேச வர்த்தகமும் ஒன்றாகும். நீண்ட காலத் தவணைகளில் கம்யூனிஸ நாடுகளும் மேற்கத்திய நாடுகளும் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்வதால் பரஸ்பர ஒற்றுமைக்கு வழி ஏற்படுகிறது. இதே போல் மக்கள் — முக்கியமாக இளவயதினர் — ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்லச் சுலபமான வசதியிருந்தால் நேசப் பான்மை பெருகும். உலக நாடுகளில் சில முக்கியமான நகரங்களில் பெரிய சர்வதேச சர்வகலாசாலைகள் நிறுவுவதாலும் சமாதானத்துக்கு வலுவான தூண்டுகோல் அமைக்க முடியும்.

* * *

யதேச்சாதிகார ஆட்சி நடத்துபவர்கள் எதிராளிகளைச் சிறை வைப்பதில் மிகவும் ஜரூராக இருப்பார்கள். எதற்காகக் கைது செய்கிறார்களோ அந்த நோக்கம் மறைந்து போன பின்பும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்காது. பொது மக்கள் தவற்றை எடுத்துக் காட்டினால் சர்க்கார் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, தாங்கள் ஏதோ மகத்தான தயாளச் செயல் புரிந்தது போல் நல்ல பெயர் எடுப்பார்கள்.

லண்டனிலுள்ள **Amnesty International** என்ற ஸ்தாபனம் தவறான முறையில் சிறை வைக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகச் சர்வதேச அடிப்படையில் போராடுகிறது. இது வரை 330 அரசியல் கைதிகளுக்கு விடுதலை பெற்றுத் தந்திருக்கிறது. ''உன் கருத்தை நான் வெறுக்கிறேன்; எனினும் உன் கருத்தை வெளியிடுவதற்கு நீ பெற்றுள்ள உரிமையைக் காப்பதற்காக நான் என் உயிரையும் தரத் தயாராயிருக்கிறேன்'' என்ற வால்டேரின் மொழியே இந்த ஸ்தாபனத்தின் துவஜ வாசகமாகும்.

* * *

சீனாவினால் கல்கத்தாவின் மீது விமானத் தாக்குதல் ஏற்படுமாயின் அதற்குக் காப்பாக அமெரிக்க விமானப் படையின் உதவி வேண்டுமென்று காலஞ்சென்ற பிரதமர் கோரியதாக ஸ்ரீ கதிரகோஷ் பார்லிமென்டில் ஒரு செய்தியை வெளியிட்டார். இவ்வாறு நேருஜி 'தடஸ்த'க் கொள்கையை ஒருபோதும் கைவிடவில்லை என்று ஆளும் கட்சியினர் கூறுகிறார்கள்; கதிரகோஷைக் கண்டிக்கிறார்கள்.

நேருஜி அமெரிக்க உதவியைக் கோரியிருப்பின் அது வருத்தப்பட வேண்டிய விஷயமல்ல; வறட்டுச் சித்தாந்தத்தை விட்டுப் பிரத்தியட்ச நிலையைப் புரிந்து கொண்டார் என்று மகிழ்ச்சியே கொள்ள வேண்டும்; கதிரகோஷைக் கண்டிப்பது சரியல்ல.

சீனத் தாக்குதல் ஏற்பட்ட ஆண்டில் நான் டில்லி வழியாகச் செல்லும் போது நேரு அவர்களைச் சந்தித்துப் பேசினேன். நமது எல்லையைக் கடந்து சீன ராணுவத் தளங்களின் மீது விமானத் தாக்குதல் செய்வதே ஆக்கிரமிப்பை முறியடிக்க உதவும் என்ற என் கருத்தை அவரிடம் கூறினேன். அவர் ஒப்புக் கொண்டார். 'அவ்வாறு நாம் செய்தால் சீனர்கள் கல்கத்தா மீதும் சென்னை மீதும் விமானத் தாக்குதல் நடத்துவார்கள்; ஆனால் எப்படியும் அவர்கள் விமானத் தாக்குதல் செய்யக் கூடும்; அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன்' என்றார்.

* * *

மில்காரர்களின் போட்டியின்றிச் சில ரகத் துணிகள் கைத்தறிக்கே ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். எனினும் கைத்தறியாளரின் கஷ்டம் தீர இது போதாது. புடவை, வேஷ்டி நெசவு முழுதும் கைத்தறிக்கு என்றே ஒதுக்கப்பட வேண்டும். சர்க்காரிடமிருந்து எதையும் கோராமல், வழிவழியாக வந்துள்ள தங்கள் தொழிலை இடையூறின்றி நடத்தத்தான் கைத்தறி நெசவாளர் விரும்புகிறார்கள். நீண்ட காலமாகக் கைத்தறியாளர் பின்பற்றி வரும் மோஸ்தர்களை மில்காரர்கள் காப்பியடிப்பதும், கைநுட்பத்தால் கலை அழகுடன் துணிகளைத் தயாரிக்கும் நெசவாளரின் தொழிலை இயந்திரத்தின் போட்டியினால் அழிப்பதும் முறையல்ல.



உலகெங்கும்
ஏற்கப்படுகின்றன!
ஓரியண்ட்
விசிறிகள்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா - 54/



"ஸன் ஆப் பிளப்பர்"

மழையே இல்லாத வறண்ட பாலை நிலங்களைச் சோலை வனமாக்கும் சாத்தியக் கூறுகளைப் பற்றி விஞ்ஞானிகள் நெடுங்காலமாக ஏதேதோ ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். பனிக்கட்டித் தூளை ஆகாயத்தில் மேகங்களுக்கு மேல் விமானத்தின் மூலம் கொண்டு போய்த் தூவிச் செயற்கை மழையைப் பொழியச் செய்து பயிர்களைச் செழித்து வளரப் பண்ணும் முயற்சிகள் மேல் நாடுகளில் கையாளப்படுகின்றன. இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் இப்போது நிவாரணமளித்து விட்டார் விந்தை மனிதர் வால்ட் டிஸ்னி! அவருடைய சிருஷ்டியான 'ஞாபக மறதிப் பேராசிரியர்' தமது படைப்பான அதிசயக் கண்டுபிடிப்பு 'பிளப்பர்' (ரப்பருக்குத் தம்பி) என்ற பொருளிலிருந்து ஒரு வித வாயுவையும், கிரணங்களையும் உண்டாக்கி அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கிறாரே — சென்னை எல்பின்ஸ்டன் தியேட்டரில், அதைத்தான் சொல்லுகிறோம்! திடீர் மழையை உண்டாக்கும் முறையை இந்தப் பிளப்பர் மூலம் கண்டுபிடித்து நம் கண்களில் நீர் துளிக்கும் வரை சிரிக்கச் செய்துவிடுகிறார். 'பிளப்பர் காஸ்' என்ற வாயுவை உற்பத்தி செய்து தம் மகன் விளையாடும் பந்தாட்டக் கோஷ்டிக்குக் கொடுத்துப் பந்தோடு அதைச் சுமக்கும் ஆட்டக்காரரையும் ஆகாயத்தில் பறக்க விட்டு, அநாயாசமாகக் கோல்களைப் போடச் செய்து, எதிர்க் கட்சிக்காரர்களின் ஆத்திரத்தைக் கிளப்பி நம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க வைக்கிறார். டிஸ்னியின் முத்திரையுடன் வெளிவந்துள்ள படமாதலால் ரசிக்கும்படியாக இருக்கிறது. ஆனால் முதல் படமான 'ஆப்ஸண்ட் மைண்டட் புரொபஸர்' போல் இந்த 'ஸன் ஆப் பிளப்பர்' அத்தனை விறுவிறுப்பாக இல்லை என்றுதான் கூற வேண்டும். முதல் கற்பனை முதல்தரமான கற்பனைதான்.

ஸாஞ்ஜ் அவுர் ஸவேரா

தலைப்புக்கு "மாலையும் காலையும்" என்றுதான் பொருள். யாருடைய வாழ்க்கையில்தான் கஷ்டமும் களிப்பும், மாலையும் காலையும் போல் மாறி மாறி வருவதில்லை? இது இயற்கையின் நியதி. இந்த நியதியை எடுத்துக் காட்டும் வாழ்க்கைச் சித்திரம்தான் இப்படம்.

அம்பாலாவில் பிரபல வக்கீலான மதுசூதன் அவர்கள் தமது மகள் மாயாவை, பம்பாயில் பிரபல டாக்டரான சங்கருக்குக் கொடுத்துக் கல்யாணம் செய்ய முடிவு செய்து ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டார். ஆனால் மணப் பெண் ஏற்கனவே ஒரு கல்லூரித் தோழனைக் காதலித்திருந்ததால் மணவினைக்கு முதல் நாள் இரவு யாருக்கும் தெரியாமல் ஓடிப்போய் விடுகிறாள். இதையறிந்த வக்கீல் அவமானம் தாங்க மாட்டாமல் தற்கொலை செய்துகொள்ள முயல்கிறார். அவரைக் காப்பாற்ற, அவர் மானத்தை நிலைநாட்ட, ஒரு வழி கண்டுபிடிக்கிறாள், அவரிடம் அபரிமிதமான அன்பு கொண்டுள்ள மருமகள். அதாவது அவருடைய வளர்ப்புப் பெண்ணான கௌரி, மணப் பெண் இடத்தை ஏற்று, மணமகனுடன் புக்ககம் சென்றுவிட வேண்டும். வட நாட்டில் முகத்திரை சம்பிரதாயம் இருப்பதால் உள்ளூர் ஜனங்களுக்கும், பிள்ளை வீட்டாருக்கும் உண்மை தெரியாமல் செய்துவிட வசதியிருக்கிறது. இப்படி மாயா என்ற பெயரில் சங்கரின் மனைவியாக வீட்டில் நுழையும் கௌரி, உண்மையை வெளியில் சொல்ல முடியாமல் மனச்சாட்சியுடன் போராடிக் கொண்டு நடத்தும் வாழ்க்கையே இச் சித்திரம். மிக நுட்பமான உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களாக — டாக்டர் சங்கராகக் காலஞ்சென்ற குருதத்தும் கௌரியாக மீனகுமாரியும் திறம்பட நடித்துள்ளார்கள். கதை மிகவும் லாகவமாகப் பின்னப்பட்டிருக்கிறது. பாடல்களும் சுவையாக அமைந்திருக்கின்றன. ஹ்ரிஷிகேஷ் முகர்ஜியின் டைரக்ஷனைப் பாராட்ட வேண்டும்.







காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 5

ஊர் சிரித்தது!



மேடை ஏறிப் பிரசங்கம் புரிவதை ஒரு கலையாகப் பயின்று அதில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார் தீன தயாளு. ஆரம்பத்தில் சற்று நேரம் 'மைக்' கம்பியை இலேசாகப் பற்றிக் கொண்டே மெல்லப் பேசுவார் அவர். சட்டென்று குரலின் தன்மை மாறும். அழுத்தம் திருத்தமாகச் சொற்கள் வெளிப்படும். கரத்தைத் தலைக்கு மேல் உயர்த்துவதும், உதறுவது போல் அதனைத் தாழ்த்துவதும், மேஜையை ஒரு கருத்துக்கு முக்கியத்துவம் தரவேண்டிய சரியான தருணத்தில் குத்துவதுமாக அவர் சொற்பொழிவாற்றுவார். அடுத்தாற்போல் ஏளனத் தொனி கேட்கும், அவர் பேச்சில். நெளிவு சுளிவுகளுடன் வார்த்தைகள் விளையாடும். அதற்கேற்ப அவர் தேகமும் நெளியும், வளையும். எந்த இடத்தில் நிதானிக்க வேண்டும், எங்கே கேட்பவர்கள் சிந்திக்கவும், தாம் கூறுவதை அர்த்தமாக்கிக் கொள்ளவும் நேரம் கொடாது சொற்களைக் கொட்டிக் குவிக்க வேண்டும்; எந்தச் சமயத்தில் சொற்பொழிவைச் சில கணங்களுக்கு நிறுத்திவைத்துக் கரகோஷம் உருவாக அவகாசம் அளிக்க வேண்டும் என்பதெல்லாம் அவருக்கு நிரம்பவும் 'அத்துப் படி'யாகிப்போன விஷயங்கள்.

பொது வாழ்வில் அடியெடுத்து வைத்த அந்த ஆரம்ப நாட்களில் தினந்தோறும் பல மணி நேரங்களை இந்தச்



சொற்பொழிவுப் பயிற்சிக்காக அவர் செலவிட்டிருக்கிறார். இன்று பொதுக் கூட்டத்துக்கு வரு முன்னரும் எதை எப்படி எந்தவிதமாக மக்கள் முன் சமர்ப்பித்தால் அவர்கள் அறிவுக்கு அதிக வேலை தராமல் பல்வேறு உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பித் தம்மிடம் அவர்களைக் கவர்ந்திழுக்க முடியும் என்பதனைத் தீவிரமாக ஆலோசித்துக்கொண்டுதான் வந்திருந்தார். இருப்பினும் அத்தனையும், அவர் மேடை ஏறியதும் அவருக்கு இயல்பாகக் கைவந்துவிடுகிற காரியம் என்ற பிரமை ஏற்படுகிற மாதிரியாகச் சொற்பொழிவு அமைந்துவிடச் செய்தார். ஏதோ ஓர் அசாதாரணமான மாயா ஜால சக்தியை அவர் பெற்றிருப்பதன் விளைவாக மைக் எதிரே வந்து நின்றதும் தங்கு தடையின்றித் தடுமாற்றமின்றி அனாயாசமாக அவர் பேசுவது சாத்தியமாயிருக்கிறதோ என்று ஆச்சரியப்படத் தோன்றும். கணீரென்ற குரலின் ஏற்றத் தாழ்வுகளும் குழைவு சுழிவுகளும் கேட்பவர்களுக்கு ஒரு மயக்கத்தையே உண்டுபண்ணும். ஏன், தீனதயாளு தாமே தமது குரலில் மயங்கி ஈடுபடுவதுண்டு. அவருக்குத் தமது குரலின் மீது காதல்; விநோதமான காதல் அது.

வாட்டசாட்டமான அவரது தோற்றமும் சச்சிதமான ஆடை அணிகளில் அவர் காட்டிய ஆர்வமும் அகன்ற மூக்குக் கண்ணாடி 'பிரே'மும் மேலுதட்டின் பெரும் பகுதியை மறைத்திருந்த மீசையை அதிக நீளமாக வளர விடாது ஒழுங்காகக் கத்தரித்து விடுவதில் அவர் எடுத்துக் கொண்ட சிரத்தையும் வெளிப் பார்வைக்கு அவர் மதிப்பை உயர்த்தின. சதைப் பற்று மிகுந்த அவரது முகம் பாவ பூர்வமாக அவர் பேச ஏற்றதாக அமைந்திருந்தது.

"தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டியதுதான். ஆனால் அதை எப்படிச் செய்ய வேண்டும்? மாற்றுக் கருத்துக்களை எடுத்துக் கூறு; கேட்கிறேன்! எங்கள் கொள்கைகளில் உள்ள தவறுகளை இடித்துக் காட்டு; உணர்கிறேன்! மக்கள் முன்னிலையில் இரு தரப்பு வாதங்களையும் வைப்போம்; தீர்ப்புக் கூற வேண்டியவர்கள் அவர்கள்! அதை விட்டு....."

நறுக்குத் தெறித்தாற்போல் சொற்களை உதிர்த்து அடித்துப் பேசிக் கொண்டிருந்த தினதயாளு சற்று இழுத்தாற்போல் கடைசி வார்த்தையைக் கூறி நிதானித்து ஏளனத் தொனிக்குத் தாவினார். கரங்கள் அபிநயம் பிடித்தன.

"...சர்க்கஸ் கோமாளிக்குப் போட்டியாக நாங்கள் இங்கே பொம்மலாட்டம் நடத்திக் காண்பிப்பதா? யானைச் சின்னமென்றால் சர்க்கஸ் யானையைக் கொணருவார்கள்; புலிச் சின்னமென்றால், புலி வேஷம் போட்டு ஆடுவார்கள்! அதற்குப் போட்டியாக நான் கரகம் ஆட்டக்காரர்களைத் தருவிப்பதா? அடுத்தாற்போல் கோலி விளையாடலாம் வா! என்றுகூட என்னை அழைப்பார்கள்!" வியப்புடன் தலையாட்டினார் தினதயாளு.

கேட்டவர்களின் தலைகளும் அவர்களை அறியாமல் ஆடின. கூடவே குபீரென்ற சிரிப்பொலியும் எழுந்தது.

தங்கப்பனுக்கு வெகு நாட்களுக்கு முன் பார்த்த ஒரு நாடகம் ஞாபகத்துக்கு வந்தது. அதில் ராஜபார்ட், முதல் ஸ்திரீபார்ட், 'காமெடியன்' போன்ற பல வேஷதாரிகள் உண்டு. ஒவ்வொருவரும் அந்தந்த நாடகப் பாத்திரத்துக்கு ஏற்றாற்போல் பேசி நடிப்பார்கள். ஆனால் இங்கே மேடைப் பிரசங்கம் புரியும் தினதயாளுவோ பல வேஷங்களையும் தாமே ஏற்றுக் கொண்டவர் போல் பேசுகிறார். ஒரு கணம் ராஜபார்ட்டாகத் தோன்றுபவர், அடுத்தாற்போல் விதூஷகனாக மாறுகிறார்!

இதற்குள் தினதயாளுவின் குரல் உருக்கம் மிகுந்ததாக மாறி ஒலித்தது.

"அன்பர்களே! தேர்தல் என்பது என்ன? குழந்தைத்தனமான விளையாட்டா? யானை ஊர்வலமும் விவரமறியாத சிறுவனின் டப்பாப் பாட்டும் சர்க்கஸ் கோமாளியும்தான் இந்த நாட்டின் எதிர்கால அரசியல் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டுமென்றால் அதை விட வெட்கக்கேடு வேறு என்ன இருக்க முடியும்?" திடீரென்று ஆத்திரம் பற்றிக்கொள்ளப் பொரிந்து தள்ளினார் தினதயாளு: "வாக்காளர்களாகிய உங்களுடைய அறிவாற்றலை அவமானப்படுத்துவதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி தேவை?" படீரென்று மேஜையை அறைந்தவர் சோகத்துடன் பேசினார்: "நான் உண்மையிலேயே மிகவும் விசனிக்கிறேன்! விளையாட்டுத்தனமாக வீசி எறியத் தக்கதல்ல உங்கள் ஓட்டு! அது விலைமதிப்பற்றது; சீரிய முறையில் நீங்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்!


"இன்று காலை யானை மீது அமர்ந்து பாடிய அந்தச் சிறுவனை எனக்குத் தெரியும். அவன் தகப்பனார் நடத்திய கள்ளுக் கடைகள் முன் மறியல் நடத்திப் பட்ட தடியடிகளின் தழும்புகள் இன்றும் என் நெஞ்சிலும் தோளிலும் நிலைபெற்று நின்று காந்தியத் தத்துவங்களைச் சதா நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன." தினதயாளு வலது புறத் தோளின் மேல் புறத்தை மெல்ல அழுத்தி விட்டுக் கொண்டார். "இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் கூடக் காயம் முழுமையாக ஆறாமல் உள்ளுக்குள்ளேயே சில சமயங்களில் வேதனை அளிக்கும்போதெல்லாம் நான் ஆத்ம பரிசோதனையில் ஆழ்ந்து விடுவேன். அத்தகைய எனக்கு எதிராக வோட்டுப் போடுமாறு பாடத்தான், தெரிந்தோ தெரியாமலோ கள்ளுக்கடைக் கண்ணுச்சாமியின் மகனை அனுப்பி வைத்தார்கள்! ரொம்பப் பொருத்தமான காரியம்தான். நான் விரும்பி அதனை வரவேற்கிறேன்!"

பரிகாசத் தொனிக்குப் பாய்ந்தார் தினதயாளு: "அதே சிறுவனைப் பள்ளிக்கூடத்தில் அவனுடைய உபாத்தியாயர் வினவினார். 'ஏண்டா யானைப் பெட்டியை நல்லாப் பார்த்து வோட்டுப் போடுன்னு டப்பாப் பாட்டுப் பாடினியே, அதன் அர்த்தம் என்ன என்று உனக்குத் தெரியுமா?' என்றுகேட்டார்.

வசந்தத்தின்
புதுமலர்ச்சி
மென்வாடையின்
குளிர்ச்சி...

லக்மே டால்க் பூசிக்கொள்வதால் நாள் பூராவும் புது மலர்ச்சி கிட்டுகிறது. அதன் நறுமணம் நீடித்துக் கமழட்டும். மிருதுவான அதன் அரவணைப்பின்மூலம் நீங்கள் பெறும் குளுமையும், புத்துணர்ச்சியும் நீங்கள் அனுபவித்தறியாப் புதுமை. லேவண்டர், நீர்வாண், ஸாண்டல்வுட், அப்ஸரா, வெட்டிவர் என்று பல வாசனைகள் உள்ளன — நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள.

லக்மே
டால்க்



''அதற்கு அந்தப் பையன் என்ன பதில் சொன்னான் தெரியுமா? அன்பர்களே! உங்களால் ஊகிக்கவே முடியாது! அவன் என்ன கூறினான்?

'' 'ஓயெஸ்! தெரியும் சார்! இப்படியெல்லாம் தேர்தலை ஆடிப் பாடிக் கொண்டாடினால் நேருஜி வருவார் ஸார்!' ''

கொல்லென்ற சிரிப்பு ஆயிரத்துக்கு மேற்பட்ட கண்டங்களிலிருந்து எழுந்தது. முதன் முறை தங்கப்பனைப் பார்த்துச் சிரித்தவர்கள் அவனுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான பள்ளி உபாத்தியாயர்கள்தான். ஆனால் இப்போது ஊரே சிரிக்கிறது! தங்கப்பன் திருதிருவென்று விழித்தான். சிரிப்பு அடங்கவில்லை. நூற்றுக் கணக்கான சிரிக்கும் முகங்கள் அவனைச் சுற்றிச் சூழ்ந்தன. பரிகாசமாகச் சிரித்தன. தங்கப்பன் திகைத்தான். சிரிப்பு அடங்கவில்லை; மேலும் அதிகரித்தது. பத்தாயிரம்; இல்லை! லட்சம்; இல்லை; உலகத்திலுள்ள கோடானுகோடி மக்கள் அனைவருமே அவனைப் பார்த்துக் கேலி செய்து சிரிக்கிறார்கள்! பேய்ச் சிரிப்பு சிரிக்கும் அந்த முகங்களிடமிருந்து தப்பி ஓட முயன்றான் தங்கப்பன். இங்கு மங்குமாக ஓடினான். எப்படி எப்படியெல்லாமோ 'விருட் விருட்' டென்று திரும்பி அந்த முகங்களை ஏய்த்துவிட்டு ஓடிச் சென்றுவிட நினைத்தான்; முடியவில்லை. அவன் எங்கு போனாலும் எத்தனை வேகமாகச் சென்றாலும் எவ்வாறே அந்தச் சிரிக்கும் முகங்களும் விடாமல் பின் தொடர்ந்து வந்தன. எள்ளி நகையாடியபடியே இருந்தன. கல் தடுக்கிவிடப் புல்வெளியில் புரண்டு எழுந்தான் தங்கப்பன். பீதி அவனைப் பற்றிக் கொண்டது. திக்குத் திசை தெரியாமல் பலர் மீது முட்டி மோதிக் கொண்டான். அத்தனை பேருடைய முகங்களும் சிரித்தன. அவனுக்கு வழி விட மறுத்து நெருக்கின. தங்கப்பனுக்கு மூச்சு முட்டியது. சட்டென்று ஓர் உருவம் தன் கரத்தை நீட்டி அவன் கையைப் பற்றித் தன்னிடம் இழுத்தது. சிரித்துக்கொண்டே அவன் முகத்தை உற்றுப் பார்த்தது. அதைக் காணச் சகியாமல் தங்கப்பன் தன் கண்களை இறுக மூடிக்கொண்டு தன்னை விடுவித்துக் கொள்ளத் திமிறினான். போராட்டம் பலனளிக்கவில்லை. அந்த உருவம் அவனது இரு கன்னங்களிலும் தன் உள்ளங்கைகளால் சடசடவென்று தட்டிக் கொண்டே அவனைக் கேலி செய்தது. ''அடேய், தங்கப்பா! அசடே, தங்கப்பா!'' என்று சொல்லிச் சொல்லி நகைத்தது. திக்கு முக்காடிய தங்கப்பனுக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. அப்படிப் பிளக்காதிருக்க வேணுமானால் உள்ளுக்குள்ளே குமுறிக் குமுறிப் பெரிதாக வளர்ந்துவரும் அந்த ஏதோ ஒன்றை வாய் வழியே வெளியே கொட்டிவிட வேண்டியதுதான்.

'ஹோ'வென்று பெரிதாகக் கதறி அழுதும் மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்தும் துக்கத்தைக் கொட்டித் தீர்த்தான் தங்கப்பன்.

அவன் கன்னங்களைத் தட்டிய கரங்கள் இப்போது தோள்களைப் பற்றிக் குலுக்கின. அவன் அழுகை அடங்காதது கண்டு அவனைத் தூக்கித் தன் தோளில் சாய்த்துக் கொண்டு நடந்தார் அவர். ஆதரவாக அவன் முதுகைத் தடவிக் கொடுத்தபடியே ''அழாதேடா ராஜா! ஒண்ணுமில்லே, அழாதே!'' என்று அன்புடன் கூறினார்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு தங்கப்பனின் அழுகை ஓய்ந்து அவ்வப்போது இலேசான விசும்பல் ஒலி மட்டிலும் எழுந்தது. தன் தாய் மாமன் முருகேசன்தான் தன்னைத் தூக்கிச் செல்வது என்பதை உணர்ந்தான்.

'' இதோ பார், இத்தனை பெரிய பையனைத் தூக்கிக்கிட்டுத் தெருவிலே நடந்தால் எல்லாரும் என்ன நினைப்பாங்க? கண்களைத் துடைச்சுக்க. 'ஜம்'முன்னு ராஜாவாட்டம் நடந்து வா, பார்க்கலாம்!'' என்றார் முருகேசன் அவனைக் கீழே இறக்கி விட்டு விட்டு.

சட்டை நுனியால் கண்களைக் கசக்கித் துடைத்துக் கொண்டு மெல்ல நடந்தான் தங்கப்பன்.

விளக்கு வைக்கும் நேரத்தில் வீட்டை அவர்கள் அணுகும் வரையில் இருவருமே வாய் திறந்து பேசவில்லை.

அத்தியாயம் 6

திருப்தி நிலவியது

பொதுக்கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிரிப்பு அடங்கும் வரையில் காத்திருந்த தீனதயாளு ''சிரிக்க வேண்டிய விஷயமல்ல, தோழர்களே! சிந்திக்க வேண்டிய காரியம்!'' என்று கூறி ஊர் மக்களை ஒரு

விநாடிநேரம் மலைக்க வைத்தார். அடுத்தாற்போல், ''அந்தப் பையன் சொன்னதில் தவறென்ன இருக்கிறது? ரொம்பவும் உண்மையான சரியான பதிலைத்தானே கொடுத்திருக்கிறன் தன் உபாத்தியாயருக்கு?'' என்பதாகப் புதிர்போட்டு மக்களைத் திணற அடித்தார்.

''இந்த இமாலயத் தேர்தலிலே நம் மாகாணத்தில் மட்டும் மொத்தம் பதினுலு அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. போதாக் குறைக்குச் சுயேச்சை அபேட்சகர்கள் வேறே. ஒவ்வொரு தொகுதியிலும் பத்துப் பன்னிரண்டு பேர்கள் போட்டியிடுகின்றனர். ஆகவே நமது மக்கள் யானையா, பூனையா, ஆடா மாடா, ஒட்டகமா ஓநாயா, உழைப்பவர் கட்சியா உழைக்காதவர் கட்சியா என்றெல்லாம் சிந்தித்துச் சிரமப்படப் போவதில்லை. எதிலே வோட்டுப் போட்டால் நம் நேருஜியின் கை பலப்படும் என்று அவர்களுக்குத் தெரியும்!

''சர்க்கஸ் யானையையும் டப்பாப் பாட்டையும் அவர்கள் கேட்டு அனுபவிப்பார்கள், பார்த்து ரசிப்பார்கள்! ஆனல் வோட்டுப் போடுவது என்று வரும்போது, ''நேருஜிதான் வேண்டும்; வேறுஜி வேண்டாம்!'' என்று ஆணித்தரமாகச் சொல்லி விடுவார்கள்! இதைத்தானே அந்தச் சிறுவனின் பதில் நமக்கு உணர்த்துகிறது!''



''வருஷப் பிறப்பன்றைக்கு நடப்பது வருஷம் முழுவதும் நடக்குமாமே?''
''பயப்படாதே! நாளையிலிருந்து நானே மறுபடியும் சமைக்க ஆரம்பிக்கிறேன்!''

விண்ணை முட்டுவது போல் அங்கே கரகோஷம் எழுந்தது. அந்தப் பெருங் கூட்டத்தின் ஒரு மூலையில் நின்று கேட்டுக்கொண்டிருந்த மாருதி, ''கொன்னுட்டானேய்யா! கொன்னுட்டானே'' என்று நண்பரிடம் கூறி வியந்தார்.

''என்னய்யா என்னவோ பிரமாதப் படுத்தறீங்க? இந்த மாதிரி 'ஸ்டண்டு' வேலையாலே உண்மையை மூடி மறைச்சுட முடியுமா என்ன?'' என்று எதிர்ப் பாய்ச்சல் காண்பித்தார் ஷண்முகம். ''மக்களுக்கு நன்மை செய்வதை மறந்து ஸ்தாபனப் போராட்டச் சூழ்ச்சிகளில் கவனம் செலுத்தி வருகிறர்கள் என்பதால் மனம் நொந்துதானே பிரதமர் தமது கட்சியின் காரியக்கமிட்டியிலிருந்து ராஜிநாமாச் செய்தார்?''

மாருதி தினதயாளுவின் சொற்பொழிவில் கவனமாக இருந்தார்.

''என்னய்யா நான் கேட்கிறேன், எங்கேயோ பார்த்துக்கிட்டு நிற்கிறீங்களே?'' என்றூர் ஷண்முகம்.

''ஆமாம்'' என்று தலையாட்டினர் மாருதி.

''நேருவைத் தொடர்ந்து மற்ற காரியக் கமிட்டித் தலைவர்களும் அக்ராசனரும் ராஜிநாமாச் சமர்ப்பிக்க, பிறகு அக்ராசனர் பதவியையும் பிரதமர் பதவியுடன் நேருஜி தாமே வகிக்கத் தீர்மானிச்சதாலே இப்போஎல்லாம் சரியாப்போயிடுச்சா?''

அரை குறையாக இதைக் காதில் வாங்கிக்கொண்ட மாருதி, ''ஓ! எல்லாம் கச்சிதமா முடிஞ்சு போச்சு'' என்று கூறினர்.

''ஆமா! இவர்தான் எல்லாத்தையும் பக்கத்திலே இருந்து முடிச்சு வைச்சாரு!'' என்று சூடாகப் பேசி மாருதியின் கவனத்தைத் தம்மிடம் திருப்பினர் ஷண்முகம். ''இதோ பாரு! பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும்போது யோக்கியப் பொறுப்பே முக்கியமாகக் கவனிக்கப்படும் என்று கட்சித் தலைவரும் அவருடைய தளபதிகளும் ஒன்று சேரத் திரும்பத் திரும்பக் கரடியாகக் கத்தினல் அது என்னமா இருக்குது?''

''என்னமா?''

''எங்கப்பா குதிருக்குள் இல்லை என்பது போல ஆயிற்று. அவ்வளவுதான்! கடைசியில் என்ன நடந்தது? தங்களைத்தான் மேலிடம் அபேட்சகராய் நிறுத்தி வைக்க வேணுமென்று திருநெல்வேலி ஜில்லாவில் மட்டும் எண்பத்திமூன்று பேர்கள் மனுப் போட்டாங்க. கூடவே ஒவ்வொருத்தரும் மனுப் போட்ட மத்தவங்களைப் பழித்தும் குற்றம் சாட்டியும் புகார்க் கடிதாசுகள் எழுதினுங்க. தாங்கள் அபேட்சகராகத்

தேர்ந்தெடுக்கப்பட வில்லை என்றதும் கட்சியைவிட்டு விலகிப் புதிய கட்சியைத் தொடங்கினாங்க. ஆகக் கூடி நேருஜியோட அதிர்ச்சி வைத்தியத்தினால் பலன் என்ன? கோஷ்டிப் பூசலும் ஊழலும் பொறாமையும்தானே இன்னமும் மலிந்து கிடக்குது?''

''இங்கே இவங்க அடிக்கிற கூத்துக்கு டெல்லியிலே இருக்கிற நேருஜி என்ன பண்ணுவார், சுவாமி?''

''அதையேதான் நானும் கேட்கிறேன். தலைவர் ஒருத்தர் மட்டும் நேர்மை, ஒழுக்கம், தன்னலமற்ற சேவைன்னு புலம்பிக் கிட்டிருந்தாப் போதுமாய்யா? இன்னைக்குத் தேர்தல் சமயத்திலே கட்சிக்கு ஆபத்துன்னா எல்லாரும் தலைவர் முன்னாலே கையைக் கட்டிக்கிட்டு நிப்பாங்க. காரியம் ஆனதற்கப்புறம் கட்சியே தலைவர் கழுத்து மேலே ஏறி உட்கார்ந்துக்கிடும்!– 'ஃபோர்த் ஃபாரம் நான்டிடேல்டி'லே வருதே சின்பாட் கதை! அதைப் போலத்தான்!''

''பேசி முடிச்சுட்டீங்களா?'' என்று எரிச்சலுடன் கேட்டார் மாருதி. ''இல்லே முடிச்சுட்டீங்களான்னுதான் கேட்டேன்...''

இந்தத் திமிர்த் தாக்குதலால் ஏற்பட்ட திகைப்பு முகத்தில் தாண்டவமாடத் தலையாட்டியபடியே, ''முடிச்சுட்டேன்'' என்றார் ஷண்முகம்.

''தீனதயாளுவும் பேசி முடிச்சுட்டார்; வாங்க போகலாம்!'' என்று கூறியபடியே நடந்தார் மாருதி.

ஃ ஃ ஃ

தீனதயாளுவின் பிரசங்கத்தைக் கேட்க விடாமல் மாருதிக்கு ஷண்முகம் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் மைதானத்தின் மற்றொருபுறம் மேடைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த 'சவர்லே' காரினுள் பின்புறமுள்ள ஆசனத்தில் சிறுமி உஷா எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறையும் கைதட்டல் ஆரவாரம் எழும்போதெல்லாம் அவளும் காரின் ஸ்பிரிங் வைத்த 'ஸீட்'டில் உட்கார்ந்தபடியே எம்பி எம்பிக் குதித்துத் தன் சின்னஞ்சிறு உள்ளங் கைகளை ஒன்று சேரக் கொட்டி மகிழ்வாள். கரகோஷ ஒலி அடங்கியதும் மறுபடியும் ஸீட்டில் படுத்துக்கொள்வாள். கழுத்தில் தொங்கிய தங்கச் சங்கிலியை வாய் மென்று கொண்டிருக்கும். மழமழப்பான உயர்ந்த தோலினாலான காரின் ஆசனத்தை விரல்கள் தடவித் தரும். தரமான ஸ்பிரிங்குகள் அவள் உடலைத் தளுக்காகத் தாங்குகிற விதமும் அந்த ஆசனத்தின் தொடுவதற்கு இனிமையான வழுவழுப்பான தன்மையும் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தன.

டிரைவர் காரின் பின்புறம் புல் தரையில் குந்தியபடி அமர்ந்து பீடி பிடித்துக் கொண்டிருந்தான். உஷாவின் அத்தை சற்றுத் தொலைவில் வருவதைக் கவனித்ததும்தான் அவன் பீடியைக் கிள்ளி அணைத்து விட்டுச் சரேலென்று எழுந்து நின்றான்.

மகேசுவரி சுவாதீனமாகக் காரின் பின் கதவைத் திறந்துவிட்டு ஏறிக் கொண்டாள். கையிலிருந்த வெள்ளிப் பேலாவினை மூடியிருந்த வெள்ளித் தட்டை அகற்றினாள். பிசைந்து கொண்டு வந்திருந்த பால் சாதத்தை உஷாவுக்கு ஊட்ட ஆரம்பித்தாள். ''மீட்டிங்கு மீட்டிங்குன்னு அடிச்சுக் கிட்டியே, என்ன புரிஞ்சுது உனக்கு? பசி நேரத்துக்குச் சாப்பிடக் கூட இல்லாமே! இன்னும் பத்து நிமிஷமானால் தூங்கி வழியப் போறே'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டே ஒவ்வொரு வாயாக ஊட்டினாள்.

சாப்பிட்டானதும் கூஜா நீரில் தன் கையையும் உஷாவின் வாயையும் மகேசுவரி கழுவி முடிப்பதற்கும் தீனதயாளு காரருகே வந்து சேருவதற்கும் சரியாக இருந்தது. மலர் மாலைகளை ஓர் ஊழியன் கொண்டு வந்து கொடுத்தான். உஷா ''எனக்கு மாலை!'' என்று அதைக் கேட்டு வாங்கிப் போட்டுக்கொண்டாள். அண்ணனும் தங்கையும் கைதட்டி அவளை உற்சாகப்படுத்தினார்கள். தலைவர் காரின் முன்புறம் அமர்ந்தவாறே கைகூப்பி வணக்கம் கூற வாகனம் கிளம்பி நகர்ந்தது.

''அப்பா! காலம்பற யானைச் சவாரி செய்தானே, அந்தப் பையன் இங்கேயும் அங்கேயுமா ஓடி அலைஞ்சுக்கிட்டிருந்தான். அதுக்குள்ளே ஒரு மாமா வந்து அவன் கன்னத்திலே 'பட் பட்'டுன்னு நாலு அடி வைச்சுத் தூக்கித் தோளிலே போட்டுக் கொண்டு போயிட்டாங்க, பாவம்!''

''கண்ட கண்ட பொறுக்கிப் பயலுகளைப் பற்றி உனக்கு என்னடி கவலை, உஷா!'' என்றாள் மகேசுவரி.

''அப்படி ஒரேயடியாக அலட்சியமாகப் பேசிவிடாதே! இன்னைக்கு எனக்குப் பெரிய உதவி செய்திருக்கான் அவன்'' என்று கூறி எதையோ நினைத்துக்கொண்டவர் போல் சிரித்தார் தீனதயாளு. அவர் முகத்தில் நிம்மதியும் திருப்தியும் கலந்து நிலவின. **(தொடரும்)**




நீங்கள் அருந்தும் தேனீர் ஒருபோழுதும் தரத்தில் மாறுபடுவதில்லை என்பதை ப்ரூக் பாண்ட் நிச்சயப்படுத்துகின்றனர்

தேயிலைகளை ருசிகண்டு தரம் காண்பது, கலவன் செய்வது, மார்க்கெட்டில் விற்பனை செய்வது ஆகியவற்றில் 60 ஆண்டுகளுக்கு மேலான அனுபவ மூலம், நீங்கள் அருந்தும் தேனீர் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது— அதாவது நறுமணமும் சுவையும் அதில் ''இப்படித்தான் இருக்க வேண்டும்'' என்பதை ப்ரூக் பாண்ட் நன்கறிவார்கள்.

மிக சேர்த்தியான கலவன்களில் ஒன்றைத் தயாரிப்பதில், ப்ரூக் பாண்டின் தேயிலை ருசிகண்டு தரம் காண்பவர்கள் பிரதி தினம் 600 வகைகளுக்கு மேலான தேயிலைகளை பரீட்சை செய்கின்றனர். இவற்றுள் வெவ்வேறான 30 தோட்டங்களின் தேயிலைகளையோ, அதற்கு அதிகமாகவோ அவர்கள் தேர்ந்தெடுக்கலாம். இதன் மூலம், இறுதியான கலவனில் நீங்கள் விரும்பும் பிரத்தியேகமான நறுமணத்திற்கும் விசேஷமான சுவையிற்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

திறமைமிக்க கலவன் செய்தல்மட்டும் போதாது. அவற்றின் சுவையையும் நறுமணத்தையும் நன்கு அனுபவிக்க வேண்டுமானால், சிறந்த தேயிலைக் கலவன்கள் மெய்யாகவே புத்தம் புதியதாயிருக்க வேண்டும் என்பதையும் ப்ரூக் பாண்ட் அறிவார்கள். அசுத்தம் அடையாமலும் கேடுறாமலும் பாதுகாக்கின்ற காற்று உட்புகாத பாக்கெட்டுகளில் தேயிலையை அடைத்து வைப்பதே அதன் புத்தம் புதிய தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கும் ஒரே வழி.

ப்ரூக் பாண்ட் இதற்கு மேலும் செய்கின்றனர். அதாவது அவர்களது விற்பனையாளர்கள் பிரதி வாரம் 600000 கடைகளுக்கு நேரில் சென்று ப்ரூக் பாண்ட் தேயிலைகளை விநியோகம் செய்கின்றனர். உங்கள் வழக்கமான கடைகளுக்கும்தான். இதனாலேயே நீங்கள் வாங்குகின்ற ப்ரூக் பாண்ட் தேயிலை, புத்தம் புதியதில் எப்பொழுதும் உச்ச நிலையில் இருப்பதுடன்.... ஒரே இனிய சுவையையும் நறுமணத்தையும் எப்பொழுதும் தருகின்றது!



JWTBB 2408


மபத்லால் க்ரூப்
பிரின்டெட் பாப்லின்கள்
டெபிலைஸ்ட், மெபிலைஸ்ட்
அன்டு ஸ்ட்ரெச்

டேய்! பசங்களா!



பாப்பா மலர்
1
"இன்பண்டங்களைப் பார்த்தால் என் நாக்கில் நீர் ஊறுகிறதுடா!" என்றான் சுந்தர்.
"அட! சும்மா இரு. ஏரிக்கரைக் குப் போய்ச் சாப்பிடலாம்!" என் றான் சந்தர்.
2
"அடடா! பெரிதாக மழை வரும்போலிருக்கே! டேய், சுந்தர்! நீ ஓடிப் போய்க் குடையை எடுத் துக்கொண்டு வந்து விடுடா!" என்றான் சந்தர்.
3
"சரி, போகிறேன். ஆனால் நான் குடையை எடுத்துக்கொண்டு வந்த பிறகுதான் நீங்கள் சாப்பிட ஆரம்பிக்கணும்!" என்று கூறி விட்டு ஓடினான் சுந்தர்.
4
"எங்கேடா போனவனையே காணுமே? ஒரு மணி நேரம் ஆச்சே! சுந்தர் வர மாட்டானோ? நாம் சாப்பிடத் தொடங்கலாமா?" என்று சொல்லிக் கொண்டே,
5
பொட்டலத்தைப் பிரிக்க ஆரம் பித்ததுதான் தாமதம்; "டேய்! பசங்களா தின்ன ஆரம்பித்துவிட் டீர்களா?" என்று மரத்திலிருந்து கீழே குதித்தபடி கேட்டான் சுந்தர்.
6
"நீங்க இப்படிப் பண்ணுவீங் கன்னு தெரியும். அதனால்தான் நான் மரத்து மேலேயே ஒளிஞ் சிருந்து பார்த்துண்டிருந்தேன்!" என்றான் சுந்தர்! அதன் பலன்...?

சித்திரக் களஞ்சியம்



◄ "என்ன சார்? உங்க பையன் எஸ்.எஸ்.எல்.சி. படிச்சு பிறகு பி. யு. சி. படிச்சு, பி. ஏ. படிச்சு வெளியே வந்த பிறகு என்ன ஆகப்போகிறுன்?"

"கிழவனுகப் போகிறுன்!"

குழந்தை நட்சத்திரம்: நான் நடித்த படத்தை நான் பார்க்கக் கூடாதென்று ஏன் சொல்கிருய்?

அம்மா: ஏனென்ருல் அந்தப் படத்துக்கு 'ஏ' சர்டிபிகேட் கொடுக்கப் பட்டிருக்கிறது!



★



► "ஊரிலிருந்து எங்கப்பா, உங்களைப் பார்க்கணும்னு ஆசையாகக் கடிதம் போட்டாரே? என்ன பதில் எழுத?"

"கடிதம் கிடைத்தது. புலன் விசாரணை நடக்கிறது. துப்பு கிடைத்ததும் சம்மன் அனுப்பப் படும். பிறகு, கோர்ட்டில் வந்து சந்திக்கலாம் என்று எழுது."

★



என்னைக் காட்டிலும் சிறியவர்கள் என்னை வெறுக்கலாம். என்னிடம் பொருமை கொள்ளலாம். ஆனால் என்னை யாரும் வெறுக்கவும் இல்லை; என்னிடம் பொருமை கொள்ளவும் இல்லை. அதனால் நான் யாரைக்காட்டிலும் பெரியவன் அல்ல.


என்னைக் காட்டிலும் பெரியவர்கள் என்னைப் புகழவோ இகழவோ அருகதை யுள்ளவர்கள். ஆனால் என்னை யாரும் புகழவும் இல்லை; இகழவும் இல்லை. அதனால் நான் யாரைக் காட்டிலும் சிறியவன் அல்ல.

— கலீல் ஜிப்ரான்



பேசிப் பேசி, போர் அடிப்பவரிடம் பலநாள் வகையாக மாட்டிக் கொண்டவர் அவர் எதிரே மண்டியிட்டுக் கெஞ்சிக் கேட்கிருர்: தயவு செய்து நான் ஒரு நாள் பேசி நீங்க கேட்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அதற்கு ஒப்புக் கொள்வீர்களா?

ஸொஜ்ஜி. பஜ்ஜி. ஸஜ்ஜி






ஆண்டவனே!
ஆதியும் அந்தமும் அற்ற ஆண்டவனே !
அடிமுடி காண இயலாத ஆண்டவனே!
ஒரு போட்டி முளைத்து விட்டது உனக்கு!
நீ இதனை அறிவாயா?
அகிலமனைத்தும் படைத்தாய் — நீ
உள்ளும் புறமும் உணர்ந்தாய் !
உனக்கு ஒரு போட்டி முளைத்து விட்டது
உண்மை! முக்காலும் உண்மை இது
நான் சொன்னாலொழிய உனக்குப் புரியாது.
உன்னையும் மீறிய உண்மை,
சொல்கிறேன், கேள்!
புத்தம் புதிய புத்தகமொன்று
பணம் கொடுத்து வாங்கினேன் நான்
அதைப் பார்த்து விட்டான் ஆப்தநண்பன்
இரவல் கேட்டான் வாங்கினதும் வாங்காததுமாக.
யானை வாய்க் கரும்பை உவமை காட்டினேன்.
ஆதாரச் செய்யுள் பல கூறினேன்.
ஆயினும் வென்றது அவன் பிடிவாதம்
என் பேச்சு பல்போன பேச்சாயிற்று.


'புத்தகம் போனது போனதே ;
இனி எந்நாளும் திரும்பாது'
என்று நான் எண்ணியிருக்கும்வேளையிலே
அதிசயத்திலும் அதிசயமாகத் திரும்பி வந்தது.
வியப்பு அடங்கி விழி செயல்பட்டபொழுது
உன்னைக் கண்டேன் அப்புத்தகத்தில்.
ஆம், ஆதியும் அந்தமும் அற்ற உனக்கு
ஒரு போட்டியாக நின்றது அப்புத்தகம்!
ஆதியும் அந்தமும் அற்ற ஆண்டவனைக்
காண முடியாதென்பர் மாந்தர் !
ஆனால் உன்னைக் கண்டு கொண்டேன்,
ஆதியும் அந்தமும் அற்ற அந்தப் புத்தகந்தனில்.
என்னே, என் பாக்கியம் !
நான் சொன்னாலொழிய உனக்குப் புரியாது!





பிகே




ரேணுகா தன் தங்கை மாலதி வாழ்ந்ததை விவரிக்கிறாள்.
மாலதியா? அதிசயமாக இருக்கே! இங்கெல்லாம் நீ வரமாட்டாயே.
நானுக்கு வரவில்லை ரேணுகா. இவருக்காக வந்தேன். இவர்தான் குமார். மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார். இவள் என் சகோதரி ரேணுகா.
அவள் எங்கே?
3
கதை: கௌசிகன்
சித்திரம் ரமணி.
வணக்கம்
உங்கள் தங்கையைப் போல நீங்கள் எந்தக் கலையில் வல்லவர்?
கண்டிப்பாக இருப்பதே கூட ஒரு கலை தானே?
ஊச்! கலையைப் பற்றி யெல்லாம் என் அக்காவிடம் பேசப்படாது. ரொம்பக் கண்டிப்பு!
ஹாஸ்டலுக்குத் திரும்ப நேரமாகிறதென்று குமார் விடை பெற்றுச் செல்ல, சகோதரிகள் மட்டும் தனித்திருக்கிறார்கள்.
ரேணு, குமார் எப்படி?
அழகும் அறிவும் இருக்கின்றன. நீ அதிர்ஷ்டசாலிதான் மாலதி.
இல்லை ரேணுகா. நான் துரதிர்ஷ்டசாலி. குமாரை நான் அடையமுடியாதோ என்று நடுங்குகிறது என் உள்ளம். என் செய்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. நான் வேற்றுவனின் உரிமையானவள். தனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டதாக என்னைக் கொல்லவும் தயங்க மாட்டான் அந்தக் கயவன்...
அந்த மர்ம மனிதன் யார் என்பதைத்தான் சொல்லலை மாலதி.
கௌரவமானவர், யோக்யமானவர், கொள்கைகளுக்காக வாழ்பவர் என்றெல்லாம் மக்களால் மதிக்கப்படுபவன் அவன். இப்போதைக்கு உனக்கு அவ்வளவு தெரிந்தால் போதும்.


நீ அவனிடம் பயப்படும் காரணத்தையாவது நான் அறியலாமா?
என் அழகிலும் இளமையிலும் மயங்கிய அந்த ஆஷாடபூதி தன் அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி என்னிடம் உளறிவிட்டான். நான் பிறன் மனைவியாகிவிட்டால் அவைகளை அம்பலப்படுத்தி அவன் கௌரவத்தைக் குலைப்பேனோ என்ற நினைப்பில் என்னை இந்த நிலையிலேயே தன் உரிமையாக வைத்திருக்க விரும்புகிறான்...
இதுதான் மாலதியின் கதை. தான் குமாரை மணந்தால் தனக்கு ஆபத்து என்று பயந்தாள் அவள். பயந்தபடியே நடந்தும் விட்டது.
என்னை விடப் பெரிய டாக்டராக நீ வரவேண்டுமென்று நான் கண்ட கனவுகளுக்கு உன் நடத்தை நன்றாக இருக்கிறது!
அப்பா, மாலதியைப் பற்றி இவர்கள் கூறிய இத்தனை விவரங்களும் எனக்குத் தெரியாது. என் நண்பர்கள் நடத்திய நாடகமொன்றில் கதாநாயகனாக நடித்த எனக்குக் காதலியாக நடிக்க வந்தாள் இந்தப் பெண்.
நிஜ வாழ்க்கையிலும் காதலியாக்கிக் கொண்டாயாக்கும். இப்போது அவளால் கொலைப் பழியையும் ஏற்றுக் கொள்.
என்னப்பா. நீங்களே என்னைக் கொலைகாரன் என்று கூறிவிடுவீர்கள் போலிருக்கிறதே.
அது சரி குமார். நீங்கள் மாலதியின் அறைக்கு எதற்காகப் போனீர்கள்?
அடுத்த வாரம் ஒரு அமைச்சர் நாடகத்தில் கதாநாயகியாக நடிக்க அவளால் முடியுமா என்று கேட்க அவள் அறைக்குச் சென்றேன் அப்பா...
தொடரும்

இலங்கைக் கடிதம்

கொழும்பு, 7உ

இலங்கையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொதுத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. இந்நாட்டில் பார்லிமெண்டரி ஜனநாயகம் தொடர்ந்து நடைபெற வேண்டுமா, அல்லது சோவியத் ரஷ்யா, செஞ்சீனு போல் இலங்கையும் ஒரு கம்யூனிஸ்டு சர்வாதிகார நாடாக வேண்டுமா என்ற விஷயத்தில் மக்கள் சந்தேகத்துக்கு இடமின்றித் தீர்ப்பளித்து விட்டார்கள். இலங்கை மக்கள் செஞ்சீனுவை ஆதரிப்பதாக இருந்திருப்பின் இந்தியாவுக்குத் தென் திசையிலிருந்து ஒரு பெரிய புதிய அபாயம் உருவாவதாக இருக்கும். வடக்கே ஆக்கிரமிப்பு நடத்தும் சீனர்கள் தெற்கிலிருந்தும் இந்தியாவைத் தாக்க இலங்கையில் கால் ஊன்றுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள் என்பது என்னவோ மறுக்க முடியாத உண்மை. எப்படியும் இலங்கையில் கம்யூனிஸத்தின் கை ஓங்கச் செய்துவிட வேண்டுமென்பதற்காகச் சீனர்கள் படாத பாடு பட்டார்கள். இலங்கைப் பொதுத் தேர்தலை ஏதோ தங்களுடைய நாட்டில் நடைபெறும் தேர்தலைப் போல எண்ணி மக்களை வசப்படுத்தப் பெருவாரியான பணத்தை இங்கு செலவிட்டார்கள். இதற்காகச் சீனர்கள் இலங்கைக்கு ஏராளமாக வந்து மறைமுகமாகத் தேர்தலில் கலந்து கொண்டார்கள். சதி செய்வதில் உலகப் பிரசித்தி பெற்ற பல சீனத் தலைவர்கள் யாத்திரிகர்களைப் போல இலங்கைக்கு வந்திருந்தனர். ஆனால் ஜனநாயகத்திலும் சமய நம்பிக்கையிலும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம்பிக்கையுடைய இலங்கை மக்கள் சீனர்களின் முகத்தில் கரியைப் பூசி கம்யூனிஸத்தை ஆதரிக்கும் ஆளும் கட்சியைத் திட்டவட்டமாக முறியடித்து விட்டனர்.

மக்கள் அளித்த தீர்ப்பு

தேர்தலுக்குச் சமர்ப்பிக்கப் பட்ட பிரச்னைகள் எவ்வளவு தெளிவாக இருந்தனவோ, அதே போல் மக்கள் அளித்த தீர்ப்பும் மிகத் தெளிவாக இருந்தது குறிப்பிடத் தக்கதாக இருந்தது. எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் சம்பூர்ணமான மெஜாரிட்டி கிடைக்கவில்லை என்பது உண்மையே. என்றாலும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தை ஆதரித்து நின்ற கட்சிகளுக்கு அதிகப்படியான ஸ்தானங்கள் கிடைத்தன. ஆளும் கட்சியின் கோட்பாடுகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள். 1960ம் வருடத்திய பொதுத் தேர்தலில் 75 ஸ்தானங்களைப் பெற்றிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இம்முறை 41 ஸ்தானங்கள் மட்டுமே கிடைத்தன. அதன் சர்வாதிகாரக் கொள்கைக்குப் பக்கபலமாக இருந்த லங்கா சமசமாஜக் கட்சிக்குப் பத்து ஸ்தானங்கள் கிடைத்தன. கம்யூனிஸத்தை மூழு மூச்சுடன் எதிர்த்து வந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு 66 ஸ்தானங்களும் ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்டுக் கட்சிக்கு ஐந்து ஸ்தானங்களும் தமிழரசுக் கட்சிக்கு 14 ஸ்தானங்களும் கிடைத்தன. கம்யூனிஸ்டு கட்சி நான்கே நான்கு இடங்களில்தான் வெற்றி பெற்றது. சுருக்கமாகச் சொல்லப் போனால் கம்யூனிஸ சித்தாந்தத்தைக் கடைப்பிடித்து வந்த கட்சிகளுக்கு 151 அங்கத்தினர்களைக்

வெற்றியைக் கொண்டாடும் அன்பர்களால் சூழப்பட்ட டட்லி சேனநாயகா



கம்யூனிஸத்தின் தோல்வி



கொண்ட பார்லிமெண்டில் ஆகமொத்தம் 55 ஸ்தானங்கள் மட்டுமே கிடைக்க முடிந்தது. மற்ற ஸ்தானங்களெல்லாம் கம்யூனிஸத்தை எதிர்க்கும் கட்சிகளுக்கே கிடைத்தன.

சம்பூரண மெஜாரிட்டி எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் கிடைக்காதபடியினால் தேர்தல் நடந்து முடிந்த 48 மணி நேரம் வரையில் நாட்டிலே ஒரு நெருக்கடியான நிலைமை உருவாகியிருந்தது. நியாயமாகப் பார்க்கப் போனால் ஸ்ரீமதி பண்டாரநாயகா தலைமையில் இருந்த சர்க்கார் தேர்தலில் தோல்வி கண்டவுடனேயே தனது பதவியை ராஜினமாச் செய்து புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் பொறுப்பை கவர்னர் ஜெனரலிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் இந்தக் கடைசி நேரத்தில்கூட ஸ்ரீமதி பண்டாரநாயகாவின் ஆசை அவரை விட வில்லை. எப்படியும் இதர கட்சி அங்கத்தினர்கள் சிலரை ஆசை காட்டி இழுத்து ஆட்சிபீடத்தில் தொடர்ந்து இருக்க முடியுமென்று அவர் நம்பினர். எப்படியாவது தமிழரசுக் கட்சியை வளைத்துப் போட அவர் படாத பாடுபட்டார்.

இதற்கிடையில் கம்யூனிஸ்டுகள் நாட்டில் சிறு சிறு குழப்பங்களை விளைவிக்கத் தொடங்கினர். எந்த நிமிடமும் எதுவும் ஏற்படலாமென்ற நெருக்கடியான சூழ்நிலை மளமளவென்று உருவாகியது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சி தனது ஆதரவைத் திரு டட்லி சேனநாயகா தலைமையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளித்து அவர் தலைமையில் புதிய அரசாங்கம் ஏற்படுவதைச் சாத்தியமாக்கியது. தக்க தருணத்தில் தமிழரசுக்கட்சி இவ்விதம் விவேகத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் நடந்து கொண்டிராவிட்டால் நாட்டில் என்ன நடந்திருக்கும் என்பதை யாரும் சொல்ல முடியாது. பொதுத் தேர்தல் நடந்ததே பயனற்றுப் போய் ஒரு கம்யூனிஸ சர்வாதிகார ஆட்சி பலவந்தமாகத் திணிக்கப்பட்டிருந்தால் ஆச்சரியமில்லை. தமிழரசுக் கட்சியின் ராஜதந்திரம் நாட்டைக் காப்பாற்றியதென்றால் அதில் சிறிதும் மிகையாகாது.

இம்முயற்சியில் தீவிரமான ஈடுபாடு கொண்டு ஒரு நியாயமான உடன்பாடு ஏற்படப் பெரிதும் உதவியவர் தமிழரசுக் கட்சியின் பிரபல தலைவர்களில் ஒருவரான திரு எம். திருச்செல்வம். சட்டமேதை. சொலிஸிட்டர் ஜெனரலாகப் பதவி பெற்று ஓய்வு பெற்றவர். அன்பும் பண்பும் மிகுந்தவர். தமிழரசுக் கட்சியிடமும் தமிழரசுக் கட்சியின் ஒப்பற்ற தலைவரான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடமும் மிகுந்த செல்வாக்குள்ளவர். அவருடைய இல்லத்தில் தான் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இப்பேச்சுக்களில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படத் திரு திருச்செல்வம் ஆற்றிய பணிகள் வருங்காலச் சரித்திரத்தில் இடம் பெற வேண்டியவை. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் இருந்த சகல பிரச்னைகளுக்கும் ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்பட்டுத் தமிழரசுக் கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதாக ஒரு கடிதமும் கொடுத்தனர். இந்தக் கடிதத்தைத் திரு டட்லி சேனநாயகா கவர்னர் ஜெனரலிடம் கொடுத்ததும், புதிய அரசாங்கத்தை நிறுவும் பொறுப்பைத் திரு டட்லி சேனநாயகாவிடம் ஒப்படைப்பதைத் தவிர கவர்னர் ஜெனரலுக்கு வேறு வழியில்லை.

இந்தக் கடைசி நேரத்தில்கூட ஸ்ரீமதி பண்டாரநாயகா ராஜினமாச் செய்யத் தயங்கினர். அவர் இன்னும் சில மணி நேரம் தயக்கம் காட்டினல் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் கவர்னர் ஜெனரலுக்கு ஏற்பட்டிருக்கும். நல்லவேளையாக அவர் தமது நிலைமையை உணர்ந்து ராஜினமாச் செய்தார்.

திரு டட்லி சேனநாயகா இலங்கையின் சரித்திரத்திலேயே முதன் முதலாக ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவியிருப்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக ஜனநாயகக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் அவர் தமது மந்திரி சபையில் இடமளித்திருக்கிறர். ஸ்ரீமதி பண்டாரநாயகாவிடமிருந்து விலகிப் புதிய கட்சியை ஆரம்பித்த திரு ஸி. பி. டி. சில்வா அவரது பழைய பதவியான நில, மின்சார, நீர்ப்பாசன இலாகா மந்திரி பதவியைப் பெற்றிருக்கிறர். முன்னாள் பிரதம மந்திரிகளில் ஒருவரான திரு விஜயானந்த தஹநாயகா உள்நாட்டு மந்திரியாகப் பதவி ஏற்றிருக்கிறர். திரு எம். திருச்செல்வம் ஸ்தல ஸ்தாபன மந்திரியாகியிருக்கிறர். கொழும்பு நகர மேயர் திரு வி. ஏ. சுகததாஸா தேசிய சேவைகள் மந்திரியாகியிருக்கிறர். பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் மந்திரி சபையில் அங்கம் வகிப்பதினால் இதை உண்மையான தேசிய அரசாங்கம் என்று வர்ணிப்பது பொருத்தமாகும்.

தமிழரசுக் கட்சி மட்டும் நேரடியாகப் பதவி வகிக்கவில்லை. அவர்கள் எந்த மந்திரி பதவியைக் கேட்டாலும் அதை அளிக்கப் பிரதம மந்திரி தயாராக இருந்தார். ஆனல் தங்களுடைய இலட்சியம் நிறைவேறும் வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் யாரும் பதவி

வகிக்கக் கூடாது என்று தமிழரசுக் கட்சி ஒரு தீர்மானத்தை ஏற்கனவே நிறைவேற்றியிருக்கிறது. இந்த நிலைமையில் தமிழரசுக் கட்சியினர் பிரதம மந்திரிக்குப் பூரண ஆதரவு அளித்த பொழுதிலும் அவருடைய மந்திரி சபையில் அங்கம் வகிக்கமுடியவில்லை. ஆகவே பார்லிமெண்டுத் தேர்தலில் போட்டியிடாத திரு எம். திருச்செல்வம் மந்திரியாக நியமிக்கப்படுவதற்குத் தமிழரசுக்கட்சி அனுமதித்தது. கூடிய சீக்கிரம் திரு திருச்செல்வம் செனட் சபையின் நியமன அங்கத்தினராக நியமிக்கப்படுவார். செனட்டில் காலஞ்சென்ற திரு நடேச பிள்ளையின் ஸ்தானம் காலியாக இருக்கிறது. அந்த ஸ்தானத்துக்குத் திரு திருச்செல்வம் நியமிக்கப்படுவார் என்று நம்பப்படுகிறது.

ஜனப் பிரதிநிதி சபையில் ஆறு நியமன ஸ்தானங்கள் உண்டு. அவற்றில் ஒன்றுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான திரு எஸ். தொண்டைமான் நியமிக்கப்படலாம். இத் தேர்தலில் அவர் திரு டட்லி சேனநாயகாவின் கட்சியைப் பகிரங்கமாக ஆதரித்தது குறிப்பிடத்தக்கது.

உண்மையான பார்லிமெண்டு முறை ஜனநாயக அரசாட்சியில் பிரதம மந்திரி பதவி வகிப்பவர் எத்தன்மையராக இருக்க வேண்டும் என்பதற்கு இலங்கைப் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவை இலக்கணமாகச் சொல்ல வேண்டும். ஜனநாயகப் பண்பாட்டில் பிறந்து, அதிலேயே வளர்ந்து, ஊறித் திளைத்தவர். அரசியலில் நேர்மை தவறாத அபூர்வப் பிறவி. தகப்பனார் டான் ஸ்டீபன் சேனநாயகா ஒரு முறை பிரதமராகப் பணியாற்றினார். தனயன் டட்லி மூன்று முறை பிரதம மந்திரி. 1947லேயே விவசாய மந்திரியாக அனுபவம் பெற்றுப் பழகினதால் 1952ல் தகப்பனார் காலமான போது தனயனையே அப்பதவிக்கு உயர்த்தினர் மந்திரி சபையினர். ஆனால் தமது சொந்த உரிமையிலேயே இப்பதவியை வகிக்க வேண்டும் என்று விரைவிலேயே புதிதாகப் பொதுத் தேர்தல் நடத்தி வெற்றி பெற்று மக்கள் பேராதரவுடன் 1953ல் பிரதமராக ஆனார். பின்னர் உடல் நலம் குன்றிய காரணத்தால் பதவியை விட்டு விலகித் தமக்குப் பதவி மோகம் துளிக்கூட இல்லை என்பதை நிரூபித்துக் காட்டினார். பின்னர் தேர்தலில் வெற்றி பெற்றுக் கடந்த ஒன்பதாண்டுகளில் எதிர்க்கட்சியிலே அமைதியாக அமர்ந்து சிறந்த தொண்டாற்றினார். அரசாட்சி கம்யூனிஸத்தை நோக்கிச் செல்லும் வேகத்தைக் கண்டு மனம் கலங்கினார். இந்தப் போக்கைத் திருப்பி ஜனநாயகத்தை நிலைக்கச் செய்யும் வாய்ப்பு அவருக்கு இப்போது கிடைத்திருப்பது இலங்கையின் அதிர்ஷ்டம். சிறு வயதிலிருந்தே அரசியல் வாடை பட்டு வளர்ந்தவரானாலும் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்விமான் என்று புகழடைந்ததுடன், விளையாட்டு மைதானங்களில் புகழுடன் விளங்கியவர். கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ், குத்துச் சண்டை முதலிய பல விளையாட்டுக்களில் பரிசுகள்கூட பெற்றிருக்கிறார். இவருடைய போலோ விளையாட்டைப் பற்றியும் மக்கள் அடிக்கடி குறிப்பிடுவது உண்டு.

ஒரு முறை இவருக்கு இங்கிலாந்திலுள்ள பிரிவிகவுன்ஸில் மன்றத்து உறுப்பினராக இருக்க அழைப்பும் வந்தது. மற்றவர்கள் விரும்பி ஆவலுடன் ஏற்கும் இப்பதவி தமக்கு வேண்டாம் என்று உதறித் தள்ளியவர் என்பதைக் கேட்டால் இவரிடம் நாம் வைத்துள்ள மதிப்பு பன்மடங்காக உயரவே செய்யும். புத்தமத சம்பிரதாயங்களில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட பிரம்மச்சாரி.

பொருளாதாரத் துறையில் ஜனநாயகக் கருத்தையும், பரந்த மனப்பான்மையையும் பிரதிபலிக்கும் கொள்கைகளைக் கொண்டவர். நிர்வாகத் திறமையும் ஆற்றலும் நிரம்பியவர். எதையும் தேசிய மயமாக்க வேண்டும் என்னும் கொள்கையை இவர் ஆதரிப்பதில்லை.

பண்டித நேரு இறந்த போது, "சர்வாதிகாரியாகவே அரசு நடத்தக் கூடிய சூழ்நிலையும் அமைப்புக்களும் இருந்தாலும், ஜனநாயகத்தை விட்டுக் கொடுக்காது காப்பாற்றியவர்" என்று சொன்னார். இப்பாராட்டு அதனை வழங்கியவருக்கே கூட முற்றிலும் பொருந்தும். அவருடைய பதவிக்காலத்தில் இலங்காபுரியை வாட்டிக்கொண்டிருக்கும் பல்வேறு பிரச்னைகளும் சுமுகமாகத் தீர்ந்து ஜனநாயகம் தழைக்கும் என்று எதிர்பார்க்கலாம். **- ரஜனி**

[டட்லி சேனநாயகாவின் படத்தை இவ்விதம் மேலட்டையில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். — ஆசிரியர்.]



இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்





இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிகம்

சித்திரை பிறந்து விட்டது. இனி கல்யாண சீசன்தான். இன்றைய நாகரிகத்துக்கேற்பப் பெண்கள் பட்டுப் புடவைகள் அணிந்து தங்கள் கரம் பற்றும் பாக்கியவானைப் பற்றிக் கண்டுள்ள பொன்னான கனவுகள் நனவாகும் காலம். இதோ இன்றைய நாகரிகத்துக்கேற்ப இந்த நாரீமணி பூவேலை செய்த ஜரிகைக் கரை பனாரஸ் பட்டுப் புடவை உடுத்தியுள்ளாள். அதில் உள்ள சின்னப் பூக்கள் அதன் அழகுக்கு அழகூட்டுகின்றன. இந்தப் புடவைக்கேற்ற முறையில் படகுக் கழுத்துள்ள ஜாக்கெட் (Boat Neck) அணிந்திருக்கிறாள். ஜாக்கெட்டுக்கும் புடவைக்கும் ஒரே துணிதான்! ஒரே கல்லில் இரண்டு மாங்காய் கதை!

இந்தப் பெண்மணி இந்தப் புடவையை உடுத்துவதில் வழக்கப்படி ஒரு சுற்றுச் சுற்றாமல் இரண்டு சுற்றுகள் சுற்றிக் கட்டியிருப்பது நவீன மோஸ்தர். பம்பாய் போன்ற நகரங்களில் இந்த நவீன பாணி பரவியிருக்கிறதாம்! - புடவை அணிந்திருப்பவர்: **நிர்மலா தேவி**

படம்: **சந்தாமியான்.**

காடக முத்தரையன்



சூத்தியா, புத்தியா? எது அவசியம்? வெறும் சத்தியை மட்டும் வைத்துக் கொண்டு எதையும் சாதித்துவிட முடியாது. புத்தியின் உதவி இருந்தால்தான் எதிலும் வெற்றி அடைய முடியும். இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு இந்நாடகம் சரித்திர சம்பந்தம் பெற்று உருவாகியிருக்கிறது.

கி.பி. ஏழாம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் பல்லவ நாடு அரசு உரிமைப் பிரச்னையில் குழம்பித் தவித்தபோது, பல்லவ வம்சத்தைச் சேர்ந்த இரண்டாம் நந்தி வர்மனை அரியணை ஏற்றி அவனுக்கு உறுதுணையாக நின்றவன் காடக முத்தரையன். காஞ்சி மாநகரம் சளுக்கியன் கையில் விழுவதற்குக் காரணமாயிருந்தவன் காடக முத்தரையன்; பிறகு அதே காஞ்சியைப் பல்லவனுக்குத் திருப்பித் தந்ததும் அவன்தான். அவனுடைய சூழ்ச்சித் திறன்தான் நாடகத்தின் அடிப்படை.

மனோகர் காடக முத்தரையன் பாகத்தை ஏற்று அபாரமாக நடிக்கிறார். அரண்மனையின் ரகசியச் சுரங்கப் பாதை தத்ரூபமாக இருக்கிறது.

மூலக் கதை பொன்மலை இரா. பாண்டுரங்கனுடையது. நாடக ஆக்கம், வசனம் மதுரை திருமாறனுடையது.

காடக முத்தரையன் நல்லவனா, வில்லனா என்பதைக் கடைசிவரை நிர்ணயிக்க முடியாமல் 'சஸ்பென்ஸி'ல் வைத்திருப்பது நாடகத்தில் நல்லதோர் உத்தி.

திருமங்கையாழ்வாரை மேடை ஏற்றி அரசியல் சூழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்ளச் செய்திருக்க வேண்டாமோ எனத் தோன்றுகிறது. மற்றபடி நாடக நடிகர்கள் அனைவரும் மிகத் திறமையாக நடித்திருக்கின்றனர். மிகவும் விறுவிறுப்பான நாடகம்.



நெஞ்சுக்கு நீதி

ஆஸ்பத்திரி வார்டு, கட்டில்கள், நோயாளிகள், டாக்டர்கள், ஒரு நர்ஸ், ஒரு சிறுமி—அவள் தாய்—ஆகியவர்களை வைத்துக்கொண்டு ஒரு நாடகத்தை ஓட்டியிருக்கிறார்கள் அமெச்சூர் நடிகர்கள் குழுவினர்.

இந்நாடகத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கைதிதான் பிரதான பாத்திரம். அவனையும் நாம் ஆஸ்பத்திரி நோயாளியாகத்தான் சந்திக்கிறோம். தன் மனைவி வேறொருவனோடு ஆனந்தமாக இருப்பதைப் பார்த்த கணவன் ஆத்திரத்தில் அவர்கள் இருவரையும் கொன்றுவிடுகிறான். கொலைகாரனாக நடித்த டி. எஸ். சேஷாத்திரி—தம் சிறந்த நடிப்பினால் அனைவரையும் உருக்கிவிட்டார்.



அடுத்தபடியாக இந்த நாடகத்தில் நடிப்பில் உயர்ந்து நின்றவர், புகழ்பெற்ற சேவா ஸ்டேஜ் நடிகை சாந்தினி. கொலையுண்டவனின் மனைவியாகத் தோன்றி அற்புதமாக நடித்தார். கண்ணீர் விட்டு அவர் நடித்தது பார்ப்பவர்களைக் கண் கலங்க வைத்தது.

நாடகத்தில் உருக்கத்தோடு கவர்ச்சியும் தேவை என்ற காரணத்தினால் சினிமாப் புகழ் குட்டி பத்மினியையும் சேர்த்திருந்தார்கள் போலும். ஓர் ஆண்மணியைப் பெண் நர்ஸாகப் போட்டுச் சிரிப்பூட்டியிருக்க வேண்டாம். அதுவும் உடற்பருமனை வைத்துக் கொண்டு ஹாஸ்யங்களைப் புனைவது ரஸிக்கவில்லையே!

எழுத்தாளர் ''பிலஹரி'' ''நான் மனிதன்'' என்ற தலைப்பில் தாம் எழுதிய குறுநாவலை நாடகமாக ஆக்கித் தந்திருக்கிறார். கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் இயற்றியிருக்கிறார். காதல் காட்சி இல்லாமலே நாடகம் களை கட்டிவிட்டதென்றால் அது மகத்தான சாதனைதானே?

திருமுருக கிருபானந்தவாரியார்




25. ஹரிஹர புத்திரன்

ஐந்து கரப் பெருமான் காக வடிவிற் சென்று அகத்திய முனிவருடைய கமண்டலத்தைக் கவிழ்த்ததால் அக் கமண்டலத்தினின்றும் புறப்பட்ட காவிரி நதி, பல காதவழி கடந்து சந்தன மரம் முதலிய விருட்சங்களையும், யானைத் தந்தம், பொன் முத்து முதலிய உயர் பொருட்களையும் வாரிக்கொண்டு கீழ்த் திசை நோக்கிச் சென்றது. புண்ணியம் மிக்க தமிழ் நிலத்துக்கு மேலும் புண்ணிய வளமூட்டியது. தமிழ் மக்களின் வயிற்றுக்கு உணவு படைக்கும் மரகத வயல்கள் காவிரியின் அருளில் தோன்றுவதோடு, உள்ளத்துக்கு உணவு படைக்கும் தெய்வத் திருக்கோயில்களும் இனி இந்தக் காவிரியின் இரு கரைகளிலும் எழும்பி மகோன்னதமாக நிற்கப்போகின்றன. காவிரியின்றேல் தமிழகத்துக்குப் பொருளாதாரமும் இல்லை; அருளாதாரமும் இல்லையன்றோ?

இந்திரன் தவம் செய்து கொண்டிருந்த சீர்காழிப் பதியைக் காவிரி யடைந்தது. காவிரியைக் கண்ட இந்திரன் துன்புற்று வெந்த தன் உள்ளத்தில் அமுதப் பெருக்காகிய காவிரி பாய்வதே போல் கவலை நீங்கினான். ஈசனுக்காக அவன் வளர்த்த நந்தவனத்தில் தேவி காவிரி பாய்ந்து காய்ந்த செடிகளுக்குப் புத்துயிர் ஊட்டினாள். திவ்விய மலர்கள் மீண்டும் புஷ்பித்தன. அமரேசன் காலந்தோறும் மலர் கொய்து பரமேசனுக்கு வழிபாடு செய்து கொண்டிருந்தான்.

இதேபோதில் சூரபன்மனின் கொடுமையால் வருந்திய தேவர்களும் சீர்காழிப் பதிக்கு வந்து சேர்ந்தனர்; இந்திரனின் அடிகளில் வீழ்ந்து வணங்கி, "எங்கள் அரசே! அறநெறி சிறிதும் இல்லாத அசுரர்கள் வசத்தில் எங்களை விட்டு விட்டு இப்படி தேவியாரோடு மட்டுமாக இங்கு வந்து விட்டீர்களே, இது தகுமா? எங்களைக் காக்க வல்லவர் தாங்களே அல்லவா? மன்னவனாகிய தங்கள் கடமையன்றோ மக்களாகிய எங்களைப் பரிபாலிப்பது? புரந்தரனே, எமைப் புரந்திடாமல் இப்படி வெளியேகலாமா? தாரகன் என்னும் மத்தகஜம், சிங்க முகன் என்னும் கொடிய சிங்கம், சூரன் என்னும் வெம்புலி — இவற்றிடம் தேவர்களாகிய பசுக்களைக் காட்டிக் கொடுத்து விட்டுத் தாங்கள் மறைந்து வந்திருப்பது நன்றோ? நாங்கள் சூரபன்மனுக்கு ஊனும் மீனும் சுமந்து, மானங்கெட்டு ஞானம் கெட்டு உழல்கிறோம். வேதங்களை மறந்தோம், சீலமும் சிவ பூஜையும் எங்களை விட்டு நீங்கிவிட்டன. அமரபோகம் நீங்கியதற்காக வருந்தாவிடினும் ஆன்மபோதத்தை இழந்த துயரத்தைத் தாள முடியவில்லை. இனியும் எங்களால் துன்பப்பட முடியாது. எங்கள் இடர் நீங்க ஓர் உபாயம்



தாங்கள்தான் காண வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

இந்திரன் கலங்கினான். நீண்ட நேரம் யோசித்தான். அயர்ந்து பெரு மூச்சு விட்டான்.

''என் அருமைத் தேவர்காள்! சூர பன்மன் அளப்பரும் தவம் செய் திருக்கிறான். அவனால்தான் நமது வாழ் வும் வலிவும் நீங்கின. என்னால் எதிர்க்க வொண்ணாத அந்தப் பாவி தீய எண்ணங் கொண்டு அயிராணியைக் கைப்பற்றவும் என்னைச் சிறையிலிட வும் கருதிப் பல அசுரர்களை ஏவினான். அவனுடன் போரிட முடியாது என்று கண்ட பின் நான் இந்திராணியுடன் இங்கு மறைந்து வந்தேன். என்னால் வேறொன்றும் செய்வதற்கு இல்லாத தால் நீங்களும் அறியாமல் இங்கு வந்து சேர்ந்தேன். நமக்கு நலம் உண்டாக வேண்டுமானால் ஈசுவரன் அனுக்கிரகத் தாலேயே அது கிட்டவேண்டும். இதன் பொருட்டு சிவத்தைப் பேணித் தவத் தைச் செய்து கொண்டிருக்கிறேன். இனி நாம் எல்லோரும் திருக்கயிலாய மலைக் குச் சென்று சிவபெருமானைத் தரிசித்து நம் குறைகளை முறையிடுவோம், வாருங்கள்'' என்றான்.

தேவர்கள் மழை கண்ட பயிர் போல் மகிழ்ந்தனர். ''அரசே! இப் போதே நாம் கைலாய நாதனைக் கண்டு குறையிரந்து வருவோம்'' என்று ஆர்வத்துடன் கூறினார்கள். இந்திரன் தேவர்களைச் சிறிது நேரம் அங்கேயே இருக்கச் சொல்லி, இந்திராணி இருக்கும் இடத்துக்குச் சென்றான்.

''பெண்ணரசியே! தேவர்கள் இங்கு என்னிடம் வந்து தங்கள் குறைகளைக் கூறி முறையிட்டுக் கொண்டார்கள். நம் துன்ப நீக்கத்தின் பொருட்டு நான் தேவர்களுடன் கயிலை மலைக்குச் செல்கிறேன். விடை தருக'' என்று இந்திரன் கூறினான்.

இந்திரன் கூறியதைக் கேட்ட இந் திராணி பாணம் ஏறுண்ட மயில் போல் மயங்கினாள். அவளை இந்திரன் அன்போடு எடுத்து மயக்கம் தெளி வித்தான்.

''ஐயனே! நான் பொன்னுலகப் பெருவாழ்வை விட்டு மண்ணுலகம் வந்தும் தங்களுடன் இருப்பதால்தான் மகிழ்ச்சி குன்றாமல் இருக்கிறேன். தாங்கள் இங்கிருந்து என்னைப் பிரிந்து சென்றால் என்னால் உயிர் வாழ முடியுமா? சக்கரவாகப் பட்சிக்குச் சந்

திரனும், வானம்பாடிக்கு மேகமும் துணையாயிருப்பது போல் எனக்குத் தாங்கள்தானே துணை? பிரிவாற்றாமை தாங்காது தவிப்பேன் என்பதோடு, தாங்கள் இல்லாதபோது கொடிய அவுணர்கள் வந்து துன்புறுத்தவும் நேருமே! நம் புதல்வன் சயந்தனும் இங்கு இல்லை; ஐராவதமும் இல்லை; வேறு பணிப் பெண்களும் இல்லை. பழிக்கு அஞ்சாதவரும் பாவங்களுக்கு உறைவிடமானோருமாகிய அவுணர்கள் என்னை அபகரிப்பார்கள். என்னை விட்டுச் செல்லாதீர்கள். நானும் உங்களுடன் வருகிறேன்'' என்று இந்திராணி நடுங்கிக்கொண்டே கூறினாள்.

அயிராணி கூறியவற்றைக் கேட்ட இந்திரன் சிறிது நேரம் யோசித்தான். பின்னர், ''அன்புக்குரியவளே! வருந்தாதே. உனக்குத் துணையில்லை என்று கலங்க வேண்டாம். சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் புதல்வராக உதித்த ஐயனார் நமக்கு ஒப்பற்ற காவலாக இருக்கிறார். அவரைத் தியானித்தால் இங்கு எழுந்தருளுவார். அவரிடம் உன்னை அடைக்கலமாகக் கொடுத்து நான் செல்கிறேன். அவர் உன்னைக் காத்தருள்வார். அஞ்ச வேண்டாம்'' என்று கூறினான்.

''சுவாமி! திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் மகவு உதித்ததா? எப்போது? ஐயனாருடைய வரலாறு யாது? அடியேனுக்குச் சொல்லுங்கள்'' என்று தேவராணி ஆச்சரிய ஆர்வத்துடன் வினவினாள். ஐயனாரின் வரலாற்றைக் கூறத் தொடங்கினான் இந்திரன்.

''முன்பு திருமாலை முன்னிட்டுக் கொண்டு தேவர்கள் அமுதம் விரும்பிப் பாற் கடலைக் கடைந்த கதை நீ அறிவாயல்லவா? அப்போது ஆலகால விடம் எழுந்ததும், அதனைக் கண்டு தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுநடுங்கி ஓடியதும் உனக்குத் தெரிந்தவை தாமே? நாங்கள் திருக்கயிலாய மலை சென்று சிவபெருமானைத் தஞ்சம் அடைந்து முறையிட்டுக்கொள்ள, கருணையே உருவான கண்ணுதற் கடவுள் பாற்கடலினின்று எழுந்த ஆலகால விடத்தைத் தாமே உண்டு கண்டத்தில் அடக்கிக் கொண்டு தேவர்களுக்குத் திருவருள் பாலித்த அருட் சரிதையும் நீ அறிவாய். பின்னர் தேவர்கள் தொடர்ந்து பாற்கடலைக் கடைய அமுதப் பொற்குடம் அதனின்று எழும்பியது. அமிர்தம் உண்ணுவதில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் மூண்டது. திருமால் மூவுலகமும் விரும்பத் தக்க வண்ணம் மோகினி வடிவம் எடுத்தார். அம்மோகினி வடிவைக் கண்ட அசுரர்கள் அவளது அழகில் மயங்கி, காமப் பித்துக் கொண்டு அமிர்தத்தை மறந்தார்கள். தேவர்களும் மோகினியின் மீது மையல் கொண்டார்கள். ஆம்! பெண்ணாசை யாரைத்தான் விட்டது?

'என்ன அவுணர் நோகையல்லமதை
எந்தை மாயம்
உன்னாடு வானோர் களும்பெண்மயல்
உற்று நின்றார் :
மன்னாசை தன்னில் பொருளாசையின்
மாய வாழ்க்கைப்
பெண்ணாசை நீங்கல் எளிதோ
பெரியோர் தமக்கும் ?

''தேவர்களும் அசுரர்களும் காமத்தால் மயங்கி நின்றபோது, மோகினி வடிவம் கொண்ட திருமால் அவர்களை நோக்கி, 'உங்கள் சண்டையை விடுங்கள். இங்கு நான் இருக்கிறேன்; அமிர்தமும் இருக்கிறது. இவ்விரண்டில் நீங்கள் எந்தயாவது ஒன்றை விரும்பி எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார். பெண் மோகம் யாருக்குமே இயல்பு. எனினும் விவேகமுடன் முடிவெடுக்க ஒரு வாய்ப்பு உண்டானால் அறிவுடையோர் பெண்ணாசையைத் தள்ளி விடுவார்கள். அமரர்கள் இவ்வாறே மோகினி ஆசையை மறந்து அமுதத்தை வேண்டினர். எக்காலும் திருந்தாத அசுரர்களோ பெண் பித்துப் பிடித்து, ''மோகினியே வேண்டும்'' என்றார்கள். மோகினி அசுரர்களைப் பார்த்து, ''உங்களில் வீரன் யார்?'' என்று வினவினாள். அசுரர்கள் ஒவ்வொருவரும் ''நானே வீரன்; நானே வீரன்'' என்று போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தார்கள். இதனால் அசுரர்களுக்குள்ளேயே சண்டை மூண்டது. அச்சண்டையில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு அழிந்து போனார்கள்.

''திருமாலின் மோகினி வடிவ மாயத்தை அறிந்த அசுரர்களில் இருவர் மட்டும் சண்டையில் இறங்காமல் தேவ வடிவங் கொண்டு அமரர்களுடன் கலந்து நின்றார்கள். திருமால் மோகினி வடிவம் நீங்கித் தேவர்களிடம் சென்று அமுதத்தைப் பகிர்ந்தளித்தார். அமரர் வடிவிலிருந்த அசுரர் இருவரும் அமிர்தத்தைத் தேவர்களுக்கு முன்னதாக உட்கொண்டனர். அதனைக் கண்ட சூரிய சந்திரர் 'இவர்கள் அமரர்கள் அல்ல' என்று திருமாலுக்கு உணர்த்தினார்கள். திருமால் தன் கையிலிருந்த அகப்பையினால் அவர்கள் தலையில் அடித்தார். அதனால் அவர்களின் தலை

கல்யாண வைபவங்களுக்கு

புதுமாதிரி காஞ்சிபுரம் பனாரஸ்

பட்டு சேலைகள்


காஞ்சிபுரம் விலைக்கே கிடைக்குமிடம் :

P. B. லக்ஷ்மணஸா & பிரதர்ஸ்

ஏர்-கண்டிஷண்ட் ஷோ-ரூம்


பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள்

109, ஐயா முதலித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2



பார்கோ

கேஸ் மாண்டில்கள்



சிறந்த ஒளிக்கும்,
நீடித்த சேவைக்கும்

தயாரிப்பவர்கள் :

பார்கோ மாண்டில் ப்ராடக்ட்ஸ்

343-B, கோட்பந்தர் ரோடு,
மாக்த்ரஸ-மம்பலம்-50 AS.




ஸ்ரீநிவாஸ் ■ பிரிண்டுகள் ■ வாயில்கள் ■ லான்கள் ■ பாப்லின்கள்
கண்ணைக் கவரும் ! உடையில் எழில்மிகும் தோற்றம்
ஸ்ரீ


துண்டாகியது. அமுதம் கண்டத்தை அடையும்போது தலை முண்டத்திலிருந்து துண்டானதால் அவர்களின் உடல்கள் அழிந்தபோதிலும் தலைகள் அழியாமலிருந்தன. ''நீங்கள் அமுதம் உண்டதால் விண்ணுலகில் இருக்கத் தகுந்தவர்கள்; நீங்கள் இருவரும் கிரகங்களாகுக'' என்று திருமால் பணித்தார். அதன்படி அந்த அசுரர்கள் இருவரும் இராகு, கேது என்னும் கிரகங்களாயினர். தேவி! இக்கதை யாவும் நீ முன்பே அறிந்திருக்கக் கூடியதுதான். இனி நீ அறியாத கதையைச் சொல்கிறேன்.

''தேவர்களுக்கு அமுதம் பகிர்ந்தளித்த பின் திருமால் தாம் முன்பு கொண்ட மோகினி வடிவுடன் பாற்கடலின் கரையில் இருந்தார். சிவபெருமானுக்கு நால்வகைச் சத்திகள். பராசத்தி மாய காரிய சம்பந்தத்தால் நான்கு வகையாகித் திருவருள் புரிகிறாள். உலகை உற்பத்தி செய்யும் ஜகன்மாதாவாக இருக்கும் போது சிவபெருமானுக்குத் தேவியான பார்வதியாகவும், அன்பு கொண்டு உலகை ரட்சிக்கும்போது திருமாலாகவும், கோபங்கொண்டு உலகைப் பட்சிக்கும்போது காளியாகவும், நன்மையை நிலைநாட்டுவதற்காகச் சமர் புரியும்போது துர்க்கையாகவும் விளங்குவாள்.

ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய ப்ரயோஜநார்த்தாய சதுர்விதாபூத் போகேபவாநீ புருஷேஷு விஷ்ணு: க்ரோதேச காளீ ஸமரேச துர்கா

''தம் சக்திகள் நால்வரில் திருமாலும் ஒரு சக்தியாயிருப்பதை நம்மனோர்க்குத் தெரிவித்தருளும் பொருட்டு, சிவபெருமான் பேருவனப்புடைய திருவடிவம் தாங்கித் திருப்பாற் கடலருகே வந்தார். அவரைக் கண்டு திருமாலாகிய மோகினி மாலாகி மையலுற்றாள். மின் சக்தி புவியில் பாய்வது போல் சத்தி சிவத்தினுள் பாயவே துடிக்கும். அண்ட சராசரங்களுக்கு உள்ள ஆகர்ஷணத்துக்குக் காரணமே சிவத்துக்கும் சத்திக்கும் உள்ள பரஸ்பர ஆகர்ஷணம் தான். அந்த ஆகர்ஷணத்துக்கே அன்பு என்று பெயர். கணவன் மனைவியிடையும், மாதா மக்களிடையும், தோழர்களிடையுமுள்ள அன்புக்கெல்லாம் ஊற்று சிவ சக்தியின் பரஸ்பர அன்பேயாகும். சக்தியாகிய திருமாலிடம் சிவபெருமான் ஈர்க்கப்பட்டார்.

''நின் வடிவம் எத்துணை இனிது, மோகினி!'' என இனிக்கக் கூறி அவளை அணுகினார்.

> 
>
> **சந்தா விகிதம்**
>
> | | ஒரு வருடம் ரூ. பை. | ஆறு மாதம் ரூ. பை. |
> |---|---|---|
> | இந்தியா, இலங்கை | 18-00 | 9-00 |
> | பர்மா, மலேயா, வெளி நாடுகள் | 25-00 | 12-50 |
>
> **தனிப் பிரதி விலை 35 காசு**
>
> சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது.
>
> மானேஜர்:
>
> **கல்கி காரியாலயம், சென்னை-10**

நாணமடைந்த விஷ்ணு, ''உலகமாதாவாகிய உமையம்மையார் என்றும் தங்களைக் காதலித்திருக்கத் தேவரீர் என்னை விரும்புவது ஏன்? முன்னொரு நாள் பங்கயனுக்குப் படைப்புத்தொழில் கைகூடும்பொருட்டுப் பார்வதி தேவியாருடன் தாங்கள் சேரும்படி வேண்டிக் கொண்டேன். ஆனால் துறவித் தெய்வமாகிய தேவரீருக்கு உமையம்மையாரிடத்தும் சிருங்கார நாட்டமில்லை. மேல் நோக்கிய வீரியம் உடைய தேவரீர் அடியேனைக் கருதி வந்த காரணம் யாதோ? தேவரீரது அற்புத விளையாட்டை அறிய வல்லவர் யாவர்?'' என்று வியந்து கூறினார்.

''மோகினி! நீயும் நமக்கு ஒரு சக்தியே. அன்று யாம் பிட்சாடனராகத் தாருகாவனத்திற்குச் சென்று முனி பத்தினிகளைக் கவர்ந்தபோது நீயும் ஒரு பெண்ணாகி முனிவரைக் கவர்ந்து ஞானமளித்ததை மறந்தனையா? பழைய நான்முகன் இறந்து போனதும் நம்மை அடைந்து பிரமனைப் பெற்றதை மறந்தனையா?'' என்று கூறித் தமது பொற்கரத்தை நீட்டி மோகனசுந்தரியைப் பிடிக்கச் சென்றார் சிவபெருமான். நாணி ஓடினாள் மோகினி. அரனார் அவளைத் தொடர்ந்து சென்றார். நாவ

வந் திவில் வடதிசைக் கடலோரத்தில் உள்ள சால விருட்சத்தின் நிழலில் மணியும் ஒளியும் இணைந்தன. சிவமும் சக்தியாகிய திருமாலும் இணைந்தன!

[கண்டகி நதி அங்கிருந்து பிரவகித்தது. அதன் நீரில் வச்சிரதந்தி என்னும் ஜீவராசிகள் உள்ளும் புறமும் சக்கரக் குறியுடன் பொன் வண்ணமாய் உதித்தன. அவை மண்ணினுல் கூடுகளை உண்டாக்கி, அதிலேயே வாழ்ந்து மடியும்; அவை மடிந்த பின் அந்தக் கூடுகள் சக்கரக் குறியுடன் காணப்படும். அவற்றை ஆற்றோட்டம் கரையில் கொண்டு வந்து ஒதுக்கி விடும். உலகிலுள்ளோர் அவற்றை எடுத்துச் சென்று உள்ளே இருக்கும் பொன்னை எடுத்து அடையாளங்களைப் பார்த்து, இன்ன இன்ன மூர்த்தம் என்று உணர்ந்து விஷ்ணுவாக பாவித்துப் பூசிப்பார்கள். அந்த மண் கூடுதான் சாலக்கிராமம்.]

இந்திரன் தன் தேவியிடம் கதையைத் தொடருவான் :

''அரியும் அரனும் அன்பில் லயித்த போது, கரிய மேனியும், சிவந்த சடையும், செண்டு தரித்த கையுமாய் ஒரு குமாரர் அவதரித்தார். அப் புதல்வருக்கு ஹரி ஹர புத்திரர் என்று அரனுர் நாமம் சூட்டிப் பல வரங்களைத் தந்து உருத்திரர்களுக்குள் ஒருவராக்கினுர். ஒரு புவனத்தை நல்கி தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையும் தந்தார். ஹரிஹர புத்திரரே சாஸ்தா என்றும் ஐயனுர் என்றும் ஐயப்பன் என்றும் திருநாமங்களைப் பெற்றுர்.

''சாஸ்தா உதிக்க வேண்டுமென்றே தான் அரனும் அரியும் ஒன்றுயினர். எனவே ஐயப்பன் அவதரித்தவுடன் திருமாலுக்கும் ஐயனுருக்கும் விடை தந்து மறைந்தருளினுர் துறவித் தெய்வமான சிவபெருமான்.

''சசிதேவி! ஹரிஹர புத்திரர் தமது புவனத்தில் பூத கணங்களுடன் இருப்பார். விண்ணவரும் மண்ணவரும் விரிஞ்சனும் வணங்கும் விசிட்டமுடையவர் அவர். விஷ்ணுவாலும் புகழத் தக்கவர். அவர் உன்னைக் காத்தருள்வார்'' என்று இந்திரன் கூறினுன்.

ஐயனுரின் பெருமையைக் கேட்டு மகிழ்ந்த இந்திராணி சீர்காழியிலேயே தங்கியிருக்க உடன்பட்டாள்.

இந்திரன் ஐயப்பனைத் தியானித்தான். அவர் பூத கணங்கள் சூழ வெள்ளை யானை மீது பூரணை, புட்கலை என்ற தேவியர் சமேதராய் அங்கே பிரசன்னமானுர். அவரை வணங்கிய இந்திரன், ''எம்பெருமானே! சிவபெருமானிடம் சூரன் கொடுமையை விண்ணப்பிக்கும் பொருட்டு அடியேன் தேவர்களுடன் திருக்கயிலாயம் செல்கிறேன். நான் சென்று திரும்பி வரும் வரையில் இவளைத் தங்களிடம் அடைக்கலமாகத் தருகின்றேன். தமியேன் போய் வரும்வரை இவளைக் காத்தருள வேணும்!'' என்று வேண்டினுன்.

''அமரபதி! அஞ்ச வேண்டாம். இந்திராணிக்குத் துன்பம் வராமல் யாம் காத்து நிற்போம். நீ கயிலைக்குச் செல்க'' என்று ஐயனுர் பணித்தருளினுர்.

தமது வீரருள் வாட் போரில் நிகரற்ற மகா காளரை நோக்கி ''இந்திரன் திரும்பி வரும் வரையில் தனித்திருக்கும் சசிதேவியைக் காத்து நிற்பாய்'' என்று கட்டளையிட்டார்.

அமரர் கோன் அயிராணியிடம் விடைபெற்றுன். (தொடரும்)

குட்டிக்கதை



படைப்பின் விசித்திரம்

மடக்கி வைத்த காலுக்குக் கீழே மிருதங்கத்தை இடுக்கி வைத்துக் கொண்டு, 'வெளு, வெளு' என்று வெளுத்துக் கொண்டிருந்தார் மிருதங்கக்காரர்.

''ஐயோ, பாவம்!'' என்றது பிடில்.

''ஏனும்?'' என்று கேட்டது கஞ்சிரா.

''என்னதானிருந்தாலும் இப்படியா அடிப்பார்கள், மிருதங்கத்தை!'' என்றது அது.

''அடிக்காமல் தட்டியா கொடுப்பார்கள்?'' என்றது இது.

''ஏன், என்னவர் என்னை மீட்டுவது போல் அதனவர் அதையும் மீட்டினுல் என்னவாம்?'' என்று தம்பூரா கேட்டது.

கஞ்சிரா பெருமூச்சுடன் சொல்லிற்று :

''உன்னை மீட்டினுல் ஓசை கிளம்பி விடுகிறது; என்னையும் மிருதங்கத்தையும் அடித்தால் தானே ஓசை கிளம்புகிறது!''

— விந்தன்



அத்தியாயம் பதினேழு

சீப்பும் கண்ணாடியும்

சபேசன் சட்டைப் பித்தான் மடிப்புப் பகுதியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். நேற்றை விட இன்று அது சற்று உப்பலாக இருக்கவே அவன் நெஞ்சு மகிழ்ச்சியால் உயர்ந்து தாழ்ந்தது. ''படுத்துக்கிறேம்மா!'' என்று கன்னியம்மாவிடம் சொல்லிவிட்டுப் பாயை விரித்துச் சுவர்ப் பக்கமாகத் திரும்பிப் படுத்தான்.

அப்படிப் படுக்கும் போது அவன் தன்னை ஜாடை மாடையாகக் கூடப் பார்க்க வில்லையே என்ற ஏமாற்றத்தாலோ, ஏக்கத்தாலோ வேதாவின் மலர்ந்த முகம் கூம்பிச் சிறுத்தது. கனன்றுகொண்டிருந்த அடுப்பில் தண்ணீர் தெளித்து அணைத்துவிட்டுத் தன் படுக்கையில் போய்ச் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

''அந்தப் பையன் இன்னு துண்ணுச்சோ, எங்கே படுத்துச்சோ! அது தலையெழுத்து இப்படியா இருக்கணும்?.... ஊம்!'' என்று கரகரத்த குரலில் முணுமுணுத்தவாறு கட்டைச் சுவரோரம் முந்தானையை விரித்துப் போட்டு உடம்பைக் கிடத்தினாள் கன்னியம்மாள்.

பாய், தலையணை, போர்வையோடு சபேசன் படுத்துத் தூங்கி எத்தனை நாட்களாகின்றன! அவற்றின் சுகத்தை நன்கு அநுபவிப்பவன்போல் சற்றைக்கெல்லாம் குறட்டை விட ஆரம்பித்தான். நாள் முழுதும் தெருத் தெருவாக அலைந்து திரிந்த அலுப்பு வேறு அவனை இடை விழிப்புக் கொள்ள விடாமல் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கடித்தது.

விடியற்காலை தலைமாட்டில் ஏதோ வளையல் குலுங்கிய ஒலி கேட்டுச் சட்டென்று கண் விழித்தான்.

தூக்கம் கண்ணிமைகளை விட்டு இறங்க மறுக்கவே போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு மீண்டும் தூங்கிப் போனான் சபேசன்.

சற்று நேரங் கழித்து அவன் முகத்தில் தண்ணீர்



ஜெகசிற்பியன்

தெளித்த மாதிரி யிருந்ததை உணர்ந்து திடுமென்று எழுந்து உட்கார்ந்தான். நீர் நிறைந்த குடத்தை இடுப்பில் ஏந்திக் கொண்டு அப்போதுதான் அவனைக் கடந்து சென்ற வேதா, ''மன்னித்துக் கொள்ளுங்கள். குடத்து நீர் தளும்பி விட்டது'' என்றாள் குறும்புப் புன்னகையுடன்.

சபேசனுக்கு ரொம்பவும் வெட்கமாகிவிட்டது. அவசரமாக எழுந்து பாயைச் சுருட்டி மூலையில் வைத்து விட்டுப் புறக்கடைக்குப் போய் முகம் கை கால்களைக் கழுவிக் கொண்டு மாட்டுக் கொட்டகைப் பக்கமாக அப்படியே புறப்பட்டுப் போய் விட்டான் அவன்.

காப்பியுடன் அவனுக்காகக் காத்திருந்த வேதா, வெளிப் படலைத் திறந்துகொண்டு தெருவில் இறங்கிச் சென்ற சபேசனைப் பார்த்ததும் விக்கித்து விறைத்து நின்றுவிட்டாள்.

அன்றெல்லாம் அவள் மனமே சரியாக இல்லை. 'தலைவலி' என்று தன் தாயிடம் போய் சொல்லிவிட்டுப் படுத்தே கிடந்தாள். சாயந்தரமானதும் ஏதோ ஒரு புது உற்சாகமடைந்தவள் போல் எழுந்து தலைவாரிப் பூச்சூடிப் பொலிவுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டு உள்ளுக்கும் வெளிக்குமாகச் சுறுசுறுப்போடு நடமாடிக் கொண்டிருந்தாள்.





இரவு எட்டு மணிவாக்கில் சபேசன் வந்து சேர்ந்தான். அன்றும் நச்சியை அவன் சந்திக்கவில்லை. கன்னியம்மாளிடமும் வேதாவிடமும் சாதாரணமாக இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டுப் படுத்து, விடியற்காலையில் எழுந்து நேற்றுப் போலவே வேதாவிடம் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டான்.

பொழுது இருட்டியதும் வழக்கம் போல் அவன் வீடு திரும்பியபோது வழக்கத்துக்கு மாறுகக் கன்னியம்மாளும் வேதாவும் படுத்து விட்டிருந்தார்கள். சபேசனுக்கு இது கொஞ்சம் சங்கடமாக இருந்தது. ''என்னம்மா, படுத்து விட்டீர்களா?'' என்று அன்பாக வினவினுன். ''ஊம்'' என்ற பதிலே கன்னியம்மாளிட மிருந்து வந்தது. அதற்கு மேல் அவள் ஒன்றும் பேசவில்லை. 'தான் படுக்க வருவது இவர்களுக்குச் சிரமமாக இருக்குமோ?' என்ற குழப்பத்துடன் ஓசையின்றிப் பாயை விரித்துப் போட்டுப் படுத்து விட்டான். வெகு நேரம் கழித்துத் தான் ஒரு விஷயம் அவன் நினைவுக்கு வந்தது. மெல்லத் திரும்பி அடுப்படியை நோக்கினுன். அடுப்பிலே பூனை தூங்கிக் கொண்டிருந்தது.

'நச்சி கொடுத்த பணம் தீர்ந்து போய் இன்று தாயும் மகளும் பட்டினி கிடக்கிருர்கள் போலும்' — சபேசனின் மனம் வேதனையால் நொந்து கரைந்தது. அவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். தன்னிடமிருக்கும் பணத்தில் இரண்டு மூன்று ரூபாய் எடுத்துக் கொடுத்து அவர்களை ஏதாவது வாங்கி வந்து சாப்பிடச் சொல்லலாமாவென எண்ணினுன். அது நல்ல யோசனை அல்ல என்று அவனுக்குப் பட்டது. காரணம்,—அவன் பணம் கொடுப்பதைக் கன்னியம்மாள் தவருக நினைத்துவிட்டால் என்ன செய்வது? அவனிடமிருந்து பணம் வாங்குவதை அவள் கௌரவக் குறைவாகவும் கருதலாம் அல்லவா? இவை தவிர இன்னொரு சங்கடமும் இருந்தது. அவனுடைய சட்டைப் பித்தான் மடிப்புக்குள் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் பணத்தை அவ்வளவு சுலபமாக வெளியில் எடுத்து விட முடியாது. அதற்கென்று ஓர் அரை மணி நேரத்தையாவது செலவிட்டாக வேண்டும்! இப்போதே மணி பத்தாகி விட்டது. இனிமேல் பணம் கொடுத்தால் கூட அவர்கள் என்ன செய்ய முடியும்? கடைகள் ஹோட்டல்கள் எல்லாம் சாத்தப்பட்டிருக்குமே?

பேசாமல் படுத்துவிட்டான் சபேசன்: அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை: முள் மேல் படுத்திருப்பவன் போல் நெளிந்து கொண்டிருந்தான். தன்னிடம் பணம் இருக்க, அது இல்லாத இருவர் தன் பக்கத்திலேயே பட்டினி கிடப்பதை அவனுல் காணச் சகிக்கவில்லை. வரும்போது வயிருரச் சாப்பிட்டிருந்தும் இப்போது அவனுக்கு அகோரப் பசி எடுத்துக் குடலை முறுக்கியது. அத்துடன் அவனது மார்புக்கு நேரே சட்டைப் பித்தான் மடிப்புக்குள் செருகி வைத்திருந்த ரூபாய் நோட்டுக்கள் ஒவ்வொன்றும் ஒரு கூரிய கத்தியாக நிமிர்ந்து நெஞ்சைக் குத்திக் கிழிப்பது போலவும் இருந்தது. அந்த வேதனையைத் தாள மாட்டாதவன் போல் அப்படியும் இப்படியுமாகப் புழுப் போல் நெளிந்து துடித்தான். விநாடிக்கு விநாடி அவ்வேதனை மிகுதியாகவே, தன்னிடமிருக்கும் பணத்தைக் கொத்தாகப் பிடுங்கி எடுத்து எங்காவது தூர வீசி எறிந்துவிட வேண்டும் என்ற ஒரு வெறி உணர்ச்சியும் அவனுக்கு ஏற்பட்டது. 'பணம் படைத்த சீமான்கள் பலர் தமக்கு ஊழியம் செய்யும் ஏழைகள் தம் பக்கத்திலேயே கிடந்து பசியாலும் பட்டினியாலும் வதைபடும் காட்சியைத் தினமும் கண்ணெதிரே கண்ட பின்னும் அது பற்றி எள்ளத்தனை சலனமும் கொள்ளாமல் தம்மிடமுள்ள பணத்தைக் கட்டிக் காப்பதிலும், வளர்த்துப் பெருக்குவதிலும் கருத்தாயிருக்கிருர்களே, இது எப்படி அவர்களுக்குச் சாத்தியமாயிற்று?' என்று எண்ணிப் பார்த்தான். 'அப்படி அவர்கள் தம் மனத்தை வைத்துக் கொள்ள அதற்கென்று ஒரு தனிப் பயிற்சியே பெற்றிருக்க வேண்டும்; எத்தனை பயங்கரமான பயிற்சி அது?'

சபேசனின் கண்கள் கலங்கின. அவன் மௌனமாகக் கண்ணீர் வடித்தான். வேதா தைத்துக் கொடுத்த அந்தப் புதிய தலையணையைத் தன் கண்ணீரால் நனைத்தபடி வெகு நேரம் விழித்துக் கொண்டிருந்து விட்டு, விடியற்காலையில் சற்றே கண்ணயர்ந்து ஆறு மணிக்கெல்லாம் எழுந்துவிட்டான்.

கன்னியம்மாள் வழக்கம் போல் வாடிக்கைப் பால் கறக்க மாட்டை ஓட்டிக்கொண்டு போய் விட்டிருந்தாள். வேதாவையும் காணும். அவள் தண்ணீர் பிடித்து வரத் தெருக் குழாய்க்குப் போயிருக்கலாம்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியில் புறப்படத் தயா

ராஜன் சபேசன். ஆனால் முந்தின தினங்களைப் போல் வேதாவிடம் சொல்லிக் கொள்ளாமல் போக ஏனோ அவனுக்கு மனம் வரவில்லை. தயங்கி நின்று அங்குமிங்குமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேதா வந்தாள். தண்ணீர்க் குடத்தோடு வரவில்லை; புறக்கடையிலிருந்து உள்ளே வந்தாள். அப்படியானால் இவ்வளவு நேரம் அவள் எங்கே யிருந்தாள்? வைக்கோல் போருக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தாளோ?

அவள் அவனைப் பார்க்காமல் அடுப்படியை நோக்கி நடந்தாள். சபேசன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். நேற்றும் அதற்கு முந்தின நாட்களும் அவள் நடந்து கொண்ட விதத்தோடு இன்றையப் போக்கை ஒப்பிட்டுப் பார்த்த அவனுக்கு உள்ளூற வியப்பேற்பட்டது. அவளின் இந்தப் போக்குக்கு வேறு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம், ஆனால், நேற்றிரவு அவள் பட்டினி கிடக்க நேர்ந்ததாலேயே இன்று இப்படி வெறுப்பும் விரக்தியுமாக நடந்து கொள்ளுகிறாள் என்ற ஒரு காரணம் மட்டுமே அவனுக்குப் புலப்பட்டது. 'இயற்கையாகவே அன்பும் பண்பும் உடையவர்களிடத்தே வறுமையும் பசியும் அண்டினால் அந்த நல்லியல்புகளை ஊனப்படுத்திச் சிதைத்து விடும் போலும்!' என்று எண்ணி மனம் நொந்தான் அவன்.

''கொஞ்சம் சீப்புக் கண்ணாடி தர முடியுமா?''

வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த வேதா அவனைப் பட்டும் படாமலும் பார்த்து, ''அதோ அந்த மாடத்தில் இருக்கும்; எடுத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் ஜீவனற்ற தொனியில்.

அவளுடைய சோர்ந்த மனத்துக்கு ஆறுதல் ஊட்டவே இப்படிப் பேச்சுக் கொடுத்த சபேசன் அதற்கு மேல் என்ன பேசுவதென்று தெரியாமல் மௌனமாகப் போய் மாடப் புரையிலிருந்த சீப்புக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு சுவர்ப் பக்கமாகத் திரும்பி நின்று தலை வாரினான்.

சற்று நேரம் கழித்து அவன் கையிலிருந்த கண்ணாடியில் வேதாவின் வெளிறிய முகம் தெரிந்தது. கட்டைச் சுவர் மீது சாய்ந்து நின்றவாறு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அவளது மனத்தில் புதைந்து கிடந்த ஏதோ ஓர் ஏக்கம், அல்லது கவலை, அல்லது எதிர்பாராத ஏமாற்றத்தினால் ஏற்பட்ட குமைச்சல் முகமெங்கும் வியாபித்துக் கண்களிலே புனலாடி வழிந்து கொண்டிருந்தது.

அவன் தலை வாருவதை நிறுத்திவிட்டு அந்த முக பிம்பத்தையே உற்று நோக்கினான். பிறகு சட்டென்று திரும்பி வேதாவை நேருக்கு நேர் பார்த்தவாறு ஏதோ கேட்கப் போகிறவன் போல் அவள் அருகில் சென்றான். வேதா மிரட்சியுடன் பின்னால் சிறிது நகர்ந்தாள்.

''உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும்...'' என்று தயங்கினான் சபேசன்.

இவ்வளவு நேரம் கூம்பிய தாமரையாக இருந்த வேதாவின் முகம் பளிச்சென்று மலர்ந்து சிவந்தது. ஆவலும் வியப்புமாக அவனை ஏறிட்டு நோக்கினாள் அவள்.

அவளுடைய மலர்ச்சியைக் கண்டதுமே அவனிடம் துளிர் விட்டிருந்த துணிவு பட்டென்று கருகித் துவண்டது. பீதியடைந்தவன் போல் திருதிருவென விழித்தவாறு, ''ஒன்றுமில்லை. வந்து... நான் புறப்படட்டுமா? ....நேரமாகிறது....'' என்று குழறிக் கொண்டே பின்னால் நகர்ந்தான்.

அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. தன் அழகிய முல்லைப் பல் வரிசை தெரியச் சிரித்து ஒய்யாரமாகத் தலையைச் சாய்த்து அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள். ''ஒரு நிமிஷம் இருங்கள்! ....உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்...''

வாசல் நிலைவரையில் சென்றுவிட்ட சபேசன் தயங்கி நின்றான். அவளிடம்



அவன் கேட்க நினைத்த விஷயம், 'நேற்று சமைக்கவில்லையா? பணம் தேவையென்றால் உன் அம்மாவிடம் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். வாங்கிக்கொள்வாளா?' என்பதுதான். ஆனால் அவளோ அவனிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்கிறாளே, அது என்னவாக இருக்கும்?

அவள் சொல்லப் போவதைக் கேட்கப் பயந்தவன் போல், ''நேரமாகிறது; நான் வரட்டுமா?'' என்று அசட்டுச் சிரிப்புடன் கூறிக் கொண்டே அவசரமாகப் புறப்பட்டுப் போய்விட்டான் சபேசன்.

மகிழ்ச்சிக் களை பூத்திருந்த வேதாவின் முகம் பழையபடி வெளிறிச் சிறுத்தது. வாசல்நிலை மீது அப்படியே சாய்ந்து கொண்டாள் அவள்.

பிற்பகல் இரண்டு மணி இருக்கும். புதிய அச்சகமொன்றில் காகித ஜல்லி வாங்கி, வேஸ்ட் பேப்பர் கம்பெனியிலே போட்டுக் காசாக்கிக்கொண்ட பின், சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கமாக வந்து மற்றோர் அச்சகத்துக்குப் போக பஸ் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தான் சபேசன்.

அன்றைய வியாபாரத்தில் அவன் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லை. முக்கால் பங்கு ஜல்லி கலர் காகிதமாயிருந்ததால் அது இரண்டாந்தரச் சரக்காகி விட்டது. வெள்ளைக் காகித ஜல்லிக்குத்தான் விலை அதிகமாம். இந்த விஷயம் தெரியாமல் வாங்கிய ஜல்லி முழுவதற்கும் ஒரே வித விலை கொடுத்து விட்டதால், விற்பனையில் பாதி இலாபம் அடிபட்டுப் போயிற்று. ஏழுமலையான் அச்சக உரிமையாளர் கண்ணபிரானாக இருந்தால், அவரே ஜல்லியை ரகவாரியாகப் பிரித்து அததற்குரிய நியாய விலையில் கொடுத்திருப்பார். இந்தப் புதிய அச்சக முதலாளி அப்படிச் செய்யவில்லை. நேர்மை நியாயம் என்பவை, எல்லா இடங்களிலிருந்தும் கிடைத்து விடக் கூடிய அத்தனை மலிவான சரக்குகளா என்ன?

'இனிமேல் இவ்விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டானே தவிர, இன்றைய இலாப இழப்பினால் ஏற்பட்ட வருத்தத்தை அவ்வளவு சீக்கிரம் மாற்றிக்கொள்ள அவனால் இயலவில்லை. காரணம், காலையிலிருந்தே அவனுடைய மனம் வேறொரு துயரத்திலும் குழப்பத்திலும் சிக்கி அமைதி இழந்து கிடந்ததுதான். 'நேற்றிரவு போலவே இன்று பகலும் அவர்கள் — வேதாவும், கன்னியம்மாளும் — பட்டினி கிடப்பார்களோ' என்ற எண்ணம் அடிக்கடி தோன்றி அவனை வருத்திக்கொண்டே இருந்தது. அத்துடன் காலையில் வீட்டை விட்டுப் புறப்படும்போது வேதா அவனிடம் ஏதோ சொல்ல விரும்பியதை என்ன என்று கேட்டுத் தெரிந்து கொள்ளாமலே வந்து விட்டதும் அவனுடைய மனக் குழப்பத்துக்கு ஒரு காரணமாயிருந்தது. இதனாலேயே அவன் இவ்வளவு நேரமாகியும் ஹோட்டலுக்குப் போய் எதுவும் சாப்பிட மனமின்றி வெறும் வயிற்றோடு சுற்றிக்கொண்டிருந்தான்.

'இன்றைக்கு எப்படியும் நச்சியைத் தேடிப் பிடித்து வீட்டுக்கு அழைத்துப் போக வேண்டும். அவன் கையில் பணம் இல்லையென்றால் நானாவது அவனுக்குத் தந்து அதை அவனது தாயாரிடம் கொடுக்கச் செய்ய வேண்டும்' — இப்படித் தீர்மானித்துக்கொண்ட பிறகுதான் சபேசனின் மனம் ஒருவாறு அமைதியடைந்தது.

சற்றுநேரம் கழித்து அவன் எதிர்பார்த்த பஸ் வரவே அதில் ஏறப் போன அதே சமயம், ''இன்னா பிரதர்! எப்படி இருக்கிறே?'' என்று கேட்டுக் கொண்டே அந்த பஸ்ஸிலிருந்து கீழே இறங்கினான் நச்சி.

அவனைக் கண்டதும் சபேசனுக்கு மகிழ்ச்சித் திணறலாகிவிட்டது. பஸ் கிளம்பிச் சென்றதையும் கவனியாமல்,



''வா, அண்ணே! இப்போதுதான் உன்னை நினைத்துக் கொண்டிருந்தேன்; நீயும் வந்துவிட்டாய்'' என்றான் தன்னை மீறிய குதூகலத்துடன்.

''அடங்க, இஸ்கி! என்னைப் பார்க்கிறவங்களெல்லாம் இப்படித்தான் சொல்றாங்க. பக்தர்கள் ஒரு பாட்டுப் பாடினதும் 'டகால்'னு பகவான் காட்சியளிச்சுடுவாரு சினிமாவிலே; அது மாதிரி நானும் ஒரு சினிமாக் கடவுள் போல இருக்குது!'' என்று தன் வழக்கமான கோணல் சிரிப்புடன் சொன்ன நச்சி, அவன் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தபடி, ''நானும் உன்னைப் பார்க்கத்தான் இப்ப புறப்பட்டு வந்தேன், ஒரு முக்கிய விஷயமாக!'' என்றவன் தன் புருவங்களை உயர்த்தி, ''அது சரி; என்னை ஏன் இண்ணைக்குப் பார்க்கணும்னு நினைச்சே?'' என்று வினவினான்.

சிறிதே தயங்கிய சபேசன் தணிந்த குரலில் கூறினான்: ''நேற்றைக்கு வழக்கம் போல் நம் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே....உன் அம்மாவும்... தங்கையும்....''

''சண்டை போட்டுக்கிட்டு இருந்தாங்களா?'' என்று அவசரமாகக் குறுக்கிட்டுக் கேட்டான் நச்சி.

''இல்லை, அண்ணே!.... சமையல் ஒன்றும் செய்யாமல் வெறுமனே படுத்து விட்டிருந்தார்கள்.''

நச்சி இதைக் கேட்டுக் கடகடவென நகைத்தான். ''சரிதான் போ! நான் என்னமோ ஏதோன்னு பயந்துப்பிட்டேன்!'' என்று அலட்சியமாகக் கூறி மீண்டும் சிரித்த அவன், ''எங்க ஊட்டு விஷயம் உனக்குத் தெரியாதா, தம்பி? ஊர் உலகத்து ஜனங்களெல்லாம் மாசத்துக்கு ஒரு நாள்தான் அமாவாசை விரதம் இருப்பாங்க; என் அம்மாவும் தங்கச்சியும் வாரத்துக்கு ரெண்டு மூணு தபாகூட ஒருப்பொழுது இருந்துடுவாங்க—அவ்வளவு பக்தி!'' என்றான் குறும்பான குரலில்.

'அட, பாவி!' என்று உள்ளூற மனம் குமைந்த சபேசனுக்குத் திடீரென்று ஒரு திகில் ஏற்பட்டது. 'அவர்கள் பட்டினி கிடந்ததைப் பார்த்த பின்னும், கையில் பணம் வைத்துக்கொண்டிருப்பவன் ஒன்றோ இரண்டோ கொடுத்து உதவாமல் ரொம்பவும் அநுதாபப் படுகிற மாதிரிச் சொல்ல வந்து விட்டானே, கஞ்சப் பயல்!' என்று தன்னைப்பற்றி அவன் இழிவாகவும் குரோதமாகவும் நினைத்து விடுவானோ என்ற அச்சத் திகில்தான் அது. ஆனால், நச்சி அப்படி நினைத்தவனாகத் தோன்றவில்லை. சாவதானமாகச் சிகரெட் பற்றவைத்துக்கொண்டு வேறு எதைப்பற்றியோ தீவிரமாகச் சிந்திப்பது போல் சில விநாடிகள் மௌனமாயிருந்த அவன், சட்டென்று தன் ஜேபிகளைத் தட்டித் துழாவிப் பார்த்துவிட்டு, ''ம்...தொண்ணூறு பைசா இருக்குது; அது போதும்'' என்று புன்னகையுடன் தனக்குள் முணுமுணுத்தவாறு திரும்பி, ''ஏன், தம்பி! சினிமாப் பாட்டுக்களுக்கு மெட்டுப் போடுறாங்களே, அதுக்கு இங்கிலீஷிலே இன்னா சொல்றது?'' என்று வினவினான்.

''டியூன் கம்போஸ் பண்ணுவது என்பார்கள்.''

''அப்படியா?.... சரி'' என்று சிரித்த நச்சி அந்த வார்த்தைகளை இரண்டு மூன்று முறை தன் வாய்க்குள்ளாகவே சொல்லிப் பார்த்துக்கொண்டான்.

''எதற்கு அண்ணு இதைக் கேட்கிறாய்?''

''ஒண்ணுமில்லே!.... வா, அந்த மோர்மார்க்கெட் வரை கொஞ்சம் போயிட்டு வரலாம்'' என்று நடந்தான் நச்சி. தான் போக வேண்டிய இடத்தையும் மறந்து அவன் பின்னாலேயே சென்றான் சபேசன்.

''ஆமாம்; காலம்பற என் அம்மா, வேதாவுக்கு எதனாச்சும் ஆப்பம் புட்டு வாங்கிக் கொடுத்துச்சா?'' என்று வெகு அக்கறையாக விசாரித்தான் நச்சி.

''நான் இருந்தவரை அப்படி எதுவும் சாப்பிட்டதாகத் தெரியவில்லை.''

'ஓகோ' என்று வேதனையுடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு மேலே நடந்த நச்சி, சபேசனை ஓரிடத்தில் நிற்க வைத்துவிட்டு மூர்-அங்காடிக்குள் சென்று சற்றைக்கெல்லாம் திரும்பி வந்தபோது ஆளே மாறிப் போய்விட்டிருந்தான்!

ஆமாம்; பனை ஓலையால் அழகுற முடைந்து தயாரித்த ஓர் 'ஈவனிங் ஹாட்'டைத் தலையில் அணிந்து, கழுத்துக் காலரில் சாயம்போன பழைய 'டை' ஒன்றைக் கட்டிக்கொண்டு, வலது கையில் ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையும், இடது கையில் தேய்ந்து பழசான இசைத்தட்டுக்கள் இரண்டை அணைத்துக் கொண்டும்; இடுப்பைச் சாய்த்துச் சாய்த்து ஒரு ஸ்டைலாக நடந்து வந்த அவனைப் பார்த்ததும், சிரிப்பு வந்துவிட்டது சபேசனுக்கு.

''இன்னா தம்பி, எப்படி இருக்கிறேன் பார்த்தியா? அசல் துரை கணக்கா இல்லே?'' என்று கேட்டு நகைத்த நச்சியை வியப்புடன் ஏறிட்டு நோக்கிய சபேசன், 'ஆம்' என்று மெல்லத் தலையசைத்தான். **(தொடரும்)**


ஹா! டி.எஸ்.ஆர்.
தைலத்தின்
குணமே தனிதான்!
"ராஜஸ்ரீ"
T.S.R.
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்



"ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு...." என்று மாதங்கி தன் தலையை மட்டும் சற்று வெளியே நீட்டித் தனக்கு முன்னால் நின்றிருந்தவர்களை எண்ணிக் கொண்டிருந்தாள். அப்போது அவளுக்குக் காப்பிக் கொட்டை வாங்கும் கியூ வரிசையில் நின்றாக வேண்டிய பாக்கியம் கிடைத்திருந்தது.

"என்ன எண்ணுகிறாய்?" என்று அவளுக்குப் பின்னால் நின்றிருந்த பாட்டி அம்மாள் கேட்டாள்.

"இன்னும் கிட்டத்தட்ட நூறு பேர்கள் இருப்பார்கள் போலிருக்கிறது. பேருக்கு அரை நிமிஷம் ஆகும் என்று கணக்குப் போட்டால் கூட நாம் வாங்குகிறதற்கு ஒரு மணி நேரம் பிடிக்கும். அது வரையில் காலை வலிக்க நான் நின்று கொண்டிருக்கப் போவதில்லை. கடைசியில் போய் வாங்கிக் கொள்கிறேன்" என்று மாதங்கி கூறிக் கொண்டே கியூ வரிசையை விட்டு விலகி அப்பால் சென்றாள். எதிரே சற்றுத் தூரத்துக்கப்பாலிருந்த ஒரு பெரிய கம்பெனிக் கட்டிடத்தில் வாசற்படிப் பக்கம் போய் நின்றாள். அப்போது காலை ஏழு மணி.

ஸ்திரீகள் கியூ வரிசைக்கு எதிரே ஆண்கள் வரிசை வளைந்து வளைந்து ஓடும் பாம்பின் உடல் போல் நின்று கொண்டிருந்தது. சுமார் முந்நூறு பேருக்கு மேல் கொண்ட அந்த வரிசையின் கடைசியில் நின்றிருந்த வசந்தன் அப்போதுதான் மாதங்கியைக் கவனித்தான். அவனும் வரிசையை விட்டு விலகி அவள் இருந்த இடம் சென்று நின்றான்.

"அட நீங்களா!" என்றாள் மாதங்கி. வசந்தன் தலையை ஆட்டிப் புன்னகை புரிந்தான்.

"இங்கே, கிலோ விலை ஒரு ரூபாய் மலிவாக இருக்கிறதென்பதற்காக இப்படிக் கூட்டம். இங்கே நின்று வாங்கிக் கொண்டு போய், அரைக்கக் கொடுக்க வேண்டும். கடைக்காரன் கொட்டையை மாற்றாமல் இருக்கிறானா என்று கண் கொத்திப் பாம்பு போல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு அவன் இயந்திரத்தின் அடியில் கொஞ்சம் பொடி தங்கியிருக்குமோ என்று சந்தேகப்பட வேண்டும். கடைசியில் 'பொழுதுக்கும் பாட்டுக்கும்' சரியாய்ப் போய்விடும். பேசாமல் காப்பிப் பொடியாக வாங்கிப் போய்விடலாம். சிலபேர் நின்று நின்று பார்த்து விட்டு இப்படித்தான் செய்கிறார்கள்" என்றாள் மாதங்கி.

"ஆமாம், ஆமாம்!" என்றான் வசந்தன்.

"பின் நான் ஏன் வந்தேன் என்கிறீர்களா? எனக்கு இந்தப் பக்கம் வேலையிருந்தது. கியூவைப் பார்த்ததும் நாமும் வாங்கிக் கொண்டு போகலாம் என்று தோன்றிற்று" என்று மாதங்கி தானாகவே சொன்னாள். பிறகு, "நீங்கள்?" என்றாள்.

"எனக்குக் காப்பி பிடிக்காது. அம்மாவுக்கு நல்ல காப்பி என்றால் உயிர். அதற்காக வந்தேன்" என்று வசந்தன் பெருமையுடன் கூறினான்.

"ஓ!" என்றாள் மாதங்கி. அம்மாவைப் பற்றி அவன் கூறுவது இது இரண்டாவது முறை என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது.

சில நிமிஷங்கள் இருவரும் மௌனமாயிருந்தார்கள். பிறகு, மாதங்கி, "இன்னும் எத்தனை நேரம் இப்படி நின்று கொண்டிருக்கிறது? நேற்று குமாஸ்தா பிரேமா, மேலதிகாரியைப் பார்த்துவிட்டுக் கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்தாள் என்பதோடு நிறுத்தி விட்டீர்கள். பாக்கியைச் சொல்லுங்கள்" என்றாள்.

வசந்தன் சொல்லலானான்:

"ஏன் பிரேமா, பைல் சரியாக வைக்கவில்லையா? அதற்காகக்கோபித்துக் கொண்டாரா?" என்று முக்தா கேட்டாள்.

பிரேமா இல்லை என்று சொல்வதற்குப் பதிலாகத் தலையை ஆட்டினாள்.

"குறிப்புக்கள் சரியாக எழுதவில்லையா?" என்று முக்தா விசாரித்தாள்.

பிரேமா தலையை மட்டும் ஆட்டினாள். முக்தா விடவில்லை.

"ஏதாவது அவர் கேட்டதற்குச் சரியாகப் பதிற் சொல்லவில்லையா?" என்று கேட்டாள்.

அதற்கும் தலையாட்டம்தான் பதில்.

"நீ கண்ணைக் கசக்கிக் கொண்டு வரும்படி வேறே என்னதா....னிருக்கும் பிரேமா?" என்று முக்தா விஷமத்தனமாகக் கேட்டாள்.

"கண்ணில் ஈயோ, கொசுவோ பறந்து வந்து விழுந்தால் கண் கலங்கிப் போய்விடாதாக்கும்?" என்று பிரேமா அவளிடம் எரிந்து விழுந்தாள்.

"போதும், போதும்!" என்று முக்தா ஒப்புக்கொண்டாள்.

அப்போது இடைவேளைச் சிற்றுண்டிக்குப் போயிருந்த மற்றவர்கள் திரும்பி வரவே, அந்தப் பெண்களின் பேச்சு அத்துடன் நின்றது.



காணாமற் போன மாணவி



துமிலன்

அன்று சாயங்காலம் குமாஸ்தாக்கள் எல்லாரும் கிளம்பிப் போய் விட்டார்கள். பிரேமாவும், முக்தாவும் மட்டும் சில கடிதங்களை டைப் அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சேவகன் வந்து முக்தாவை யஜமான் கூப்பிடுவதாகக் கூறி விட்டுச் சென்றான்.

கால் மணி நேரமாகியும் முக்தா திரும்பி வரவில்லை. பிரேமாவுக்கு வேலையே ஓடவில்லை. ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். முக்தா, மார்க்கபந்துவுக்கு எதிர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் சந்தோஷத்தால் பூரித்திருந்ததைக் கண்டாள். பிரேமா தான் எடுத்துக் கொண்டு போன கடிதத்தை அதிகாரியிடம் கொடுத்து, அதில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு அர்த்தம் சரியாகப் புரியவில்லை என்று சொன்னாள். மார்க்கபந்து அதைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தபோது முக்தா சில நூறு ரூபாய் நோட்டுக்களை இடுப்பில் அவசரம் அவசரமாகச் செருகிக் கொள்வதை அவள் கடைக் கண்களால் கவனித்தாள். பிறகு அவள் சென்று விட்டாள். சில நிமிஷங்களுக்கெல்லாம் முக்தா திரும்பி வந்தாள்.

''எனக்குப் புதிதாக ஒரு வேலை கொடுக்கப்போகிறாராம். அதைப் பற்றி விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்'' என்று முக்தா தானாகவே கூறினாள்.

''அப்படித்தானிருக்கும் என்று நான் நினைத்தேன்'' என்றாள் பிரேமா. பிறகு, 'என்னிடம் பத்து ரூபாய் நோட்டாகப் பத்து இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு ஒரு நூறு ரூபாய் நோட்டுக் கொடேன்'' என்று பிரேமா சர்வ சாதாரணமாக அவளிடம் கேட்டாள்.

''நூறு ரூபாய் நோட்டுக்கு நான் எங்கே போகிறது?'' என்று முக்தா உதட்டைப் பிதுக்கினாள்.

''இங்கே போகிறது'' என்று சொல்லி அவள் இடுப்பைச் சோதிக்கப் பிரேமாவின் வாயும் கையும் துடித்தன. ஆனால் அவள் சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

பிறகு இருவரும் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் தங்களுக்குள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

மறுநாள் கணபதி என்ற தலைமைக் குமாஸ்தாவான வாலிபன், மார்க்கபந்துவின் அறைக்குச் சென்றுவிட்டு வந்தான். அவன் பிரேமாவிடம் வந்து, ''நான் விடை பெற்றுக் கொள்கிறேன்'' என்று தொண்டையடைக்கச் சொன்னான்.

''என்ன, ஏன்?'' என்று அவள் கவலையுடன் கேட்டாள்.

''என்னைக் கன்யாகுமாரிக்கு மாற்றியிருக்கிறார்கள்'' என்று தெரிவித்துவிட்டுப் போய்விட்டான்.

பிரேமாவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. ஏனென்றால், கணபதி அவளுக்கு ஆபீஸ் வேலையெல்லாம் சொல்லிக் கொடுத்தவன். மிகவும் யோக்கியன். பிரேமாவுக்கு அவனிடம் தனி அபிமானம் உண்டு. அவர்களிருவரும் ஒரொரு சமயம் ஸினிமாப் படம் பார்க்கச் சேர்ந்து போவதுண்டு. அது எல்லோருக்கும் தெரியும்.

அவள், ராஜ்யத்தின் தென் கோடிக்குக் கணபதி மாற்றலாகிப் போவதைப் பற்றி எண்ணி உற்சாகமிழந்து கவலைப் பட்டுக் கொண்டிருந்த போது முக்தா வேகமாக வந்தாள். அவள் முகத்தில் சந்தோஷம் கூத்தாடிக் கொண்டிருந்தது.

''பிரேமா, பிரேமா! மிஸ்டர் வேங்கடேசனுக்கு வேலை பிரமோஷனாகி யிருக்கிறது. கணபதி பிரமோஷன் பேரில் கன்னியாகுமரிக்குப் போகிறாராம். அந்த இடத்தில் அவர் வருகிறாராம்'' என்று கூறினாள்.

''வரட்டுமே!'' என்று கூறிவிட்டு அப்பால் சென்றாள்.



வேங்கடேசனும் முக்தாவும் நண்பர்களாகப் பழகுபவர்கள் என்று அவளுக்குத் தெரியும். அவளுக்குப் பொறாமை பிடுங்கித் தின்றது. முக்தா, மார்க்கபந்து, வேங்கடேசன், பிரமோஷன், கணபதி, ஊர் மாற்றம், நூறு ரூபாய் நோட்டுக்கள், இவற்றையெல்லாம் சம்பந்தப்படுத்தி என்னென்னவெல்லாமோ கற்பனை செய்து கொண்டாள். முக்தாவைப் பற்றி இரகசியமாக யார் காதிலாவது போட்டு வைக்க வேண்டுமென்று துடித்தாள். ஆனால், முக்தாவும் தான் கண் கலங்கியிருந்ததைப் பற்றித் தன்னைப் போலவேதான் ஏதாவது விகற்பமாகக் கற்பனை செய்து கொண்டிருக்கக் கூடும் என்று பயந்தாள். ஆகையால் வாயை மூடிக் கொண்டிருந்தாள்.

மறுதினம் காரியாலயத்தில் உள்ளவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து பட்டுசாமி என்ற குமாஸ்தா பட்டுக்கோட்டைக்கும், உஷா என்ற பெண் உதகமண்டலத்துக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. மார்க்கபந்து எதற்காக இப்படித் திடீர் திடீர் என்று மாற்றி உத்தரவு போடுகிறாரென்று ஒருவருக்கும் புரியவில்லை. ஒருவேளை அவர்கள் மீது ஏதாவது அக்கப்போர் மனுக்கள் வந்திருக்கலாம். அதற்குத் தண்டனையாகத் தொலைவில் உள்ள இடங்களுக்கு மாற்றியிருக்கலாம் என்று சிலர் நினைத்தனர்.

பிறந்த தேதி சரியா என்று பார்ப்பது சம்பந்தமாக மார்க்கபந்து சிலருடைய எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டுகளைக் கேட்டிருந்தார். பழைய அறுபது வருடப் பஞ்சாங்கங்களை வேறு புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறந்த வருஷம் தேதிக்குச் சரியான ஆங்கில வருஷம் தேதி போட்டிருக்கிறார்களா, அல்லது மாற்றிப் போட்டிருக்கிறார்களா என்று கண்டுபிடிக்கத்தான் அப்படி அவர் செய்கிறார் என்ற முடிவுக்கு வந்தனர்.

மார்க்கபந்து இத்தகைய காரியங்கள் செய்யத் தொடங்கி ஒரு வாரமாகியிருக்கும். அதற்கடுத்த வாரம் அவர் காரியாலயத்துக்கு வரவில்லை. அதற்குப் பதிலாக ஆபீஸ் சூபிரெண்டெண்டு சுயம்பு தாற்காலிகமாக வேலை பார்த்தார். அவருக்கும் மார்க்கபந்துவுக்கும் அவ்வளவாகப் போதாது. ஏனென்றால் அவர் லஞ்சம் வாங்குகிறார் என்று மார்க்கபந்து சந்தேகப்பட்டார். அதனால் சுயம்பு யாருக்காவது ஏதாவது செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்தால் அதற்கு நேர் விரோதமாக உத்தரவு போடுவார். மார்க்கபந்து தமது சொந்தக் காரியங்களை முன்னிட்டு ஆறு மாத காலம் சம்பளமில்லாமல் லீவு எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிய வந்தது.

சுயம்பு மார்க்கபந்துவின் பதவியை ஏற்றதும், அவரது மேஜையில் உள்ள முக்கியமான பைல்கள், கடிதங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் புரட்டிப் பார்த்தார். மேஜையின் அடி அறையில் குமாஸ்தாக்கள், உதவி அதிகாரிகளின் பிறந்த தேதி சம்பந்தப்பட்ட கடிதங்கள் இருந்தன. ஒவ்வொருவர் சம்பந்தப்பட்ட கடிதத்துடன் அவரது எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டும், ஜாதக நகல்களும் இருந்தன. ஒவ்வொரு ஜாதகத்தின் மீதும் மார்க்கபந்து குறிப்புகள் எழுதியிருந்தார்.

அவற்றைப் படித்துப் பார்த்த சுயம்பு ஆச்சரியப்பட்டார். கன்னியாகுமரிக்கு மாற்றப்பட்ட கணபதியின் ஜாதகத்தின் மீது 'இந்த ஜாதகனுக்குத் தற்காலம் தூர தேசம் பிரயாணம் என்று இருக்கிறது. ஆகையால் வேறு ஊருக்கு மாற்ற வேண்டும்'' என்றிருந்தது. வேங்கடேசனின் ஜாதகத்தின் மீது ''இந்த ஜாதகனுக்கு வேலை உயர்வு ஏற்படும்!'' என்று எழுதியிருந்தது. சுயம்புவினுடையதில், 'இந்த ஜாதகனுக்கு எதிர் பாராமல் அதிகப்படி வரும்படி வந்து கொண்டேயிருக்கும் என்றிருக்கிறது. ஆகையினால் லஞ்சம் வாங்குவார். நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தது. மார்க்கபந்துவின் ஜாதகம்கூட இருந்தது. அதில் 'இதற்குடையவர் தர்மம் செய்வார். இன்னும் ஆறு மாதங்களுக்குப் போதாத காலம். வெளி வாசலில் போகாமல் வீட்டிலிருப்பதுதான் நல்லது. லீவு எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று எழுதியிருந்தார். பிரேமாவினுடையதில் 'கிரகங்கள் இவள் நடத்தையைப் பற்றிச் சிலாக்கியமாகக் கூறவில்லை. ஆகையால் இவள் குமாஸ்தாக்களுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்டிக்க வேண்டும்' என்று இருந்தது. முக்தாவினுடையதில் 'இந்தப் பெண்ணின் ஜாதகத்தில் அவளுக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆகவேண்டும் என்று இருக்கிறது. அவளை அதைப் பற்றி விசாரித்தேன். அதற்குப் பணமில்லை என்றாள். அவள் ஜாதகக் கிரகங்களின் பலன்களின்படி அவளுக்கு எதிர்பாராமல் பண உதவி கிடைக்கும் என்றிருந்தது. அன்றைக்குத் தான் சம்பளம் வாங்கிய பணத்தை மேஜை மீது வைத்திருந்தேன். முக்தாவின் கல்யாணச் செலவுக்கு வைத்துக் கொள்ளும்படி அதிலிருந்து ஐந்நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தேன்' என்று சிவப்புப் பென்சிலால் பளிச்சென்று எழுதியிருந்தார்.

வசந்தன் இந்தக் கதையை முடித்த பிறகு மாதங்கி யோசனை செய்த வண்ணமிருந்தாள். பிறகு ''இப்படி நடக்குமா என்று நினைத்தேன். ஜாதகம் பொய்க்காது. பொய்க்கக் கூடாது என்று எண்ணுபவர்கள் இதுவும் செய்வார்கள், இன்னமும் செய்வார்கள்!'' என்றான்.

''டெல்லியில் ஒரு பெரிய அகில இந்திய உத்தியோகஸ்தர். அவர் தமது ஜாதக பலன் தெரிந்து கொள்வதற்காக மாதம் ஒரு முறை திருவண்ணாமலைக்கோ, திருத்தம்பி மலைக்கோ வருகிறாராம்'' என்றான் வசந்தன்.

இருவரும் கியூ வரிசையைக் கவனித்தார்கள். பெண்கள் கூட்டம் முக்கால்வாசி கலைந்திருந்தது. ஆண்கள் கூட்டம் இன்னும் கலையவில்லை. ''குறைந்தது கால் மணியாவது காத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறதே'' என்றாள் மாதங்கி.

''ஆமாம்! அதற்குள்... அதற்குள்....'' என்றான் வசந்தன்.

சகல வீட்டு வசதிகளுடனும் சுகமான பிரயாணத்திற்கு

S C I


தி ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

(ஒரு இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:

ஸ்டீல் கிரீட் ஹவுஸ் 4வது மாடி, தின்ஷாவாச்சா ரோடு, பம்பாய்-1

சென்னை - நாகப்பட்டினம் - ஸ்ட்ரெயிட்ஸ்



t. S. S. ஸ்டேட் ஆப் மதராஸ்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
10-5-1965	11-5-1965

அன்று புறப்படும்

இதர விவரங்களுக்கு மேற்கண்ட ஏஜண்டுகளை அணுகவும்

K. P. V. ஷேக் முகம்மது ராவுத்தர் & கோ.

41, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1
தபால் பெட்டி நெ. 1264
போன்: 22761-3 தந்தி: "SHIPINDIA"

பண்டகசாலை
நாகப்பட்டினம்
போன்: 72 தந்தி: "SHIPINDIA"

''நான் ஒரு கதை சொல்ல வேண்டும் என்கிறீர்களா? சொல்கிறேன்'' என்று, மாதங்கி தானாகவே கேட்டுக் கொண்டாரம்பித்தாள்.

''ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு பெண்கள் ஹைஸ்கூல் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடப் பெண்கள் எல்லோரும் இடுப்பில் வாடாமல்லி வர்ணப் பாவாடை கட்டிக் கொண்டு மஞ்சள்வர்ண ஜாக்கெட் போட்டுக் கொண்டு மேலே நீல வர்ண மேலாக்கு தரித்திருப்பார்கள். அது பள்ளிக்கூட டிரெஸ்.

அந்தப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியையின் பெயர் குமாரி சஞ்சலகுமாரி. அவளுக்கு வயது சுமார் நாற்பது இருக்கும். அவளுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை என்று எல்லோரும் தெரிந்து கொள்வதற்காகத் தான் முதலில் குமாரி என்ற பட்டம்.

அவள் நல்ல சாமர்த்தியசாலி. கெட்டிக்காரியான ஹெட்மிஸ்டரஸ் என்று பெயரெடுத்திருந்தாள். அதனால் எல்லோரும் தங்கள் தங்கள் பெண்களை அவள் பள்ளிக்கூடத்தில் சேர்க்க ஆசைப்பட்டார்கள். நாளடைவில் பள்ளிக்கூடத்தில் இட நெருக்கடி ஏற்பட்டது.

பள்ளிக்கூடக் காம்பவுண்டுக்கு உள்ளே காலியாக இருந்த இடத்தில் மாட்டுக் கொட்டகை மாதிரி போட்டு வகுப்புக்கள் நடத்தினார்கள். கூடாரங்கள் அடித்துக்கூட அவற்றில் வகுப்புக்களை நடத்தினார்கள். ஒரு சமயம் ஒரு வகுப்பில் ஒரு பெண் மடியில் இன்னொரு பெண்ணை உட்கார வைத்துக்கூடப் பாடம் கேட்கும்படியாயிற்று.

குமாரி சஞ்சலகுமாரி பள்ளிக்கூடத்தில் புதிய வகுப்புக்கான கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அதற்கு வேண்டிய பணத்துக்கு வழக்கம் போல நாடகங்கள், பாட்டுக் கச்சேரிகள் நடத்தித்தான் பணம் வசூலித்தாக வேண்டுமென்று தெரிந்தது. வழக்கம் போல் ஒரு மெல்லிசை ராணியின் பாட்டுக் கச்சேரி, ரூ. ரூ. என்பவரின் நாடகங்கள், ஊர்வசி சகோதரிகளின் நடனக் கச்சேரி எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்தாள். வழக்கம்போல் டிக்கட்டுகளைப் பள்ளிக்கூடப் பெண்களிடமும் கொடுத்து விற்று வரச் சொன்னாள்.

டிக்கெட்டுகளின் விலை 2, 5, 10, 25, 50, 100 என்று இப்படி. பல பெண்கள் 2 ரூபாய் டிக்கட்டுகள் நிறைய விற்றனர். ரஞ்சனி என்ற பெண் மட்டும் 50 ரூபாய் டிக்கட்டில் ஒரு புத்தகமும், 100 ரூபாய் டிக்கெட்டில் இருபதும் விற்றிருந்தாள். இதைக் கண்டு சஞ்சலகுமாரி சந்தோஷமடைந்தாள்; ஆச்சரியமும் அடைந்தாள்.



'' இலங்கை சர்க்கார் இரண்டு புலிகளைக் கேட்டதாமே? இந்தப் புலிகளை வாங்கிகிட்டு இருக்குப் பதிலாகப் புலியைக் கொடுத்துடுங்க. பணம் வேணும் !''

அந்த ரஞ்சனி என்ற பெண்ணுக்கு வயது பதினாறு இருக்கும். நல்ல வளர்த்தி. இருபது வயதான பெண்ணைப் போல் இருப்பாள். வாடாமல்லிவர்ணப்பாவாடை கட்டி நீல மேலாக்கு அணிந்த சம வயதுள்ள பெண்களைச் சட்டென்று அடையாளம் கண்டு பிடித்து விட முடியாது. ஆனால் ரஞ்சனியை மட்டும் கண்டுபிடித்து விடலாம். அவள் வளர்த்தியாயிருந்ததோடுமட்டுமல்ல, நல்ல வசீகரமுள்ள முகம்.

அவள் டிக்கெட் விற்கப் போகும் வீட்டிலுள்ள மனிதர் ஐந்து ரூபாய் டிக்கெட் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டு போவார். பணத்துக்காகப் பீரோவைத் திறக்கும் போது ஐம்பது ரூபாய் டிக்கெட் வாங்கலாமென்று நினைப்பார். பிறகு நூறு ரூபாயை எடுத்து வந்து ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொள்வார்.

இதற்காக ரஞ்சனி யாரையும் ''ஸார், ஸார்!'' என்று கெஞ்சுவதில்லை. 'ஸாரி'ன் மேஜை மீது சாய்ந்து கேட்பதில்லை. அவரது மனைவியைப் போய் சிபாரிசு பிடிப்பதில்லை.

ஒரு நாள் அவளிடம் டிக்கெட் புத்தகங்கள் இல்லை. சஞ்சலகுமாரி அவளிடம் 100 ரூபாய் டிக்கெட் புத்தகத்தைக் கொடுத்து ''நீ கேவலம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் டிக்கெட்டுகளை விற்க வேண்டியதில்லை'' என்றாள் பெருமையுடன். அந்த வாரம் ஹெட்மிஸ்ட்ரஸ் திருத்திய இங்கிலீஷ் காம்போஸிஷன் நோட்டில் ரஞ்சனிக்கு 25க்கு 24 மார்க்குப் போடப்பட்டிருந்தது.

ரஞ்சனி டிக்கெட் புத்தகத்தை வாங்கிக் கொண்டு குஷியாகப் போனாள். அவள் ஒரு புதுக் காலனியில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய பங்களாவுக்குள் சென்றாள்! அப்போது மாலை மணி ஆறு.

அன்று இரவு ஒன்பது மணி இருக்கும். சஞ்சலகுமாரி டிக்கெட்டுகள் வசூலைப் பற்றிய கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அப்போது டெலிபோன் மணி அடித்தது.

''நான்தான் சேஷய்யா. ரஞ்சனியின் தந்தை. பள்ளிக்கூடத்தில் ஏதாவது விசேஷ நிகழ்ச்சியா?'' என்று விசாரித்தார்.

''ஒன்றுமில்லை!'' என்றாள் சஞ்சலகுமாரி.

''பின்னே ரஞ்சனி இன்னும் வரக் காணோமே!'' என்று சேஷய்யா கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள்.

மாதங்கி இப்படிச் சொல்லி வரும்போது காப்பிக்கொட்டை வாங்கும் பெண்கள் கியூ வரிசையில் ஒருவரே பாக்கி இருந்ததால், கதையை நிறுத்திவிட்டு விரைந்து சென்றாள்.







1. சென்னை ராஜ்ய சங்கீத நாடக அகாடமி நடத்திய வீணை கோஷ்டி கானப் போட்டியில் திருவல்லிக்கேணி கலைமகள் இசைக் கல்லூரி பரிசு பெற்றது. முதன் மந்திரி வெள்ளி வீணையைப் பரிசளிக்கிறார். 2. திரு பி. சபாநாயகம் அவர்களின் புதல்வி குமாரி கமங்கலம் மீனாட்சியின் பரதநாட்டிய நிகழ்ச்சி புதுதில்லியில் நடைபெற்றது. சொக்கலிங்கம் பிள்ளையின் சிக்ஷை. சுத்தமான ஆட்டம். வயது பத்துத்தான் ஆகிறது. விரைவில் பிரகாசிக்கவேண்டிய தாரை. 3. செகந்திராபாத் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கர மந்திர் கட்டட நிதிக்காக நடைபெற்ற ராமாயண விழாவை ஆந்திர கவர்னர் பட்டம் தாணுப் பிள்ளை ஆரம்பித்து வைத்தார். ராமாயணப் பிரசங்க மாரி பொழிந்தவர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள். 4. டியூப் இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸர் வில்லியம் ஸ்டிராத் அவர்களின் சென்னை விஜயத்தின் போது குமாரி ஹேமமாலினியின் நாட்டிய விருந்து நிகழ்ந்தது.



தப் தப் தப்!

என்ன ஓசை?

காலடி ஓசை!

யாரோ விரைந்து நடக்கிறார்கள்.

நடக்கிறார்களா? இல்லை, ஓடுகிறார்கள்.

ஓடும் பொழுது பாதங்கள் எழுப்பும் ஓசைதான் அது. ஓடுகிறவர்கள் வீட்டுக்குள் ஓடுகிறார்கள் என்பதை ஒலிக் குறிப்பால் உணர முடிகிறது.

கண்ணாடியில் தன்னைத்தானே அழகு பார்த்துக் கொண்டிருந்த முரளி, ஓசை சென்ற திக்கை நோக்கி முகத்தைத் திருப்பினான்.

கண்ணாடிக்கு அருகிலேயே இருந்த ஒரு பொம்மை அவனது கவனத்தைத் திருப்பிவிட்டது. மலர்ப் படுக்கையில் மலர் நகை பூண்டு மிக ஒய்யாரமாகச் சயனித்திருந்த மங்கை நல்லாள் சகுந்தலையின் பொம்மை அது. அவனது பார்வையை மேலே செல்ல வொட்டாமல் தடுத்து நிறுத்தித் தனது எழிலிலே கிறங்க வைத்தது. அதன் ரூபலாவண்



யத்திலே மயங்கித் தன்னை மறந்து நின்றவன் ஓசை வந்த திக்கைப் பார்க்க ஒரு கணம் மறந்து விட்டான்.

அந்தக் காலத்தில், இந்தக் காலத்தைப் போன்ற சட்ட திட்டங்களோ கட்டுப்பாடுகளோ ஏது? அவன் நண்பர்கள் கூறியது அத்தனையும் உண்மைதான். உடலை மூடி மறைக்க இந்த நாட்களில் உடை என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறதே! அந்த நாட்களில்.... சகுந்தலையின் சௌந்தரியம் செயற்கைக் கட்டுத் திட்டங்களுக்கா உட்பட்டிருந்தது? அந்தக் காலத்தைச் சேர்ந்தவர்களுக்கு எத்தனை சுதந்திரம் இருந்தது? அவர்கள் தங்கள் மனத்துக்கிசைந்தவாறு இருக்கவும், வாழவும் விளையாடவும் அல்லவா சுதந்திரம் இருந்தது!

இந்தக் கல்யாணம் — கார்த்திகை என்ற இணைப்பு — மனிதன் பிணைத்துக் கொண்ட பிணைப்பு.

அவன் நண்பர்கள் அனைவரும் அவனுக்கு ஆணித்தரமாக அளித்துச் சென்ற ஹிதோபதேசங்கள் இவை. ஒரு முறை இரட்டிப்பு வேகத்துடன் அவன் சிந்தனையில் சுழன்றன. சிந்தனையிலிருந்து விடுபட்டு வீட்டினுள் காலடி ஓசை சென்ற திக்கைத் திரும்பிப் பார்க்க அவனுக்குச் சிறிது நேரம் பிடித்தது.

அவன் பார்வை அந்தப் பக்கம் சென்ற பொழுது காற்றில் பறந்துகொண்டிருந்த முந்தானைத் தலைப்பு மட்டுமே ஒருகணம் தெரிந்தது. ஓடிக் கொண்டிருந்த காலடி ஓசையை முந்திக்கொண்டு அது மறைந்தும் விட்டது. முரளி ஒரு கணம் திகைத்தான். தூக்கத்திலிருந்து திடுதிப்பென்று விழித்தெழுந்தவன் போல ஒருகணம் துணுக்குற்றான்; உணர்வும் பெற்றான்.

யாரோ பெண் அல்லவா உள்ளே ஓடி யிருக்கிறாள்! யாரா யிருக்கலாம்? உள்ளே வேலைக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது பார்க்க வந்திருப்பாளோ? வேலைக்காரர்களைப் பார்க்க வந்தவளா யிருந்தால், இப்படித் தலைவாசல் வழியாக வந்திருக்க மாட்டாள். புறக்கடை வழியாகத்தான் வந்திருப்பாள். அதோடு, அவள் உடுத்தியிருந்த சேலைத் தலைப்பு பணியாட்கள் கட்டுவது போல் எங்கிருந்தது? மெல்லியதாக நாகரிக மோஸ்தர் நிறைந்ததாக அல்லவா இருந்தது!

அவனது நண்பர்கள் நாள் முழுதும் பேசிய பேச்சுக்கள் மீண்டும் அவன் காதுகளில் ரீங்காரம் செய்தன. அவர்கள் தான் எத்தனை மகிழ்ச்சியோடு கழித்தார்கள் பொழுதை! அத்தனை பேசினார்களே; அவன் தமக்கையின் காதுகளில் விழும்படியாகவா பேசினார்கள்? விழக் கூடிய பேச்சும் அல்லவே!


பகல் முழுவதும் பொன்னிறக்கிரணங்களை வாரி இறைத்தான் பகலவன். காற்றும் எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் உடன்படாமல், பூம்புதர்கள் மீதோடி வீசியது. இயற்கையின் நியதி என்ன என்பதை எடுத்துக் காட்டுவதுபோல்.

அப்பொழுது சங்கரன் சொன்னான்: ''இந்த ஆண் — பெண் உறவு இருக்கிறதே, இது பௌதிகமானது, உடலை ஒட்டியது.''

''எஸ், லவ் இஸ் பாஷ். காதல் என்பது கதை. பிரேமை என்பது பொய். சொல்லப் போனால் இந்தக் காதல் ஒரு பசு தர்மம்.'' - இது ராஜ்.

''கல்யாணம் என்பது மனிதன் தன் சௌகரியங்களையும் சந்தர்ப்பத்தையும் உத்தேசித்து ஏற்படுத்திக் கொண்டது.'' — தாஸின் ஆணித்தரமான அபிப்பிராயம் இது.

எல்லோரும் ஏகோபித்துச் செய்த முடிவு: ''வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் அபூர்வமாகத்தான் கிட்டுகின்றன. கிடைக்கும் சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடக் கூடாது. அதுவும் முரளியைப் போன்ற செல்வச் சீமான்கள் கடவுள்


கல்யாணசுந்தரி ஜெகந்நாத்
உதிர்ந்த
மலர்

கிருபையினால் கிட்டியுள்ள அரிய வாய்ப்பை இழக்கவே கூடாது.''

இப்படிப் பலர் சேர்ந்து ஒருமுகமாக முடிவு கட்டியபின் அப்பீல் ஏது?

என்ன?

காலடி ஓசை மீண்டும் கேட்கிறதே!

கேட்கிற தொனியிலிருந்து உள்ளே போனவர்கள் திரும்பி வருகிறார்கள் என்று தெரிகிறதே!

யாராயிருந்தாலும் இந்த வழியாகத்தான் வெளியே போக வேண்டும். வேறு வழி கிடையாது. எனவே, யாரென்று பார்த்து விடலாம்.

அதோ!

வருகிறது யார்?

அடே, ராணி!

எத்தனையோ நாட்களாக அவளும் அவன் வீட்டுக்கு வந்து போகிறாள்! ஒரு நாளாவது அவன் அவளிடம் பேச்சுக் கொடுத்ததில்லை. ஆனால் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் எத்தனையோ முறை தோன்றியதுண்டு.

ராணி யென்றால், அவனை அறியாமலே ஒரு கிளுகிளுப்பு ஏற்படும் அவனுக்கு. வைத்த கண் வாங்காமல் பார்க்கத் தோன்றும். இதயத்தின் அடித்தளத்தில் ஆழ்ந்துகிடந்தது ஒரு வேட்கை. இத்தனை நாட்களும் இல்லாமல் இன்று அது ஏனோ தலை தூக்கியது. தலை மட்டுமா தூக்கியது? தலைவிரித்தாடவே முயன்றது!



''ராணி, இந்தா! உன்னைத்தான், சற்று நில்!''

அடி ஓசை சட்டென்று நின்றது. ஆம், ஜலஜாராணி ஒரு கணம் நின்று முரளியைத் திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு ஒரே வியப்பு. தன் கண்கள் மீதே நம்பிக்கை ஏற்படவில்லை. அதிசயத்திலும் அதிசயம்! முரளியா அவள் பெயர் சொல்லி அழைத்திருப்பான்?

ஒரு கணத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''சுசீலாவைப் பார்த்துப் போக வந்தேன்!'' என்றாள் தலையைச் சாய்த்தவாறு.

''சுசீலாவா? இல்லையே! அவள் அக்காளோடு ஊருக்குப் போயிருக்கிறாள். எதிர்பாராத திடீர்ப் பயணம்!'' என்றான் முரளி சிரித்துக்கொண்டு. அவள் வாசற்படியில் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று பேசிய பாவனை அவனை உள்ளே வருமாறு அழைத்தாற் போலிருந்தது.

''வேலைக்காரங்க சொன்னாங்க. அதனால் தான் திரும்பிப் போகிறேன்!'' என்றாள் ராணி. அவள் நின்ற தோரணையோ, காலில் கலக் கஞ்சியைக் கொட்டிக் கொண்டு அங்கிருந்து ஓட முயல்வதைப் போலிருந்தது.

''அவ்வளவுதானே? அவள் இல்லாவிட்டால் என்ன? நான் இல்லையா? வரக் கூடாதா உன்னை? — ஏதாவது விசேஷம் உண்டா? நான் ஒரு முட்டாள். ஏதாவது விசேஷம் உண்டா என்று உன்னைப் போய்க் கேட்கிறேனே, ஒன்றும் தெரியாதவன்போல. நீங்க இரண்டு பேரும் எப்போது பார்த்தாலும் கல்லூரியைப் பற்றி ஏதாவது பேசிக் கொண்டிருப்பீர்களே! எனக்குத் தெரியாத விஷயமா?'' என்று ஒரே மூச்சில் முடித்தவன் இன்னும் ஒதுங்கி இடம் கொடுத்தான்.

''இல்லிங்க. நான் போகணும். எனக்கு ஜோலி இருக்கு!'' என்றாள் ராணி சற்று அழுத்தமாக.

''போகலாமே! ஒரு நிமிஷம் உட்காரக் கூடாதா?'' என்று கேட்டவண்ணம் தன் அறைக்குள் காலடி எடுத்து வைத்த முரளி அவளுக்காக ஒரு நாற்காலியை இழுத்தான்.

''ஊஹூம். சுசீலாவிடம் ஒரு முக்கியமான காரியமாக வந்தேன். எனக்கு அவசரமாகப் போகணும். நான் வருகிறேன்!'' என்று ராணி படபடத்தாள்.

முரளிக்கு ராணியின் சொற்களில் உள்ள படபடப்பும் அவசரமும் புலனாகவில்லை. அவளுடைய உடல் வாளிப்புத்தான் அவன் கண்களோடு உறவாடியது.

''என்ன காரியம் என்று என்னிடம் சொல்லக் கூடாதா? என்னையும் உங்களில் ஒருவனாக நினைத்துச் சொல்லலாமே!''

ராணி சிலையாகச் சமைந்து அசைவற்று நின்றாள்.

''நான் தெரிந்துகொள்ளக் கூடாதா? சுசீலா வேறு, நான் வேறு என்று நினைக்க வேண்டாம்!'' என்றான் முரளி, இளநகை சிந்தியபடியே. ''ஒரு கணம் உட்காரலாம்!'' என்று கூறி அவன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். ராணிக்கு ஒரு பெரிய சோபாவைக் காட்டினான்.

''நேரமாகிறது எனக்கு. நான் போகணும். இருந்தாலும் நீங்கள் இவ்வளவு தூரம் சொல்வதற்காக உட்காருகிறேன்!''

ராணியின் குரலில் உள்ள இனிமை, மென்மை, பணிவு ஆகியவை முரளியின் காதுகளிலே தேவாமிருதமாக விழுந்தன.

பெண்ணின் குரலுக்கே ஒரு பெருமை. பெண்கள் அனைவருமே இப்படி ஓர் அடக்கத்துடன்தான் பேசுவார்கள் போலும்! பெண்ணின் இந்தப் பணிவிலேதான் எத்தகைய கவர்ச்சி! ஆண் உள்ளத்தை ஈர்க்கும் ஆற்றல் அல்லவா பொதிந்து கிடக்கிறது! அநாதியான சிருஷ்டியில் எந்த நாகரிகத்துக்கும் எந்தப் பண்பாட்டுக்கும் அடங்காமல் தலைதூக்கி நிற்கும் ஆணவத்தைக் கூட அல்லவா அது அடிபணிய வைத்துவிடுகிறது!

ராணி மெதுவாக உள்ளே அடி எடுத்து வைத்தாள். சோபாவின் மூலையில், மயிலாசனத்தில் முருகப் பெருமான் அமர்ந்திருப்பது போல உட்கார்ந்தாள்.

'தன மூலம் இதம் ஜகத்' 'உலகம் பணத்தில் ஓடுகிறது' என்பார்கள். அவனோ செல்வச் சீமான். அவனுக்கு உலகத்தில் நடக்கக் கூடாதது என்று என்ன இருக்கிறது? காசை விட்டெறிந்தால் எதுவுமே கைகூடுகிறது. இதைத்தானே அவனது நண்பர் குழாம் அடிக்கடி கூறி வருகிறது. வாழ்க்கையில் அவன் கண்டதும் இதுதானே?

''நீங்கள் என்ன சொல்ல வந்தீர்கள்? இப்போது சொல்லுங்கள்!'' என்றான் முரளி. பக்கத்து பங்களாவில் இருந்த தயாபாயி அவன் நண்பன். குஜராத்திக்காரன். பகலில் ஹோலிப் பண்டிகையை முன்னிட்டு அவன் சட்டை மீது மஞ்சள் நீரை ஊற்றியிருந்தான். அந்தக் கறையைக் கையினால் தடவிய படியே முரளி அவள் பதிலுக்காகக் காத்திருந்தான்.

''ஒன்றுமில்லை. கொஞ்சம் பண முடை. சுசீலாவிடம் கேட்டிருந்தேன். தேவையானால் கேட்கச் சொல்லியிருந்தாள். அதற்காகத் தான் வந்தேன்!'' என்றாள் ராணி.

''பூ! இவ்வளவுதானே? இதற்காகவா இப்படி மென்று விழுங்கிக்கொண்டிருந்தீர்கள்? உங்களுக்கு எவ்வளவு வேணும்? சொல்லுங்கள்!'' என்று நமட்டுச் சிரிப்புடன் கேட்டான் முரளி.

''சங்கோசமில்லாமல் கேளுங்கள்!'' என்று கூறியபடி எழுந்து சென்று பக்கத்திலிருந்த மேஜை டிராயரைத் திறந்தான்.

''என் அப்பாவுக்கு உடல் நலம் சரியில்லை. மிகவும் முடியாமல் இருக்கிறார். அவருக்கு ஆஸ்பத்திரி என்றால் பிடிக்காது; பயம். ஆஸ்பத்திரி வைத்தியத்தில் நம்பிக்கையும் அவ்வளவாக இல்லை. நான்தான் அவரைப் பார்த்துக் கொள்ள வேண்டும். எனக்கு உற்றார் உறவினர் என்று உதவிக்கு ஒருவர் கிடையாது.'' இவ்வாறு கூறிக்கொண்டே ராணி எழுந்தாள். அவள் குரலில் இல்லாமையின் தைன்யம் தாண்டவமாடியது.

முரளி பணத்தை எண்ணி ஓர் உறையினுள் வைத்தான். ''இந்தாருங்கள், இதில் முந்நூறு ரூபாய் இருக்கிறது. போதுமா?'' என்று இலேசாகச் சிரித்துக் கொண்டே அவள் கையில் தரப் போனான்.

ராணியின் இதயம் பொங்கியது. மகிழ்ச்சியும் நன்றி உணர்வும் அலைமோதின. 'அப்பா! முரளி எவ்வளவு நல்லவர்!' இன்றுவரை அவனிடம் ஒரு வார்த்தை பேசியிருப்பாளா? இத்தனை நாட்களும் அவனது எந்தக் குண நலன்களுக்காக அவனை நேசித்தாளோ, அதை அவனிடம் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு அவள் உள்ளத்தைத் தாக்கியது. ஆனால் சொல்லத்தான் தைரியம் வரவில்லை. காரணம், இப்பொழுதைய சூழ்நிலை சரியில்லை. பிராணாபத்தாகக்கூட முடியக் கூடும். இதுவரை அவள் உள்ளமும் காதலும் அவனுக்குத் தெரியாதல்லவா?

தெரியாமல் இருக்கலாம். அதனால் என்ன? அவன்தான் அவ்வப்போது முரளியின் கண்களிலே தெறித்த ஆசை அலைகளை எவ்வித முயற்சியும் இன்றியே கண்டிருக்கிறாளே! ஆயினும் சட்டப்படி முரளி அவளுக்கு உரிமையாளன் ஆகவில்லையே!

''இந்தக் கடனைக் கூடிய சீக்கிரத்திலேயே தீர்த்து விடுகிறேன்!'' என்றாள் ராணி.

''கடன் கிடக்கட்டும். தீர்த்துக்கொண்டால் போயிற்று! இன்னும் ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டான் முரளி.

ராணியின் சந்தோஷம் வரம்பு கடந்து போயிற்று. அவளும் அவள் தந்தையுமாகச் சேர்ந்து கழிக்கக் கூடிய திவ்வியமான எதிர் காலம் அவள் மனக் கண் முன்னே சுழன்றது. அதிலும் அவள் தந்தைக்கு உயிர்ப் பிச்சை அளிப்பது யார்? அவள் தன் உள்ளக் கோயிலில் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பிரதிஷ்டை செய்து வைத்திருந்த தெய்வம் அல்லவா இந்த வரம் அருளுகிறது! ராணி பணத்தைக் கைநீட்டிப் பெற்றுப் பர்ஸில் வைத்துக் கொண்டாள். டாக்டர் கொடுத்த மருந்துச் சீட்டோடு அது உறவாடியது.

புறப்பட நினைத்த ராணி தலைநிமிர்ந்து ஒரு முறை முரளியைப் பார்த்தாள். இதென்ன? அவன் முகம் அப்படிப் பேயறைந்த மாதிரி பயங்கரமாக மாறுவானேன்? இதுவரை ராணி அவனை அப்படிப் பார்த்ததேயில்லை. அவளுக்கு ஒரே அச்சமாகப் போய்விட்டது.

''நீங்கள் செய்த உதவியை மறக்க மாட்டேன்!'' என்று கூறியபடி பயந்தவண்ணமே எழுந்தாள் ராணி. ''என் தகப்பனாருக்கு இந்த இன்ஜெக்ஷன் ஒன்றுதான் கடைசி என்கிறார் டாக்டர். அவர் சிகிச்சைக்காக முன்பே வீட்டில் இருந்த பொருள்களையெல்லாம் விற்றுவிட்டது. இந்த மாதம் அப்பாவுக்கு வந்த பென்ஷன்கூடச் செலவழிந்து விட்டது. நாம் தாமதித்தால் அது எதில் கொண்டுவிடுமோ என்ற உள்ளத் துடிப்பில் பரக்கப் பரக்க ஓடிவந்தேன். நீங்கள்....'' ராணிக்கு இருந்த துடிப்பு பேச்சில் தெறித்தது.

''இதோ பார், ராணி! என் தமக்கையும் சுசீலாவும் இன்னும் ஒரு மாதத்துக்கு ஊர் திரும்ப மாட்டார்கள். நான் தனியாகத் தான் இருப்பேன். அதற்காக யோசிக்காதே. உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள். என்னால் இயன்ற உதவியைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். உன் தகப்பனாரின் உடல் நிலையைப் பற்றி நீ சொல்லுவதால் உன்னை அதிக நேரம் நான் நிறுத்த விரும்பவில்லை. நீ போய்ப் பார்த்துக்கொண்டு நாளைக்கு வா. பரவாயில்லை. நான் உனக்காகக் காத்திருப்பேன். என்ன, புரிந்ததா?'' என்றான் முரளி மிடுக்காக.

''ஆ! நாளை? நாளைக்கா? இங்கே வரவேண்டுமா? ஐயோ, என்ன கோரம்! என்ன பாவம்!'' — ராணி அதிர்ச்சியுற்ற குரலில் கேட்டாள். அவளுக்கு இருதயமே நின்று விடும்போலிருந்தது

''நன்றாக யோசித்துக் கொள்!'' என்றான் முரளி அலட்சியமாக, நிர்த்தாட்சிண்யமாக.

கடந்த ஐந்து நிமிஷங்களுக்கு முன், இந்தப் பணத்தைக் கொண்டு, தன் தந்தையின் உயிரைக் காப்பாற்றிவிடலாம் என்று மனக் கோட்டை கட்டினாளே, அது மணல் வீடெனத் தரை மட்டமாகி விடுவதா? ஊஹூம். அவள் தந்தை எப்படியும் பிழைத்தாக வேண்டும். மரணப் படுக்கையில் இருக்கும் அவள் தந்தை — நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது — கண்களை மூடி விட்டால் அவளுக்கு உதவ யார் இருக்கிறார்கள்? அப்புறம் அவளுக்குப் பற்றுக்கோல்தான் ஏது? ஒரு முறை நினைவை ஓட்டிப் பார்த்தாள். இந்த உலகத்தில் அவளுக்குத் தந்தை

தான் உலகமாகத் தோன்றினார். உலகமெங்கும் வியாபித்த பொருளாகக் காட்சி அளித்தார். அவரைத் தவிர அவளுக்கு வேறு ஒன்றுமே தெரியவில்லை. அவர் தந்தை அவள் மீது அன்பையும் வாஞ்சையையும் பொழிந்தாரே, அதற்குப் பதிலாக — பிரதி உதவியாக — அவள் ஒன்றுமே செய்ததில்லை; செய்யவும் முடியாது. ஆயினும் குறைந்த பட்சம் ஒருவருக்கொருவர் துணையாகவாவது அவர் இன்னும் கொஞ்ச நாள் பிழைத்திருக்கலாம் அல்லவா? அந்தத் தன்னலத்துக்காகவாவது அவள் ஏதாவது செய்ய வேண்டாமா? — என்ன ஆனாலும் சரி, தகப்பனாரை எப்படியாவது பிழைக்க வைக்கப் பாடுபடவேண்டும்.

ராணியின் மனத்திலே யோசனை இப்படி நடை பயின்றுகொண்டிருந்தது. அறையிலே முரளி நடை பயில்பவனைப் போல் இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தவன் சட்டென்று நின்று ராணியின் பக்கம் திரும்பினான். அவனது கை மின்சார விளக்கின் ஸ்விட்சைப் பற்றியது.

ராணிக்குத் தன் காலடியில் இருந்த பூமி நழுவி நழுவிப் போவது போல், சுழன்று சுழன்று தட்டாமாலை சுற்றுவது போல் தோன்றியது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. இத்தமாதிரி ராணிக்கு எத்தனையோ தடவைகள் ஏற்பட்டது உண்டு. மாலையில் தந்தையின் உடல் நிலையைப் பற்றிக் கடைசி சான்ஸ் பார்ப்போம் என்று



டாக்டர் சொன்னாரே, அப்பொழுது கூடத்தான் இந்த மாதிரி அவளுக்குக் கண்கள் இருண்டுகொண்டு வந்தன. எப்படியோ சிரமப்பட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். இருந்தாலும், அவளது தந்தை அவளது இந்த நிலைக்காக எத்தனை வருத்தப்பட்டுள்ளார்? அவளுக்குள்ள அந்தக் கோளாறைக் குணப்படுத்த அவளது தந்தையின் சக்திக்குட்பட்ட எந்த டாக்டர்களாலும் முடியாமற் போய்விட்டது. பெரியவளானால் எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என்று சொல்லிவிட்டார்கள். பொறுக்க முடியாத துயரங்கள் — கஷ்டங்கள் ஏற்படும்போதெல்லாம் ராணிக்கு இப்படி மூர்ச்சை வருவதுண்டு. தன்னால் இயன்ற மட்டும் அதைத் தவிர்க்க முயல்வாள். ஆனால் இன்று?... இப்பொழுது? தவிர்க்க வேண்டுமென்று தோன்றவுமில்லை; தவிர்க்கும் திராணியும் இல்லை. ''எனக்கு இந்தப் பணம் தேவையில்லை. ஆனால் என் தந்தை பிழைக்க வேண்டுமானால், இந்தப் பணம் வேண்டியது தான்!'' என்றாள் ராணி, தனக்குத்தானே பேசிக்கொள்பவள் போல்.

இமைக்கும் நேரத்தில் இருள் அதிகரித்தது. அவள் மயக்கமும் அதிகரித்துக் கண்களை மூடிக்கொண்டு வந்தது. 'ஐயோ! என்னமோ செய்கிறதே! அடே! எங்கு பார்த்தாலும் இருட்டு, மையிருட்டு! அயோமயம்! எதுவுமே தெரியவில்லையே!' கண்கள் நன்றாக மூடிப்போயின. இனி நிற்க முடியாது என்று தோன்றியது ராணிக்கு.

ராணிக்கு உணர்வு மீண்டபோது அவள் பக்கத்து வீட்டுக்காரியும் அவள் குழந்தைகளும் அவளுக்குப் பணிவிடை புரிந்து கொண்டிருந்தார்கள். ''என் தகப்பனார் எப்படி இருக்கிறார், மாமி?'' — ராணி பதறி எழுந்திருக்கப் பார்த்தாள். அவள் கைக்கு அடியிலிருந்த பர்ஸிலிருந்து பாதி வெளியே வந்த நோட்டுக்கள் அவள் கையில் தட்டுப்பட்டன. கடந்துபோன வினாடிகளும் அந்த வினாடிகளில் ஏற்பட்ட அநுபவங்களும் அவள் நினைவுக்கு வந்தன, ஒரு கனவு போல. மனத்தை ஒரு விதமாக உறுதிப்படுத்திக் கொண்டு உள்ளே ஓடினாள். அடுத்த வீட்டுக்காரர் அவளது தந்தையின் கரத்தைத் தம் கையில் ஏந்திய வண்ணம் அவரது அருகில் அமர்ந்திருந்தார். அவரது பார்வை அவளது தந்தையின் முகத்திலேயே லயித்திருந்தது. அந்தப் பார்வையில் நம்பிக்கையா, அவநம்பிக்கையா, எந்தக் குறியுமே தெரியவில்லை.

''மாமா! எனக்கு நீங்கள் எவ்வளவோ உதவினீர்கள். இந்தப் பணத்தைக் கொண்டு அந்த மருந்தையும் வாங்கித் தாருங்கள். வரும்பொழுது அப்படியே டாக்டரையும் அழைத்து வாருங்கள்!'' என்றாள் ராணி பதறிய வண்ணம் பர்ஸைத் திறந்தபடி.

''தேவையில்லை அம்மா! இனி எந்த மருந்தும் தேவையில்லை. மனத்தைத் திடப்படுத்திக்கொள்!'' என்றார் அவர் கம்பீரமாகவும் அமைதியாகவும்.

பிறகு நடந்த சம்பவங்கள் அனைத்தும் ஏதோ முற்பிறவியில் நடந்த கிளைக் கதை அல்லது உப கதை என்று தோன்றின ராணிக்கு.

ஒரு மாத காலம் ராணியை எதிர்பார்த்தான் முரளி, திரும்பி வருவாள் என்று. ஆனால் ராணி வரவில்லை; வரவேயில்லை.

எதற்கும் உதவாத ஓர் அநாதைப் பெண் பணத்தில் புரளும் தன்னை எவ்வளவு இலேசாக ஏமாற்றி விட்டாள்! — ஆச்சரியப்பட்டான் முரளி. அவள் ஏமாற்றினாள் என்பது ஒருபுறமிருக்கட்டும். நாம் எப்படி இப்படி மோசம் போனோம்? — முரளிக்குத் தன்மீதே கோபம் வந்தது.

ராணியின் ஞாபகம் வரும்போதெல்லாம் அவனுக்குத் தன் நிலை மறக்கும், தன் உடல் மறக்கும் கோபம் வந்தது! இந்தப் பெண்களே துரோகிகள் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். ராணியை மறக்கும் முயற்சியில் அவன் மீண்டும் தன் நண்பர் கூட்டத்தை அழைத்துக்கொண்டு சீட்டாட்டம் போன்ற தனது மாமூலான கேளிக்கை — விளையாட்டுக்களில் ஈடுபட்டான்.

ஒன்றரை ஆண்டுகள் ஓடின. முரளியின் தமக்கை முரளிக்குச் சுசீலாவை மணம் முடித்து வைப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டாள். முரளிக்குத் திருமணத்தில்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலக்துள்ளது.



SP/1/P/7/65



நாளொரு மேனியாக...
எழிலோங்கச் செய்வது
ரெக்ஸோனு
Rexona
GOOD FOR YOUR SKIN
கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்குப் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனு.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான தைலங்களின்
கலவையான 'கேடில்' இருக்கிறது ரெக்ஸோனுவிலே.
தவிரவும், கமகமவென்று மணம் கமழ்வதால்,
மணமோங்கி மலரும் உங்கள் பொலிவு.
கேடில் அடங்கிய ரெக்ஸோனு உங்கள் சருமத்திற்கு உகந்தது.
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
RL. 24-140 TM

நம்பிக்கை இல்லை. அதோடு பெண் வர்க்கம் என்றாலே அவனுக்கு ஒரு துவேஷம் வேறு உண்டாகியிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சுசீலா சொந்தச் சகோதரியின் மகள் தான் என்றாலும் அவனுக்குக் கூடப் பிறந்த சகோதரியைப் போல் வளர்ந்தவள்.

ஒரு நாள் மாலை. அந்தி இருள் படர்ந்து கொண்டிருந்தது. அக்காவும் சுசீலாவும் சினிமாவுக்குப் போயிருந்தார்கள். முரளி மட்டும்தான் சிநேகிதர்களை எதிர்பார்த்த வண்ணம் சிகரெட்டைப் புகைத்தபடி சீட்டுக் கட்டை எடுத்து வைத்துக் கொண்டு 'பேஷன்ஸ்' — தனி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தான். சட்டென்று கதவு திறக்கும் சத்தம் கேட்டது. முரளி துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான். ராணி நின்றுகொண்டிருந்தாள். துரும்பாக இளைத்திருந்தது அவள் உடல். ஆயினும் லாவண்யமும் கவர்ச்சியும் இம்மியளவு கூடக் குறையவில்லை.

முரளியின் மகிழ்ச்சி எல்லை கடந்துவிட்டது போலும்! புன்முறுவலுடன் முகமன் கூறி அவளை வரவேற்கும் தோரணையில் எழுந்திருந்தான். ''வா, உட்காரு! இத்தனை நாட்களுக்குப் பிறகுதான் நினைவு வந்ததாக்கும்! நான்மட்டும் நினைத்துக்கொண்டே இருந்தேன்! எனக்குள் ஏதோ ஒன்று, 'நீ நல்லவள், நீ நல்லவள்' என்று சொல்லிக் கொண்டே இருந்தது! அப்பப்பா! எத்தனை நாட்கள்! எத்தனை நாட்கள்!'' என்றான் மூச்சுக்கூட விடாமல்.

''என் தகப்பனார் தவறிட்டாருங்க!''— ராணி வாசற்படியண்டை நின்றவாறே கூறினாள்.

''கேள்விப்பட்டேன் நானும். அந்தச் சோகம் தீர, அந்தத் துயரம் மறக்க இத்தனை நாட்கள் ஆகிவிட்டன. அப்படித் தானே?'' என்று கேட்ட முரளி சிறிது இடைவெளிக்குப் பின், ''என் தமக்கையும் சுசீலாவும் வெளியே போயிருக்கிறார்கள். வா, உட்காரு!'' என்றான்.

''நான் அவர்களுக்காக வரவில்லை. உங்களுக்காகத்தான் வந்தேன்!'' என்றாள் ராணி.

''நிஜமாகவா?'' என்று கேட்டான் முரளி. அவனுக்கு ஒரே சந்தோஷம். ''நின்று கொண்டே இருக்கிறாயே!'' என்று கேட்டபடி நாற்காலியைச் சுட்டிக் காட்டினான்.

ராணி எதையும் காதில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. ''இதற்கு முன்பே வந்திருப்பேன். ஆனால் கையில் பணம் இல்லை!'' என்றாள்.

''நீ ஒரு வார்த்தை எழுதியிருந்தால், நானே அனுப்பி வைத்திருப்பேனே! எனக்கு உன் விலாசம் தெரியவில்லை. இப்போது ஏதாவது பணம் வேண்டுமா?'' என்று கேட்டான் முரளி.

''நானேதான் உங்களுக்கு முந்நூறு ரூபாய் பாக்கி ஆயிற்றே! நேரில் வந்து கொடுத்து விட்டு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காகவே வந்தேன்!'' என்றாள் அவள்.

''சேச்சே! எனக்காவது, நீ பாக்கி தர வேண்டியிருப்பதாவது?'' என்று அன்போடு கடிந்து கொண்டான் முரளி.

''நீங்கள் எனக்கு அன்று கொடுத்த பணம் என் தந்தையின் ஈமக் கடன்களுக்குப் பயன் பட்டது. அந்தப் பணம் மட்டும் அன்று எனக்குக் கிடைத்திராவிட்டால், எத்தனை கஷ்டப்பட்டிருப்பேனோ, கூற முடியாது!'' என்றாள் ராணி, கதவை ஒரு கையால் பிடித்துக் கொண்டு நின்றபடி.

''நான் என்ன பெரிய தொலையாத பணத்தை அள்ளிக் கொடுத்துவிட்டேன்! பெரிதாகச் சொல்ல வந்து விட்டாயே!'' என்றான் முரளி நமட்டுச் சிரிப்போடு.

''அந்தப் பணம் உங்களுக்குப் பெரியதாயில்லாமல் இருக்கலாம். எனக்கு அப்படியா? இப்போது நான் ஒரு ஆபீஸிலே ஏதோ குமாஸ்தா வேலை பார்த்து வருகிறேன். அதனால் தயவுகூர்ந்து நீங்கள் உங்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டால், நான் போய் வருவேன்!'' என்றாள் ராணி, ஓர் அடி உள்ளே எடுத்து வைத்தபடி.

''என்ன? எனக்கு அந்தப் பணத்தைத் திருப்பித் தருகிறாயா?''

''ஆமாம். வாங்கிய கடனைத் திருப்பித் தரவேண்டியதுதானே?''

''நான் அதை உனக்குக் கடனாகத் தரவில்லையே! என் மனத்தில் அப்படி ஓர்

நிரஞ்சனன் பெரிய பணக்காரன். சொந்தமாக ஒரு பெரிய கம்பெனி நடத்தி வந்தான். அவனுக்கு அப்பொழுதுதான் புதுமணமாகி யிருந்தது. அவன் மனைவிக்குத் திடீரென்று அவன் அலுவலகத்தைப் பார்வையிட வேண்டுமென்ற ஆசை எழுந்தது. காரை எடுத்துக்கொண்டாள். காரியாலயத்தை அடைந்தாள். அவன் அறைக்குச் சென்று பார்த்தால், அவன் ஏதோ வேலையில் மூழ்கியிருந்



தான். மெதுவாகப் பின்புறம் சென்று, அவன் கண்களைப் பொத்தினாள். ''யார் சொல்லுங்கள், பார்க்கலாம்!'' என்று அன்பாகக் கேட்டாள். அன்பு மிகுதியில் அவள் குரல் கிரீச்சிட்டு ஒலித்தது.

நிரஞ்சனன் குழைந்து பதில் சொன்னான்: ''இதுவா உன் விளையாட்டுக்கு நேரம்? முதலில் போய் டைப் அடி. மாலை நேரம்தான் நம் விளையாட்டுக்கு முழுக்க முழுக்க இருக்கிறதே!''

எண்ணமே எழவில்லையே!'' — முரளியின் குரலில் சிறிது கடுமை தாண்டவமாடியது.

''இருக்கலாம். ஆனால் நான் உங்களைக் கேட்டது கடனாகத்தானே?'' என்றாள் ராணி அழுத்தமான குரலில்.

முரளியின் முகம் சற்றுச் சிவந்தது. அவனுக்குப் பணம் ஒரு பொருட்டல்ல. கௌரவம் தான் பெரிது. முந்நூறு ரூபாயைச் சுளையாக எடுத்து ஏதாவது ஒரு ஸ்தாபனத்துக்கு நன்கொடையாகத் தந்துவிட்டு அந்தக் கணமே மறந்துவிடும் இயல்பு பெற்றிருந்தான் அவன். ஆனால் இந்த ஏழைப் பெண்ணோ...? அவனுக்குக் கொடுத்த பணத்தை மறுபடியும் திருப்பித் தர வருகிறாள்! கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்குவதாவது? சுரீரென ஒரு சாட்டை விழுந்தாற்போலிருந்தது அவனுக்கு.

ராணி ஓர் அடி முன் வைத்து உள்ளே வந்தாள். சுவரோடு ஒட்டியிருந்த அவன் மேஜை மீது ஒரு பெரிய கவரை வைத்தாள். அடுத்த கணமே விருட்டென்று திரும்பி வாசற்படியை ஒரே தாண்டாகத் தாண்டி வெளியே சென்றுவிட்டாள்.

வியப்பிலிருந்து விடுபட முரளிக்கு ஒரு கணம் பிடித்தது. கைக்கு எட்டிய பறவை சிறகு அடித்துக் கொண்டு பறந்துவிட்டது



போன்ற உணர்வு. கண்களுக்கு எதிரே தோன்றிய ராணி எப்படி மாயமாய் மறைந்தாள்! ஒரே ஓட்டமாக ஓடி வாசலுக்கு வந்தான் முரளி. கண்களுக்கெட்டிய தூரம் தெருவைத் துழாவினான். ராணி போன சுவடே தெரியவில்லை. ''ராணி! ராணி!'' என்று தன்னையும் மீறிச் சற்று உரக்கவே கூவினான். பதில் இல்லை. செய்வது அறியாது மீண்டும் தன் அறைக்கே வந்தான். ராணி மேஜை மீது வைத்துச் சென்ற உறையை எடுத்தான். நல்ல கனமாக இருந்தது. ஆச்சரியத்தோடு அதைப் பிரித்தான்.

அதில் முந்நூறு ரூபாய்க்கு நோட்டுக்களும் ஒரு புகைப்படமும் இருந்தன. அந்தப் புகைப்படம் முழுவதிலும் ஒரு வெள்ளைக் காகிதம் ஒட்டியிருந்தது. அந்தக் காகிதமும் நடுவில் நெடு வட்டமாக அழகாக ஒழுங்காகக் கத்திரிக்கப்பட்டிருந்தது. அந்த நெடு வட்டத்தில் அவனது உருவம் தெரிந்தது. இடுப்பு வரை. அவன் பரபரவென்று அந்த வெள்ளைக் காகிதத்தைக் கிழித்தான். அது அவனுடைய குடும்பத்தார் 'குரூப்'பாக எடுத்துக் கொண்ட புகைப்படம். அதில் அவன், அக்கா, சுசீலா — எல்லோரும் இருந்தார்கள். இந்தப் புகைப்படத்தை ராணிக்கு ஒருவேளை சுசீலா கொடுத்திருக்கலாம். அதில் ராணி அவனது உருவம் மட்டும் தெரியும்படி காகிதத்தைக் கத்திரித்து ஒட்டியிருந்தாள்.

எதற்காக ஒட்டினாளோ? இப்படி அவள் ஒட்டியதன் பொருள் என்னவோ? ஓர் அர்த்தமின்றி இப்படி ஒட்டியிருப்பாளா? — முரளிக்குச் சந்தோஷம் அளவு கடந்து பொங்கி வந்தது! ராணி தன்னையே காதலிக்கிறாள்!

கவரில் புகைப்படத்தோடு வாடிய மகிழம்பூ மாலை ஒன்று இருக்கிறதே, இது ஏது?...

ஆமாம், — நினைவுக்கு வந்தது அவனுக்கு! ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் அவன் தனது வீட்டுக் காம்பவுண்டில் இருந்த மகிழ மரத்தடியில் உதிர்ந்து கிடந்த பூக்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். ''என்னடா, எப்பொழுது பார்த்தாலும் பெண்களைப் போல் இந்த உதிர்ந்த மலர்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறாயே!'' என்று கேட்டான்.

''உதிர்ந்த மலர்களானால் என்னடா? வாசனையைப் பார்த்தாயா?'' என்றான் முரளி.

''இப்படியே வாடிச் சிவந்துவிடும் இந்த மலர்கள்!'' என்றான் நண்பன்.

''என்னதான் வாடினாலும் மணம் குன்றாதடா!'' என்று கூறிய முரளி திரும்பிப் பார்த்தான். சுசீலாவின் அறையிலிருந்து ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறு நின்றிருந்தாள் ராணி. அவன் பார்வை தன்மீது விழுந்ததும், ராணி சட்டென்று திரும்பி அறைக்குள் சென்றுவிட்டாள். சூட்டும் கோட்டும் 'டை'யும் 'பூட்'டும் போட்டுக் கொண்டு அவன் குனிந்து மலர் பொறுக்கிக் கொண்டிருப்பதை இந்த ராணி ஒருவேளை பார்த்திருப்பாளோ? — முரளிக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது. இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு எப்போதும் போலச் சுசீலாவின் அறைக்குச் சென்றான். அந்த மகிழம் பூக்களைச் சுசீலாவின் எதிரில் வைத்து மாலை தொடுத்துத் தரும்படி கூறிவிட்டுத் தன் தோழனோடு வெளியே சென்றான். அவன் திரும்பிவந்த பொழுது, ''எனக்குக் கொஞ்சம் வேலை இருந்தது. அதனால் ராணியைப் பூக்கோத்துத் தரச் சொன்னேன். அவள் எங்கே வைத்தாளோ, தெரியவில்லை. எத்தனை தேடினாலும் மாலை கிடைக்கக் காணோம். வேலைக்காரர்களிடம் கொடுத்து ஒருவேளை அவள் உன் அறையில் வைக்கச் சொல்லியிருந்தாலும் சொல்லியிருக்கலாம். ஆனால் நான் இன்னும் உன் அறையில் போய்ப் பார்க்கவில்லை, மாமா!'' என்றாள் சுசீலா.

''பரவாயில்லை! போனால் போகட்டும் போ!'' என்றான் முரளி தூங்கி வழிந்த கண்களோடு.

அந்த மாலை போன இடம் இன்றைக்குத் தெரிந்தது. இத்தனை நாட்களும் தான் பொறுக்கி வந்து மாலை தொடுக்கக் கொடுத்த பூக்களைக் கோத்து, தன் புகைப்படத்துக்கே போட்டுப் பூசித்துக்கொண்டிருக்கிறாள் இந்த ராணி! — முரளிக்குப் புல்லரித்தது. 'நாம்தான் இந்த ராணிக்கு வழிபடும் தெய்வம்!' — நினைத்துப் பார்த்த பொழுது அவனுக்கு வானவெளியிலே பறப்பது போலிருந்தது. நம்மையும் ஒரு பெண் இத்தனை உள்ளன்போடு காதலிக்

இழுனே! — காதல்! ஒரு புதிய அனுபவம்! விலைமதிப்பற்ற பொருள்; கிடைத்தற்கரிய பொருள்! இந்தக் காதலின் பலத்தைக் கொண்டுதானே ருருவும் சாவித்திரியும், தங்கள் காதலர்களை யமன் வாயிலிருந்து மீட்டார்கள்? புனிதத்துக்கு மறு பெயர்தான் காதலோ? மானிட வாழ்வில் நிறையவோ கொஞ்சமாகவோ காதலுணர்வு உறைந்திராத உள்ளம் கிடையாது. தூங்கிக்கொண்டிருக்கும் அவ்வுணர்வு எப்போது எப்படி விழிப்புறும் என்பதையும் கூற முடியாது. ஆணும் — பெண்ணும் இந்தக் காதலுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். கட்டுப்படுத்தும் அது அவர்களிடம் கட்டுப்படவும் செய்யும். முரளியிடம் உறங்கிக்கொண்டிருந்த அந்த உணர்வு ஒரு முறை சட்டென்று விழித்துத் தலை தூக்கியது.

அப்பொழுது தான் என்றுமே அனுபவித்தறியாத தாயன்பு அவனிடம் தலையெடுத்தது. ராணியைக் காப்பது தன் கடமை என்று நிர்மானித்தான். ஒவ்வொரு விநாடியும் ராணியின் முன்னிலையில் இன்ப வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற இனிய அவா அவன் உள்ளத்திலே ஊற்றாகச் சுரந்து பெருக்கெடுத்தது.

முரளி தன் கையிலிருந்த கவரைத் திரும்பவும் மேஜையின் மேல் வைத்தான். அதிலிருந்த பாதி நோட்டுகள் வெளியே தலை நீட்டிச் சிரித்தன. பணமே பெரிதென மதித்திருந்த அவனது பணத்தைத் திருப்பித் தந்து ராணி அவனுக்கு ஒரு சாட்டை அடி கொடுத்துவிட்டாள். அவன் செய்த தர்மத்தை நிராகரித்து அவனது உள்ளத்துக்கு ஒரு தார்க்குச்சி போட்டு விட்டாள். பணத்தின் மீது இத்தனை அலட்சிய பாவத்தோடு இருக்கும் பிரகிருதியை முரளி இதுவரை பார்த்ததில்லை. உத்தியோகம் பார்த்து, பட்டினி கிடந்து எப்படியோ பணத்தைச் சேர்த்து அவனது பணத்தைத் திருப்பித் தந்து அவன் முகத்தில் அடித்துவிட்டாளே ராணி, எத்தனை கண்டிப்பானவள்! அவள் வாழ்க்கை எவ்வளவு பெருமைப்படவேண்டிய வாழ்க்கை! அவள் நடத்தை எத்தனை மதிப்புக்குரிய நடத்தை! முரளி திக்குமுக்காடிப் போய்விட்டான். அவனுக்குத் தன் மதிப்பு, தன் குணம், தன் அறிவு எல்லாமே கேவலமாகத் தோன்றின. அவன் தன் நிலையை நினைத்துத் தானே வெட்கினான். ராணிக்குப் பாதசேவை செய்ய, பணிவிடை செய்யக் கூடத் தனக்கு அருகதை இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

இப்படிச் சிந்தனை செய்த நேரத்தில்தான் அவனுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய உற்சாகம் பிறந்தது. அன்று இரவு அவனுக்குச் சரியாகத் தூக்கமே வரவில்லை. விநாடிக்கு விநாடி அவனுக்குப் புதிதாக ஏதேதோ தோன்றியது. என்னவெல்லாமோ உணர்ச்சிகள் அவனை ஆட்கொண்டன. தன் ராணி! ராணி தன்னுடையவள்!—ஒவ்வொரு கணமும் ராணியைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள வேண்டும், அவளோடு இரண்டறக் கலந்து ஒன்றி வாழ வேண்டும், ராணியை — தன் ராணியைக் கௌரவமாக வைத்துக்கொள்ள வேண்டும், ஆதரவு காட்டி மகிழ வேண்டும், அவள் ஆதரவைத் தான் பெற்று, இன்புற வேண்டும் என்றெல்லாம் சிந்தனை ஓடியது.

காலையில் எழுந்ததும் முதல் காரியமாக ராணியின் பழைய வீட்டுக்கு வேலைக்காரன் ராமுவை அனுப்பி வைத்தான். இதுவரை கொண்டு வந்த பதிலையே இப்போதும் கொண்டு வந்தான் ராமு. அக்கம் பக்கத்தாருக்குக்கூட அவள் விலாசம் தெரியாது என்பதுதான் அந்தப் பதில்.

ராணி இல்லாத வாழ்க்கை முரளிக்கு ஒரு வாழ்க்கையாகவே தோன்றவில்லை. பெரும் சுமையெனக் கனத்தது. தாள முடியாது இனித் துயரம் என்றே தோன்றியது. ராணியை ஊரெல்லாம் தேடலானான் முரளி. கோவிலில் சென்று ஒவ்வொரு சுவாமியாகச் சுற்றி வருவது போல முரளி ஒவ்வொரு காரியாலயத்துப் படிகளையும் ஏறி இறங்கி வந்தான். ஆபீஸ் விடும் நேரங்களில் ஓர் ஒதுப்புறத்தில் நின்று, வெளியே வரும் பெண்களை உன்னிப்பாகக் கவனிப்பான். இந்தப் பணம் படைத்தவர்களுக்கே தெருவில் போய்க் கொண்டிருக்கும் பெண்களைப் பார்த்துக்கொண்டிருப்பதுதான் வேலையோ என்று உலகம் நினைக்கும் அளவுக்கு அவனுடைய செயல்கள் முற்றிவிட்டன.

மாதங்கள் ஓடின; ஓடின; அப்படி ஓயாமல் ஓடின. ஆனால் முரளி ராணியைத் தேடுவதை மட்டும் நிறுத்துவதாக இல்லை. அல்லும் பகலும் ராணியின் நினைவைத் தவிர வேறு எதுவுமே அவன் மனத்தில் இடம் பெறவில்லை. எத்தனை காலமானாலும் ராணியை எப்படியாவது கண்டுபிடித்துத் தன் உள்ளக்

டெக்கையைக் கூறி, அவளது காதலைப் பெற வேண்டும் என்று எண்ணினான். அதையே அவன் தன் வாழ்க்கையின் குறிக்கோளாக வும் மேற்கொண்டான். ஆனால் எத்தனையோ சல்லடை போட்டுச் சலித்துத் தேடிப் பார்த்தும் ராணி இருக்கும் இடம் அவனுக்குத் தெரியவில்லை; கிடைக்கவில்லை.

பெண்கள் மதிப்புக்குரியவர்கள்; பிரேமைக்குரியவர்கள்; அன்புக்குப் பாத்திரமானவர்கள்; ஆதரவுக்கு உகந்தவர்கள். ராணியும் அப்படிப் பட்டவள்தான். பெண்களைப்பற்றி இழிவாகப் பேசும் நண்பர்களின் பேச்சு அவனுக்கு வர வரப் பிடிக்கவில்லை; ஏன், இன்று அத்தகைய பேச்சுக்கள் அவனுக்கு வெறுப்பைக் கூட அளிக்கத் தொடங்கிவிட்டன.

ஊரெல்லாம் திரிந்து திரிந்து தேடித் தேடி அலுத்துச் சலித்து வீட்டுக்கு வருவான். நெற்றியில் கைவைத்துக் கூரையை அண்ணாந்து பார்த்தவண்ணம் யோசனையில் ஆழ்ந்து படுத்துக் கிடப்பான். யோசனை ஓடாது; மீண்டும் கால் போன போக்கிலே சென்று தேடத் தொடங்குவான். ஒவ்வொரு தரமும் அவனுக்குக் கிட்டுவது ஏமாற்றம்தான். இருந்தாலும் ராணிக்காக, ராணியின் காதலுக்காக அவன் ஏங்கித் தவிப்பான். தனக்கு அவளிடம் ஏற்பட்ட இந்தத் தீவிர வாஞ்சைக்குக் காரணம் கடவுளின் ஆசிகளே என்று தோன்றியது அவனுக்கு.

மானேஜர் ரவி அடிக்கடி சொல்லவே, தொணதொணத்து எடுக்கவே, ஒருநாள் மாலை அவன் தனது காகித ஆலைக்குச் சென்றான். ஏதோ பல புதிய இயந்திரங்கள் வந்திருந்தன. அவற்றைப் பார்வையிடுவதற்காகத்தான் அவனை மானேஜர் அப்படி வற்புறுத்தி அழைத்திருந்தார். சமீப காலமாகத் தனக்கு ஏற்பட்டிருந்த பழக்கத்தின்படி அவன் தன் காரைச் சற்றுத் தொலைவில் நிறுத்திவிட்டு நடந்தே வந்து கொண்டிருந்தான். அவனது அலுவலகத்தில் வேலை பார்க்கும் அதிகாரிகள், சிப்பந்திகள் அனைவரும் கலகலவென்று பேசிக் கொண்டு அப்போது வெளியே வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுள் பல பெண்களும் இருந்தார்கள். அவர்களைக் கண்டதும் முரளி மரியாதையாக ஒதுங்கித் தயங்கி நின்றான். அவர்களெல்லோரும் ராணியைச் சேர்ந்தவர்கள் என்று தோன்றியது அவனுக்கு. அதோ அவர்கள் மத்தியில் அது யார்? — ராணி!

அவனது கால்கள் ராணியை நோக்கி ஓட முயன்றன. தன்னையும் மீறி ராணியின் பக்கம் ஓட முயன்ற கால்களை மிகச் சிரமப்பட்டு ஓடாது நிறுத்தினான். ''ராணி...!'' கூப்பிட வாயெடுத்தான். பேச்சு எழும்பவில்லை. குரல்வளையை ஏதோ ஒன்று அடைத்தது. தொங்கிய முகத்தோடு சோர்வுடன் அவர்கள் மத்தியில் தனியாகச் செல்கிறாளே ராணி! அப்பப்பா! எப்படி இருந்தவள் எப்படி மாறிவிட்டாள்! முரளியின் நெஞ்சை என்னவோ செய்தது. வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. வயிற்றுக்குள்ளே மாவு பிசைவது போன்றதோர் உணர்ச்சி. ராணியின் முகத்தில் காணப்படும் இந்த நிராசைக் குறிகளைப் போக்கியாக வேண்டும். ஏமாற்றக் குறிகளை அகற்றியாக வேண்டும். துயரத்தைக் களைந்து அவள் முகத்தில் களையைக் கிளறச் செய்ய வேண்டும். ஆனந்தம் தாண்டவமாடச் செய்ய வேண்டும். அவள் அவனுடைய ராணி. அவள் சுகப்பட்டால் தான் அவனுக்குச் சுகம். தன்னந்தனியாகக் குனிந்த தலையுடன் சோகமே உருவாகப் பெரும் பளுவைச் சுமந்து செல்பவள்போல் ராணி நடந்தாள். அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தெருத் திருப்பத்தில் மறைந்தும் விட்டாள்.

அந்திக் காற்று சில்லென்று வீசியது. கூடு திரும்பும் காகம் கரைந்துகொண்டே அவன் முகத்தை ஒட்டினாற் போல் சிறகடித்துப் பறந்து சென்றது. கையிலிருந்த சிகரெட் எரிந்து தேய்ந்து சாம்பராகி அவன் விரலைச் சுட்டது. அதே சமயத்தில் காகம் ஒன்று அவன் தலையைத் தன் கால்களால் குட்டிச் சென்றது. அப்பொழுதுதான் சுய உணர்வு வந்தது முரளிக்கு. சிகரெட்டைக் கீழே போட்டுப் பூட்ஸ் காலால் தேய்த்து அணைத்தான். பிறகு கார் ஏறி வீடு திரும்பினான். கட்டிலடங்காத மகிழ்ச்சியும் இனந் தெரியாத களிப்பும் அவன் மனத்திலே களி நடம் புரிந்தன.



பிரமுகர் ஒருவர் சிறைச்சாலைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் நல்ல மேடைப் பிரசங்கியும்கூட. பல கைதிகளும் அவரைக் காண ஓரிடத்தில் கூட்டப்பட்டிருந்தனர். அப்படி ஒரு கூட்டத்தைக் கண்டதும் பிரமுகருக்கு உற்சாகம் பிறந்தது. ''அருமைத் தோழர்களே!'' என்று பிரசங்க பாணியில் தொடங்கினார்.

கேட்ட பலரும் கடகடவென்று நகைத்தனர்.

அப்பொழுதுதான் அவருக்குத் தம் தவறு தெரிய வந்தது. சட்டென்று பேச்சை மாற்ற எண்ணி, ''என் அருமைக் குற்றவாளிகளே!' என்று தொடங்கினார்.

சிரிப்பு முன்னைக் காட்டிலும் அதிகமாகி விட்டது. என்ன பேசுவது என்றே அவருக்குப் புரியவில்லை. எப்படியாவது பேச்சை முடித்தால் போதும் என்று எண்ணி, ''நான் என்ன சொல்ல வந்தேன் என்றால்.... உங்கள் அனைவரையும் இவ்விடத்தில் கண்டு மகிழ்ச்சியுற்றேன்!'' என்று முடித்தார்.

"ராணி! ராணி!"

ராணி பின் திரும்பிப் பார்த்தாள். இரண்டு கஜ தூரத்தில் முரளி நின்றுகொண்டிருந்தான். ராணி சிலையெனச் சமைந்து நின்றுவிட்டாள். அலுவலகங்களிலிருந்து வீடு திரும்பும் பலரும் திரும்பிப் பார்த்தனர். முரளி அடக்கமாக ஓரடி முன் எடுத்து வைத்து, "ராணி! உன்னோடு ஒரு பத்து நிமிஷம் பேச வேண்டும். மிகவும் முக்கியமான சமாசாரம்!" என்றான்.

"யாராவது பார்த்தால் எனக்குத் தலைக் குனிவுதானுங்க. வேண்டாங்க. என்னிடம் உங்களுக்கு என்ன வேலை இருக்கப் போவுதுங்க? என்னோடு பேச்சுக் கொடுக்க வேண்டாமுங்க!" என்றாள் ராணி. பணிவும் கண்டிப்பும் அவள் குரலில் தொனித்தன.

சாப்பிட்ட கையோடு மனத்தை நிம்மதிப் படுத்திக் கொள்ளும் உத்தேசத்துடன் ராணி ஏதோ படிக்கப் போனாள். அவளது அறைக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. ராணிக்கு விருந்தாளிகள் வருவதே அபூர்வம். எனவே, வியப்போடு கதவைத் திறந்தாள். வாயிற்படியில் முரளி நின்றுகொண்டிருந்தான் மனோகரமான உருவத்தில். இத்தனை நாட்களும் அவள் அடக்கி வைத்திருந்த காதல் ஒரு முறை கிளர்ந்தெழுந்தது. முரளியை வரவேற்க ஓரடி முன் எடுத்து வைத்துவிட்டாள் ராணியும். ஆனால் அடுத்த கணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு அடக்கமான குரலில், "வாருங்கள்! வந்து உட்காருங்கள்!" என்றாள்.

முரளி ஒரே எட்டில் உள்ளே வந்தான். உட்காருவதற்கு நாற்காலிக்கு அருகில் சென்றவன், ஆனந்தமும் திருப்தியும் ஒருங்கே கரை புரண்டோடத் தனது மூடிய கரத்தைத் திறந்தான். கண்களைப் பறிக்கும் பளபளப்புடன் இரண்டு பழங்கள் அவன் கையில் காட்சியளித்தன. "உனக்கு மகிழம் பழம் என்றால் ரொம்ப இஷ்டமாமே! சுசிலாவிடம் நீ சொல்லிக் கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன். உள்ளங் கையிலேயே வைத்து எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். என் கைச் சூட்டில் இன்னும் பழுத்துப் பழங்கள் மிகுந்த சுவை தரும் என்று எண்ணுகிறேன்!" என்றான் முரளி மிகுந்த ஆசையோடு.

"அப்படியானால் இவ்வளவு தூரமும் ஒரே கையால் காரை ஓட்டிக் கொண்டு வந்தீர்களா? இரண்டாவது கையில் இந்தப் பழங்கள் இருந்தனவா?" என்று கேட்டாள் ராணி கவலை மிகுந்த குரலில்.

"ஆம்!" என்றான் முரளி அடக்கத்தோடு. உணர்ச்சிப் பெருக்கு இருவரது நெஞ்சங்களையும் ஆட்டிப் படைத்து அழுத்தியது. கடைசியில் முரளி வேட்கையோடு ராணியைக் கண்ணெடுத்துப் பார்த்துக் கேட்டான்: "ராணி! உன் அன்புப் பிச்சைக்காக நான் இங்கு வந்திருக்கிறேன். கருணை கூர்ந்து எனக்கு அருள்வாயா?"

ராணியின் விழிகளில் வேதனை பெருக்கெடுத்து ஓடியது. "அப்பப்பா! இந்த அன்பு, இந்தப் பிரேமை எவ்வளவு கோரமானது, பயங்கரமானது, தெரியுமா?" என்றாள்.

"தெரியும். நீதான் என் கண்களைத் திறந்து விட்டாய். அநுபவிப்பதற்கோ அல்லது அர்ப்பணம் செய்வதற்கோ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!" என்றான் முரளி ஏதோ கனவுலகத்தில் சஞ்சரிப்பவன் போல்.

"பிரேமை பாவனமானது. அன்பு தூய்மையானது!" என்றாள் ராணி அமைதியாக.

"அப்படியா? நான் கொடுத்து வைத்தவன், ராணி!"

"நீங்கள் ஒரு கோமகனார்; செல்வச் சீமான். நான் எத்தனை எத்தனையோ ஆசைகளை வளர்த்திருந்தேன். உங்களுக்குத் திருப்பிக் கொடுத்தேனே, மகிழம் பூ மாலை, அதற்குத் தெரியும் என் கனவுகள் எல்லாமே!" என்றாள் ராணி.

முரளி கைகூப்பிக் கண்களை உயர்த்திப் பார்த்தான். ராணியின் கண்களில் நீர்த் துளிகள் முத்திட்டு நின்றன. அதைக் கண்ணுற்றவனுக்குப் பேசவே தோன்றவில்லை. ஊமைச் சிலையென நின்றான். பிறகு ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "உன்னைப் போல் உன்னதமான ஜீவன் எனக்குக் கிடைப்பது என் அதிர்ஷ்டம் ராணி! எனக்கு இருக்கும் எல்லாமுமே உன்னுடையவை, ராணி. என்னை மணந்து என் எதிர்கால வாழ்க்கைக்கு நீ ராணியாக வேண்டும். இதுவே என் வேண்டுகோள், முறையீடு!" என்று முடித்தான்.



"மணமா?" என்றாள் ராணி வியப்போடு.

"ஒரு காலத்தில் அதுவே கனவாக இருந்தது. நானும் சுசிலாவும் எத்தனையோ தடவைகள் வாய் ஓயாமல் மணம் பற்றிப் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம். அந்தஸ்துக்களின் ஏற்றத் தாழ்வுகள் காரணமாகக் கல்யாணங்களுக்கு எப்படியெல்லாம் என்னவெல்லாம் தடங்கல்கள் ஏற்படுகின்றன, ஏற்படக்கூடும் என்பது போன்ற விஷயங்களைப் பற்றியெல்லாம்கூடப் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம். என் இதயத்தில் மறைந்து வேர் விடும் காதல் சுசிலாவுக்குத் தெரிந்து விடுமோ என்றுகூட நான் அஞ்சியதுண்டு."
—ராணி பழைய நினைவுகளை ஒரு முறை நினைவுபடுத்திப் பார்ப்பவள் போல் பேசினாள்.

"சுசிலா என் மானேஜர் ரங்கநாதனைக் காதலிக்கிறாள். அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கூடச் செய்துவிட்டேன்!" என்றான் முரளி.

"என் தந்தை கூட எவ்வளவோ ஆசைகளைத் தம் மனத்துள் வளர்த்து வைத்திருந்தார். என்னை என்னவோ பெரிய வீட்டு மருமகளாக்க வேண்டும் என்றும் என்னை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்றும் தமது கையில் பணங் காசு என்று கொழிக்காவிட்டாலும், எப்படியாவது முயன்று ஏதோ ஒரு விதமாக என்னையும் இந்த உலகத்துக்கு இயன்ற பணிகளைச் செய்விக்க வேண்டும்

என்றும் எண்ணமிட்டு மனக்கோட்டை கட்டி வைத்திருந்தார். அவரது எண்ணங்கள் ஈடேறாமலே இறந்து விட்டார். தந்தையின் நோக்கங்களே என் எண்ணமாகப் பரிணமித்த ஒரு காலமும் உண்டு!'' — ராணி பேசிக்கொண்டே போனாள்.

''இவ்வளவுக்கும் நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் அளிக்கவில்லையே! நமது திருமணத்துக்கு எப்பொழுது ஏற்பாடு செய்யலாம், சொல்!'' என்று கேட்டான் முரளி மறுபடியும்.

''எனக்குத் திருமணப் பிராப்தி இல்லை, முரளி! விவாகம் என்பது மிகப் பவித்திரமான, வெகு தூய்மையான செயல் ஆகும். தாலி தரிக்கும் பாக்கியம் எனக்கு இந்தப் பிறவியில் இல்லை. எனவே, இனி அந்தப் பேச்சையே எடுக்க வேண்டாம்!'' என்றாள் ராணி தலை குனிந்தபடியே.

முரளி செயலற்று, அசைவற்று அப்படியே திக்பிரமை பிடித்தவன் போல் நின்றான். ஒரு கணத்துக்கெல்லாம் உணர்வு பெற்று, ''ஏன்? யாருக்காவது வாக்குக் கொடுத்துவிட்டாயா முன்னமேயே?'' என்று கேட்டான். அவன் உள்ளத்திலே ஓர் உபாதை; குரலிலே ஓர் ஐயம்.

''யாருக்கும் கொடுக்கவில்லை.''

''பின்னே?''

''ஒன்றுமில்லை. நான் உங்கள் வீட்டுக்கு வந்த அன்று நிகழ்ந்த நிகழ்ச்சி என் கண்களிலேயே என்னைக் கேவலமாக்கிவிட்டது. நீங்கள் பெண்களை அத்தனை இழிவாகக் கருதுவீர்கள் என்றும், சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு ஈனமாக்க முயல்வீர்கள் என்றும் நான் கனவிலும் கருதவில்லை. அன்று பூமியே தானாகப் பிளப்பது போலத் தோன்றியது. சீதேவியை உள்ளடக்கிக் கொண்ட பூதேவி நினைவுக்கு வந்தாள். உடனே தற்கொலை எண்ணம்தான் என் மனத்திலே எழுந்தது. ஆனால் நான் வீட்டை அடைந்தபோது தந்தையின் சமக்கடன் களைச் செய்ய வேண்டிய நிலையை அடைந்திருந்தேன். அதோடு உங்கள் கடனைத் திருப்பித் தர வேண்டிய பொறுப்பும் என்மேல் சுமந்திருந்ததை உணர்ந்தேன். அதனால்தான் நடைப்பிணம் போல் வாழ்ந்து வருகிறேன். காலம் தாழ்ந்துவிடவே, இறந்துவிடவேண்டும் என்றிருந்த தீவிர எண்ணமும் தளர்ந்து விட்டது. இனி நான் இறக்கத் தேவையில்லை. எனக்கு இந்த வாழ்க்கையும் இறப்பும்தான் ஒன்றாகி விட்டனவே! நடைப்பிணமாகத்தானே உலவி வருகிறேன்? எனக்கு வாழ்க்கையில் ஒளி இல்லை. மரணமாக வந்து என்னைத் தழுவும் வரையில் எப்படியாவது காலத்தை ஓட்டியாகவேண்டுமே!..''



மெலிந்துபோன அவள் தாடை மீது கண்ணீர் கோடிட்டு வழிந்த வண்ணம் இருந்தது.

முரளி அவள் கூறியவற்றையெல்லாம் உன்னிப்பாகக் கேட்டான். தனக்கு வந்த அழுகையைத் தடுத்து நிறுத்த முயன்றபடி.

''அன்று ஒன்றுமே நடக்கவில்லை, ராணி! நீ மயங்கி விழுந்துவிட்டாய். நான் வெறுப்புடன் ரிக்ஷாவில் ஏற்றி உன்னை வீட்டுக்கு அனுப்பிவைத்தேன். அவ்வளவுதான்!'' என்றான் முரளி, குற்றவாளி ஒருவன் தன்னை நிரபராதி என்று சொல்லிக்கொள்ளும் தோரணையில்.

''அப்படி மயங்கி நான் விழாமல் இருந்தால் என்ன நடந்திருக்கும்?''

முரளிக்குச் சட்டென்று எதுவும் பதில் சொல்லத் தோன்றவில்லை. பெண்களைப் போல் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டான். ஒரு கணம் கழித்து, ''நீ கெட்டவோ, பதிதையாகி விடவோ இல்லையே!'' என்றான்.

''மானசீகமாகப் பதிதைதான். கெட்டவள்தான். தந்தையின் உயிரைக் காக்க வேண்டும் என்ற தீவிர ஆசையில் உங்களிடம் பணம் தேவையென்றேன். அதனால்தான் அப்பொழுது நீங்கள் சொன்ன அந்த நிபந்தனைக்கும் உட்பட்டேன். நான் மூர்ச்சையாகாமல் இருந்திருந்தால், தீங்கு நேர்ந்திருக்கக் கூடும் அல்லவா? செய்கை தீயதாயிருந்தால் என்ன? எண்ணம் தீயதாயிருந்தால் என்ன? தீயது தீயதுதானே? அதோடு எண்ணங்கள்தானே செய்கையாக உருவம் பெறுகின்றன? செய்கையாக உருப்பெறக் கூடிய அந்த எண்ணங்கள், நான் மட்டும் மூர்ச்சித்து விழுந்திராவிட்டால் செய்கையாக உருப்பெற எத்தனை நேரம் பிடித்திருக்கும்? எனவே, நான் பாவிதான் முரளி, நான் பாவிதான்!'' என்றாள் ராணி தலை நிமிராமலே.

முரளி விக்கி விக்கி அழுதான். ''ராணி! என் ஆசைகள் எல்லாம் இன்று புகைந்துவிட்டன!'' என்றான் அந்த அழுகையினூடே.

''என் ஆசைகளும் அன்று இதேபோலத்தான் எரிந்து புகைந்து சாம்பலாயின. உங்கள் உள்ளத்து உணர்ச்சி எனக்கு நன்றாகப் புரிகிறது முரளி!'' என்றாள் ராணி.

அதற்குப் பின் அரை மணி நேரம் யாரும் எதுவுமே பேசவில்லை. முரளிதான் முதலில் பேசினான். ''ராணி! இந்த முடிவை மாற்றிக் கொள்ள மாட்டாயா?'' என்று கேட்டான்.

''மன்னித்து விடுங்கள், முரளி! என்னை மன்னித்து விடுங்கள்!''

ராணியின் கண்களை நீர் நிறைத்தது. முரளி தலை நிமிர்ந்து பார்த்தான். ராணி ஒரு கணத்தில் தன் முகத்தைச் சரிப்படுத்தித் திடப்படுத்திக் கொண்டாள். இனி நம்பிக்கை இல்லை என்பதை அறிந்தான் முரளி. மறு பேச்செடுக்காமல் நிதானமாகத் தூக்கம் கலைந்தவனைப் போல் எழுந்தவன் வெளியே வந்தான். மறு கணம் ராணி நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து மேஜை மீது தலையைப் புதைத்துக் கொண்டு கோவெனக் கதறி அழுதாள்.

விடியற்காலை நிலவு காய்ந்தபடி இருந்தது. வீட்டுக் காம்பவுண்டுக்குள் மகிழ மரத்தினடியில் வெண்மையான பூக்கள் உதிர்ந்த


ஒரு கேஸல்ஸ் மின்விசிறி
சொக்கும் எழிலோடு சுகமாய் உறங்க
கேஸல்ஸ் மின்விசிறிகள்
கவர்ச்சியையும், தொல்லையற்ற
சேவையையும் தன்னிகரற்ற
திருப்தியையும் உமக்குத் தருகிறது.
கேஸல்ஸ்
குடும்பத்தினரும் விரும்புவது

வண்ணம் இருந்தன. 'வாழ்க்கையே வீண்! அதுவும் ராணி இல்லாத வாழ்க்கை சகிக்க வொண்ணுதது!' — இந்த நினைவு முரளியைப் பலமாக ஆட்கொண்டு விட்டது. முரளி, பேசாமல், பேச்சுக் கொடுக்காமல் தன் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு அப்படியே சிலையாக உட்கார்ந்து விட்டான் நாற்காலியில். மகிழ மலர்கள் அவன் வரவை எதிர்பார்த்து ஏமாந்து விழுந்தவை விழுந்த படியே கிடந்தன.

காலை மாலையாகி இருள் கப்பியது. ''ஐயா! காப்பியாவது கொண்டு வரவா? அம்மா கேட்கச் சொன்னுங்க?'' என்று கதவைத் தட்டினுன் இராமன். முரளிக்கு நினைவு வந்தாற்போலிருந்தது. ''வேண் டாம்!'' என்றுன் உள்ளிருந்த வண்ணமே. பிறகு நாற்காலியிலிருந்து எழுந்தான். வீடெல்லாம் இருள் கப்பிக் கிடந்தது.

'காதல் காலனைப் போல் கொடுமை வாய்ந்தது. ஆழ்ந்த நீராழும் அதன் கொடு மையைத் தணிக்க முடியாது!'

இந்தக் கருத்தை வெளியிட்டது யார்? சாலமன் என்னும் மகாபுருஷனின் நினைவு வந்தது முரளிக்கு.

தனக்கு உற்ருர் யாருமே இல்லை என்பது போல் உணர்ந்தான் முரளி. அகண்டமாகப் பரந்து விரிந்த இந்த உலகத்தில், தான் ஒரு தனிக் கட்டை என்று தோன்றியது முரளிக்கு. காதலிப்பார் யாருமின்றி — அன்பு செலுத்து வார் யாரும் இன்றி! என்ன கஷ்டம்! என்ன துரதிர்ஷ்டம்! பிள்ளைப் பிராயத்தில் தாயின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த அந்த நாள் நினைவுக்கு வந்தது. அந்த அரவணைப் பிலேதான் எத்தனை பாதுகாப்பு! எல்லா வற்றையும் மறந்து அன்னையின் மடியிலே தலைவைத்து உறங்க மாட்டோமா என்ற எண்ணம் வலுத்தது. தனது இந்தத் தனி மையை யாரிடம் சொல்லி முறையிடுவது? இனி யார் இருக்கிருர்கள், அவன் பேச்சை அநுதாபத்துடன் செவிமடுக்க? என்றைக்கும் இல்லாத திருநாளாக அன்றைக்கு அவன் மனம் எங்கோ இருப்பதாகக் கூறப்படும் ஆண்டவனை நாடியது.

கல் தோன்றி மண் தோன்ருக் காலம் முதலாக — ஏன்? யுக யுகாந்தரங்களாக, உதவுவார் யாரும் இன்றித் தாயின் மணி வயிற்றிலே, இருட் குகையிலே, கரங்குவித்து முழங்கால் மடக்கி ஆதி மனிதன் சிசுவாகப் படுத்திருந்தானே, அப்படிப் படுத்திருக்க வேண்டும். அப்படிப் படுத்திருக்கும் முறையிலேயே. 'ஆதிபகவன் ஒருவன் இருக் கிருன். அவனைத் தொழுதேற்றும் முறையை, இருட் குகையில் சோதிப் பிழம்பாகத் திகழ் பவனை வணங்கும் முறையை — இங்கேயே கற்றுச் செல்!" என்று எந்தச் சக்தி — ஆதி அந்தமற்ற ஆதி சக்தி உணர்த்தியதோ, அதுவே இன்று முரளிக்கும் ஆணையிட்டது. தன்னை நினைவுகூருமாறு. எனவே, முரளி தன் முயற்சி ஏதுவுமின்றியே கரங்கூப்பி, ''ஆண்டவனே!'' என்று அழைத்தான். இந்த உலகத்தை, பேரண்டத்தைப் படைத் தும் புலன்களுக்கு இலக்காகாமல் உள்ளுறை பொருளாகவே திகழும் பரம்பொருளை மண்டியிட்டு வணங்கினுன். தாயின் உதரத் தில் சிசுவாக முழங்கால் மண்டியிட்டுக் கரங் கூப்பிக் கிடந்த நிலை — பரம்பொருளை அறி யாமலே பரம்பொருளைத் துதித்த நிலை— பரம்பொருளாகவே திகழ்ந்த நிலை மீண்டு மொரு முறை அவனில் தோன்றியது.


வாயிற்படியில் நின்ற சுசீலாவைக் கண்ட துமே ராணியின் முகத்தில் ஒரு நொடியில்

நான் கண்ட நரோத்தமர்

ஸ்ரீமான் சித்ரா நாராயணசுவாமியின் அறுபதாவது ஆண்டு விழா நடக்கும் இச்சமயத்தில், பொருளாதார விஷயங்களைச் சிறப்பாகப் பிறருக்குப் புரியும்படி எழுதுவதில் அவருக்குச் சமமானவர்களே இடையாது என்பதைக் கூற விரும்புகிறேன். உயிரற்ற உலர்ந்த விஷயங்களுக்கு (Dry subject) உயிர் கொடுத்து உள்ளத்தில் ஆழப் பதியும்படி செய்ய வல்லவர் அவர்.

'மோட்டாரின் வேகத்தை அதிகரிக்க அழுத்தும் விசைக்கு ஆக்ஸிலரேட்டர் என்று பெயர். காரில் பெட்ரோல் இல்லை. அச்சமயத்தில் ஆக்ஸிலரேட்டரை எவ்வளவு அழுத்தினுலும் கார் முன்னேருது. அதுபோல் திட்டக் கமிஷன் வரிகளையும் கட்டுப்பாடுகளையும் எவ்வளவு அதிகமாக்கினுலும் நாட்டில் பண வருவாயில்லாததால் முன்னேற முடியாது. பெட்ரோல் டாங்கியில் முதலில் பெட்ரோல் ஊற்ற வேண்டும். அது போல் உற்பத்தியைப் பெருக்க, முதலீடுகள் கூட, ஆவன முதன் முதலாகச் செய்ய வேண்டும். அதில்லாமல் வரிகளைக் கூட்டினுல் மட்டும் நாடு முன்னேருது' என்று ஒரு தடவை அவர் அழகாகச் சொன்னுர்.

தபால் படிக்கும் நேரத்தில் நாம் அவரது காரியா லயத்தில் அவரது அறையில் இருந்து விட்டால் அவர் ஒரு சதாவதானியாகக் காட்சியளிப்பதைப் பார்த்துப் பயன் பெறலாம்.



வி. எஸ். மணி

ஆயிரமாயிரம் எண்ணங்கள் நிழலாடின. ''மாமாவின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. உன்னைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்கள். ஏதோ விஷம் அருந்தி விட்டார்!'' என்றான் பதற்றம் மிகுந்த குரலில்.

ஒரே ஓட்டமாக ஓடி முரளியின் காலடிகளில் வந்துவிழுந்தாள் ராணி. வாழ்க்கை முழுவதும் மறைக்க முயன்ற காதல் பொங்கி வந்தது. ''முரளி! நான் வந்துவிட்டேன்!'' என்று சுற்றுச் சூழ்நிலையை மறந்து கூவினாள்.

முரளி கண் திறந்து பார்த்தான். காதல் தீ கனன்று அவனையே எரித்துக்கொண்டிருந்ததைக் கண்டாள் ராணி.

''ராணி! நான் போகிறேன். இனி டாக்டர் வந்தும் பயனில்லை!'' என்றான் முரளி.

''முரளி! இனி நானும் வாழ்வதற்கில்லை. உங்களைத் தொடர்ந்து வந்து விடுகிறேன்!'' என்றாள் ராணி.

''ஊஹூம். முடியாது; கூடாது. இறப்பதைக் காட்டிலும் வாழ்வதற்குத்தான் தைரியம் தேவை. என் கோழைத்தனத்தை மறந்து, எனக்கு ஓர் உறுதிமொழி கொடு. நீ பிழைத்திருப்பதாக. நீ பிழைத்திருந்து வாழ்நாள் முழுவதும் உன் லட்சியங்களை நிறைவேற்ற வேண்டும். உன் தந்தையின் இச்சைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இப்போதாவது என் பேச்சைக் கேள்!'' முரளியின் குரல் தழுதழுத்தது. ''உன் போல் அநாதையாகப் பரிதவிக்கும் பெண்களுக்கு நீ வாழ வழி செய்ய வேண்டும். உத்தியோகங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எனக்கு இருக்கும் அத்தனையையும் உனக்கே உயில் எழுதி வைத்துவிட்டேன். கசிவாவுக்குச் சிறிது போக!'' என்று முடித்தான் முரளி.

''என் கடினமான கொள்கைகளுக்கு நீங்கள் உங்களையே ஆஹுதியாக்கிக்கொண்டு விட்டீர்களே, முரளி!'' — ராணி உரக்க அழுது விட்டாள்.

''உன்னத இலட்சியங்கள் உயிருக்கும் மேலானவை, பெருமதிப்புக்குரியவை!'' என்று கூறிய முரளி, ''ராணி! உன் வாழ்வின் சுகத்தைக் குலைத்த துரோகி நான். என் செய்கைக்காக நான் மிகவும் வருந்துகிறேன். என்ன வருந்தியும் இனிப் பயன் இல்லை. ஆயினும் பச்சாத்தாபத்துக்கு மிஞ்சிய பிராயச்சித்தம் இல்லை. என்னை மன்னிப்பாயா, ராணி?'' என்று கேட்டான்.

''முரளி! காதலுக்குச் சாவு கிடையாது. கால வரையறையும் கிடையாது. இந்த வாழ்க்கையில் உங்களுக்கு மனைவியாகும் பாக்கியம் எனக்கு இல்லாமற் போயிற்று. ஆயினும் மரண தேவனின் முன்னிலையில் நான் உங்களுக்கு மனைவியாகி விதவையும் ஆகிறேன்!'' என்று கூறி ராணி சட்டென்று தன் நெற்றியில் துலங்கிய குங்குமத்தைத் துடைத்துக் கொண்டாள். ''உங்கள் நினைவோடு உலகத்துக்கு என்னால் இயன்ற சேவைகளைச் செய்து நாட்களைக் கழிப்பேன்!'' என்று சொன்னபோது அவள் நெஞ்சைத் துயரம் உருண்டையாக அடைத்தது.

துணிவுக்குப் பழக்கப்பட்டுவிட்ட ராணி இப்பொழுது தைரியமாக எழுந்து சென்று மேஜையின் மீது படத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த வாடிய மகிழம்பூ மாலையைக் கொண்டு வந்து முரளியின் பாதங்களில் வைத்து வணங்கினாள்.

இன்று ராணிக்குச் சொந்தமான மாளிகை அது. துயரமே உருவெடுத்தாற்போல் ராணி நிதானமாய் நடந்து சென்று அவ்வறையின் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றாள். அவள் பார்வை வெளியே நிலைத்தது. பின்னாலிருந்து கசிவாவும் முரளியின் தமக்கையும் துக்கத்தை ஆற்ற மாட்டாமல் உரக்க அழவே, அவள் துயரத்துக்கு அது கருதியென அமைந்தது.

''ஆம், பச்சாத்தாபத்துக்கு மிஞ்சிய பிராயச்சித்தம் இல்லை!'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள் ராணி.

வெளியே விடியற்காலையின் நிலவு படிந்திருந்தது. காம்பவுண்டை ஒட்டிய மகிழ மரத்திலிருந்து வெண்மையான மலர்கள் உதிர்ந்த வண்ணம் இருந்தன. நிலவின் தாற்றலோவெனக் கூறும்படி; மீளாத் துயரத் தீயை விழுங்கிய கண்கள் இரண்டும் விதியின்றி, கதியின்றி உகுக்கும் கண்ணீர்த் துளிகளோ என்று நினைக்கும்படி.

ஆம், திரும்பிப் பார்த்தால் ராணி கண்ணீர்த் துளிகளை உதிர்த்துக்கொண்டிருந்தாள். மகிழ மரமும் அவள் துயரத்தில் பங்கு கொண்டு மலர்களைக் கண்ணீராக உதிர்த்துக் கொண்டிருந்தது. — தமிழில் : ரா. வீ.

வட்ட மேஜை

★ கயல்விழியும்

★ புத்தாண்டு மலரும்

தமிழ்மொழியின் பெருமையையும், நாட்டுப் பற்றையும், பெண்மையின் சிறப்பையும், தியாகத்தின் தெளிவையும் நிரம்ப விளக்கிய அற்புதக் காவியம் ''கயல் விழி''.
நெய்வேலி
10–4–65 வெ. அவையம்

பத்தினித் தெய்வமாகிய கயல்விழி இந்த உலகத்தை விட்டுத்தான் நீங்கினளேயொழிய வாசகர்களின் உள்ளங்களை விட்டு நீங்கவில்லை; நீங்கவும் மாட்டாள். வாசகர்களின் இதயக் கோவிலிலே என்றென்றும் அழியாத தெய்வமாக வீற்றிருப்பாள் அவள். சுந்தர பாண்டியனுடைய வீரம், புலமை, தியாகம் இவை போன்ற அருங் குணங்களுக்கும், பாமினியின் தூய்மையான காதலுக்கும் தமிழ்ப் பற்றுக்கும், விழுப்பரையர், குலசேகர பாண்டியர், வீரநரசிம்மன் போன்றவர்களுடைய போற்றத்தக்க பண்புகளுக்கும் அழிவே கிடையாது.
பெங்களூர்
8–4–65 ந. கணேசன்

அகிலன் காட்டிய கயல் விழி வாரந்தோறும் என் நெஞ்சம் நெகிழ்வித்தாள். இன்றே பிழிந்து எடுத்து விட்டாள். உணர்விழந்து கையற்றுக் கடவுட் காட்சியாம் கொற்றவையை உன்னி உன்னி உருகினேன். கயல்விழி கறையென்று கருதியதை மிக நாகரிகமாகக் காட்டியுள்ள அகிலனின் தமிழ்ப் பண்பாடு தலைவணங்குதற்குரியது.
கோவை இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
9–4–65 (தமிழ்ப் பேராசிரியர்)

திரு ''அகிலன்'' அவர்களின் கற்பனைப் பாவைக் ''கயல்விழி'' தமிழ் மக்களின் காவியமாகி விட்டாள். கற்பினில் கண்ணகியையும், கலையினில் மாதவியையும் ''கயல் விழி உருவில்'' எங்கள் நெஞ்சத்து நீங்காது நிலைத்திருக்கச் செய்த ஆசிரியருக்கு எங்கள் நன்றி. இந்தக் காவியத்தை எங்களுக்கு அளித்த 'கல்கி'க்கும் எங்கள் நன்றிகள் பலப்பல.
சின்ன சேலம் சா. ஆனந்தன்
9–4–65 சி. சு. பூவராகசுவாமி

'கயல் விழி'யின் 'பாண்டித் திருமகள்' கூத்தில், அவளின் ஆவேசத்தையும் மகிழ்ச்சியையும், வெற்றியையும் ஒருங்கே கண்டு அந்தந்த உணர்ச்சிகளின் வசமாகவே மாறி விட்டோம்.
காரைக்குடி
8–4–65 பத்மாமணி

விலையோடு பத்திரிகையின் தரமும் உயர்ந்திருப்பது குறித்துப் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.
திருவனந்தபுரம்
8–4–65 எஸ். எஸ். மணி

சிந்தைதனைக் கொள்ளை கொண்ட
காவியமாம் 'கயல் விழி'யின் — நாயகி
கற்பரசி கயல்விழியும் — நாயகனும்
செந்தமிழ்க் குமரன் சுந்தரபாண்டியனும்,
பண்புடையாள் பாமினியும்,
குணசீலனும் குலசேகர பாண்டியனும்,
பெரும்புலவர் பெருமகன் விழுப்பரையரும்,
சோறுடைச் சோணாட்டுத் தலைவன்
''தியாக விநோதன்'' குலோத்துங்கனும்
தமிழர் தம் நெஞ்செலாம் நிறைந்து வாழ
தேனினிய தெய்வத் தமிழில் எமக்கீந்த
''அகிலன்'' எனும் தமிழ்த் தாயின் தவப்
புதல்வ! நீடுவாழ்க நின் புகழ்!


உதகை
8–4–65 சேசைய்யன்

புத்தாண்டில் வெளி வந்த 'அன்னை மூவர்' என்னும் மறக்க முடியாத கதையை அமைத்த கோமதி சுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றி.

தி. ஜானகிராமன் அவர்களின் 'போஷிக்' என்ற சிறுகதை எனக்குப் பிடித்த நல்ல பால் பாயசம். இவைகளை எங்களுக்குத் தந்த தங்கச் சுரங்கமான கல்கிக்கு என் நன்றி என்றும் உரித்தாகுக.
மாமல்லபுரம்
7–4–65 கோவி. பரஞ்சோதி

அகிலன் எழுதி வந்த 'கயல் விழி' என்ற சரித்திரத் தொடர்கதை முடிவடைந்து விட்டது. காலஞ்சென்ற கல்கிக்குக் கிட்டத்தட்ட சரியாகத் தமிழ் நடையைத் திறம்படக் கையாண்டிருக்கிறார். பாமினி சுந்தரபாண்டியனுக்கு எழுதிய கடிதம் ஒன்றே சான்று. நல்ல கற்பனை; விறுவிறுப்பு, சுவாரஸ்யமாக எழுதி வந்தார். அதற்கேற்றாற்போல் வினு சித்திரம் தீட்டித் தந்திருக்கிறார். 'கல்கி'யின் தனிப் பிரதி 30 பைசா வானாலும், 35 பைசாவானாலும் என்ன? கல்கி நீடூழிகாலம் நிலைத்து நிற்க வேண்டுமென விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.
திருநெல்வேலி
9–4–65 வி. வரதராமநாதன்

ஆட்சி மொழி பற்றித் தாங்கள் நியாயமாகவும் நேர்மையாகவும் எழுதி வருவது என்னை மிகவும் கவர்ந்தது. இந்த நேரத்தில் அரசாங்கம் பத்திரிகைத் தொழிலுக்குச் செய்யும் கொடுமைகளைக் காணத் துயரடைகின்றேன். அண்ணல் காந்தி, நேரு இவர்கள் சகாப்தம் முடிவடைந்து விட்டது என்பதை மக்கள் நன்குக உணர்ந்து விட்டார்கள். 1967ல் நீதியும் நேர்மையும் ஆட்சிபீடமேறும் என்று நான் மனத்தைத் தேற்றிக் கொள்கின்றேன்.
சேலம்
10–4–65 சு. இராமமூர்த்தி



பாதுகாத்தருளும் பாதுகை


ஸ்ரீ ராம பாதுகைகளைச் சிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்து பதினாலு ஆண்டு காலம் பரதாழ்வார் பூஜித்து வந்ததை ஸ்ரீமத் ராமாயணத்தின் மூலம் அறிகிறோம். இன்றும் கோயமுத்தூர் ராம்நகர் கோகலே வீதியில் உள்ள ஸ்ரீ ராம பாதுகா மந்திரத்தில் 876 வருட சரிதம் கொண்ட புராதன ஸ்ரீராம பாதுகைகள் சிம்மாசனத்தில் எழுந்தருளியிருப்பதை அன்பர்கள் தரிசித்து வருகிறார்கள்.

சாளக்ராம வடிவிலுள்ள இந்தப் பாதுகைகளில் சாஸ்திரங்களில் சொல்லியுள்ளபடி சங்கு, சக்கரம், கதா, பத்மம் முதலிய பகவத்பாத சின்னங்கள் அனைத்தும் இருக்கின்றன. இப்பாதுகைகள் சிற்ப சாஸ்திரப்படி ஏழு வயதுப் பாலகனைக் குறிக்கக் கூடியதாக இருக்கின்றன. இவைகளில் பீஜாக்ஷரங்களும் ஸ்ரீ ராம மகா மந்திரங்களும் சுலோகங்களும் காணப்படுகின்றன.

பாதுகைகளின் அற்புத சரித்தைப் பற்றிக் கோவை ஸ்ரீ ராம பாதுகா தாஸ மண்டலியினர் கூறும் விவரமாவது:

காசி, கனோஜ், அயோத்தி ஆகிய மூன்றையும் கி. பி. 1080லிருந்து 1100 வரையில் ஆண்ட சக்கரவர்த்தி சந்திர தேவாவினாலும் அவருக்குக் கீழ் அயோத்திக்கு மட்டும் சிற்றரசராக இருந்த ஸுதன் வராஜனாலும் பூஜிக்கப்பட்ட பாதுகைகள் இவை. 1089ல் ஸ்ரீ கோபீட ஸ்ரீ நரசிம்ம பீடாதிபதிகளான ஸ்ரீ பிராக்ரு தீர்த்தர், ஸ்ரீ பராக்கிரம தீர்த்தர் ஆகிய இரு யதீசுவரர்களும் சாதுர்மாஸ்ய விரதத்துக்காக அயோத்தியில் தங்கியிருந்த சமயம் அவர்களுக்கு இப்பாதுகைகள் குரு காணிக்கையாகக் கொடுக்கப்பட்டன. ஸ்ரீ பிராக்ரு தீர்த்தர் ஸ்ரீ ராமச்சந்திர தீர்த்தருக்குக் கொடுத்தார். பின்னர் அவர் வம்சத்தினரான கோபிநாதாச்சாரின் வசம் பாதுகைகள் வந்தன. புரிஜகந்நாதத்தில் பாதுகைகள் பூஜிக்கப்பட்டு வந்தன. பதினான்காம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் புரி ஜகந்நாதத்தில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. அச்சமயத்தில் தமிழகத்தின் ஒப்பற்ற ஸ்ரீ வைஷ்ணவாசாரியரான வேதாந்த தேசிகர் உத்தர பாரதம் வந்திருந்தார். பாதுகைகள் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டன. குழப்ப நிலை தீர்ந்த பின் மீண்டும் புரி ஜகந்நாதத்தைச் சேர்ந்த கோபிநாதாச்சாருக்கே பாதுகைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. கோபிநாதாச்சாரிடமிருந்து ஸ்ரீ வித்யாரண்யரும் பாதுகைகளைப் பெற்று, கி. பி. 1355 – 1359 வரை பூஜித்திருக்கிறார்: விசிஷ்டாத்வைதத்தில் ஸ்ரீ ராமானுஜருக்குப் பின் வேதாந்த தேசிகர் எவ்வளவு முக்கியத்வம் பெற்றவரோ, அப்படியே அத்வைதத்தில் ஸ்ரீ ஆதி சங்கரருக்குப் பின் முக்கியம் வாய்ந்தவர் ஸ்ரீ வித்யாரண்யர்.

கோபிநாதாச்சாரின் பெண் வமிசத்தவரான விஜயநகரத்து வாகதேவாச்சாருக்குப் பரம்பரைச் சொத்தாகச் சென்ற பாதுகை ஸ்ரீ புரந்தர தாஸருடைய குமாரர் ஸ்ரீ வரத புரந்தர தாஸருக்கு விவாக சமயத்தில் தானமாகக் கொடுக்கப்பட்டது. அதாவது அத்வைத விசிஷ்டாத்வைதப் பெரியார்களின் பூசனையைப் பெற்ற பாதுகை துவைதப் பெரியார் வமிசத்திலும் வந்து சேர்ந்தது. இவரால் கி.பி. 1590 வரை பூஜிக்கப்பட்டது. பின் இவருடைய குமாரரால் சத்திரபதி சிவாஜி மகாராஜாவின் குருவான ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகளிடம் கொடுக்கப்பட்டது. 1661ல் இருந்து 1664 வரை வட இந்திய யாத்திரை செய்த மந்த்ராலய ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகளாலும் இப் பாதுகைகள் பூஜிக்கப்பட்டுள்ளன.



இவ்வாறு பல மகான்களால் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீ ராம பாதுகைகள் புரந்தர தாஸரின் பெண் வம்சாவளியில் வந்துள்ள ஸ்ரீ ராம ராஜா அவர்களுக்கு கி. பி. 1949ல் மந்த்ராலய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ராம திரயோத சாக்ஷரீ தாரக மகா மந்த்ர உபதேசத்துடன் கொடுக்கப்பட்டன. அன்றிலிருந்து ஸ்ரீ ராமராஜ விட்டலர் ஸ்ரீ ராம பாதுகா ஸாலக் கிராமத்தைப் பூஜித்து வருகிறார்.

பிரதி வருஷம் ஆவணி மாதத்தில் மூன்று நாட்கள் பாதுகா பட்டாபிஷேகம் விமரிசையாக நடைபெறுகிறது. 'ஸ்ரீ ராம பாதுகா மந்திரத்தை அயோத்தியில் கட்டிப் பாதுகையை அங்கு பிரதிஷ்டை செய்ய வேண்டும்; அதற்கு முன் பாரத தேசத்தில் உள்ள எல்லா புண்ணிய க்ஷேத்திர தீர்த்தங்களிலும் பாதுகையை வைத்துப் பூஜித்து, சகஸ்ர கோடி ஸ்ரீ ராம நாம ஜபத்தைப் பல பக்தர்கள் ஒன்று சேர்ந்து முடிக்க வேண்டும்' என்பது கோவை ஸ்ரீ ராம பாதுகா தாஸ மண்டலியின் இலட்சியமாகும்.

ஸ்ரீ ராம பாதுகை இக–பர நலன்களையெல்லாம் அளித்து அக–புற இன்னல்களிலிருந்து பாதுகாத்தருளுவதாக உணரும் பல பக்தர்கள் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளனர். ஸ்ரீராமபிரான் அருளால் பக்தர்களின் இலட்சியம் இனிது நிறைவுற வேணும்.

உங்களுக்கு பிடித்தமான இசையை

எங்கும்

எந்த நேரத்திலும்

எச்எம்வி

காமெட் டில்

கேட்கவும்



நீங்கள் விரும்பும் இசைத் தட்டுகளை, எந்த நேரத்திலும் எச். எம். வி. ''காமட்''டில் கேட்டு மகிழுங்கள் — 4 ஸ்பீட் இசைத்தட்டு ஒலி பிரதிபலிக்கும் கருவி, அதற்கு தகுந்த ரிக்கார்ட் பிளேயர், சப்தம் அதிகரிக்கும் கருவி, ஒலிப்பெருக்கி, ஆகியவை கச்சிதமான கைப் பெட்டியில் அடங்கி இருப்பதுதான் ''காமட்''


உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள எச்.எம்.வி. வியாபாரிகளிடம் உடனே சென்று இதை இயங்கச்செய்து பாருங்கள். உதவியேதும் தேவையெனின் எச்.எம்.வி. தபால் பெட்டி நெ. 48 கல்கத்தா 1-க்கு எழுதவும்.

மாடல் நெ. 1160. சசி
ரூ. 343.70
வரி தனி.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

பளபளப்பான செந்நிறத் தரைகள்
— உங்கள் வீட்டிற்குப் பெருமை!

சிவப்பு கார்டினல் பாலிஷ் மூலம் உங்கள் வீட்டுத் தரைகளை செந்நிற ஒளியுடன் பிரகாசிக்கும்படி வைத்துக் கொள்ளுங்கள். மினுமினுப்பற்ற சாதாரண கல்தரையானாலும் சிமிட்டித் தரையானாலும் பளபளப்பைக் கொடுப்பதில் சிவப்பு 'கார்டினல் பாலிஷ்' அற்புதமாக வேலை செய்யக்கூடியது. கணநேரத்தில் மங்கலான தரையை புதியதோர் செந்நிற ஒளியுடன் பிரகாசிக்கும்படி செய்துவிடும்! உங்கள் வீட்டின் அழகான தரையை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்துக் கொள்ள இன்றே, சிவப்பு கார்டினல் தரைப் பாலிஷை உபயோகியுங்கள்!






CP-1612

சிவப்பு கார்டினல் பாலிஷ்

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது).

காட்சி 1

இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிறது. 'அமெச்சூர்' எழுத்தாளனான நம்பிராஜனின் ஒண்டுக் குடித்தன 'போர்ஷ'னின் ஒரே அறையில் மின்விளக்கு 'உயிரை எடுப்பது போல்' பளிச்சென்று எரிந்து கொண்டிருக்கிறது. நம்பிராஜன் நாற்காலியில் உட்கார்ந்தவாறு ஆவேசம் வந்தவனைப் போல் வெகு வேகமாகச் சிறுகதை ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறான். அவனுடைய கர்வமான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் 'சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறான்!' மனைவி மங்களமும், குழந்தை கோமதியும் கட்டிலில் படுத்திருக்கிறார்கள். மங்களம் தூக்கம் பிடிக்காமல் இலேசாக முணுமுணுத்தவாறு புரண்டு கொண்டிருக்கிறாள்.]



அமெச்சூர் எழுத்தாளர்!

நம்பிராஜன் (பெருமிதத்துடன், எழுதுவதை நிறுத்தி): இந்த இடம் எவ்வளவு அருமையாக எழுத்தில் விழுந்து விட்டது! இந்தச் சில வரிகள்தான் என் இந்தக் கதைக்கே மகுடம் இட்டது போல் இருக்கப் போகின்றன. என் முத்திரை பளிச்சென்று தெரிகிறதே, இந்தச் சொற்களில்! என்ன விந்தையடா, இது! என்னாலும் இவ்வளவு அற்புதமாக எழுத முடியுமா? (தன் முதுகில் தானே தட்டிக் கொண்டு, தான் எழுதியதைச் சற்று உரக்க உணர்ச்சிகரமாகப் படிக்கிறான்): 'இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் இருக்கும். நமது கதாநாயகி கனகாம்புஜம் தூக்கம் பிடிக்காமல் கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாள். உறக்கம் எப்படி அவளை இறுக்கும்? அன்று மாலை சாதாரண வார்த்தைகளையா சொல்லி விட்டுப் போனான், அவனுடைய அத்தான் அனவரதம்?....'

மங்களம் (சடக்கென்று எழுந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டு): ஐயோ, ஐயோ! உங்கள் கதாநாயகி கனகாம்புஜத்தின் தலையில் இடிவிழ; டிங்கு ஜுரம் வந்து அவள் ஓடாய்த் தேய!.... நான் அப்போ பிடிச்சுத் தூக்கம் பிடிக்காமல் கண்

அழகிரி விசுவநாதன்

னுக்கு முன்னே புரண்டு புரண்டு படுக்கிறேனே, அது உங்க மனசிலே படலே? எங்கோ உங்க கற்பனைக் கனகாம்புரம் தூங்காமல் தவிக்கிறதுதான் உங்க கண்ணை உறுத்துதா?.. ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலே என்ன எழுத்து வேண்டியிருக்கு என்கிறேன்? பேசாமல் விளக்கை அணைச்சுட்டுப் படுங்கோ!

நம்பி: மங்களம், நீ என் மனைவியாச்சேன்னு, உன்னை மன்னிச்சு விடறேன்! ஒரு வருங்காலப் பிரபல எழுத்தாளன் அமர சிருஷ்டி ஒன்றைப் படைத்துக் கொண்டிருக்கும்போது நீ இப்படித் தொந்தரவு கொடுக்கலாமா? 'மூடை'க் கெடுக்கலாமா? ஒரு தடவை வந்த 'மூட்' போயிட்டால் மறுபடி எப்போ வரும்னு காத்துக்கிட்டு அல்லவா உட்கார்ந்திருக்கணும். நான் உன்னை ஒண்ணு கேட்க ஆசைப்படுகிறேன்: நீ ஒரு எழுத்தாளன் மனைவியான்னு! கொஞ்சமாவது இது வேண்டாம்? என் இறவாப் புகழ் எழுத்தோவியத்தை....

மங்களம்: ஹூக்கும்! பெரிய எழுத்தோவியம்! அதுதான் முதல் கதையிலிருந்து நாத்பத்தி ஒன்பதாவது கதை வரையில் தபாலில் போன மேனிக்குத் திரும்பி வந்து, பழைய பேப்பர்க்காரனை எதிர்பார்த்துக்கிட்டுக் கிழிந்த சாக்கை முக்காடு போட்டுக்கிட்டு அதோ மூலையில் உட்கார்ந்திருக்கே! ஒரு 'சாம்பிளு'க்கு ஒரு கதையாவது பிரசுரமாக வேணும்?

நம்பி: இது என்ன, மங்களம், ஐந்நூறு கதைகளும்தான் திரும்பி வரட்டுமே! பிறவி எழுத்தாளனை இந்த நம்பிராஜன் அசந்து விடுவானு? கதை நல்லா இல்லாமலா திரும்பி வருது? நமக்கு இன்னும் 'டைம்' வரலே, அவ்வளவுதான்! நான் எழுதும் ஒவ்வொரு கதையும் ஒரு முத்து, ஒரு வைரம், ஒரு கோமேதகம், ஒரு வைடூரியம், தெரியுமா உனக்கு?

மங்களம் (சலிப்புடன்): அதான் தெரிஞ்சு கிடக்குதே!.... பேப்பருக்கும் பேனுவுக்கும் பிடிச்ச கேடு! பேசாமே விளக்கை அணைச்சுட்டுத் தூங்குங்க.

நம்பி (போலி நகைப்புடன்): தூக்கமா? எனக்கா? ஊஹூம், நிச்சயம் வராது. எங்க கம்பெனி டைப்பிஸ்ட் முருகவேலன் மாதிரி வாரம் ரெண்டு மூணு கதை எழுதி, ரெண்டு மூணு 'செக்' வாங்காட்டியும், இன்னும் இரண்டு மாசங்களுக்குள் ஒரே ஒரு 'செக்' — ஒரே ஒரு ரூபாய்க்காவது என் கதைக்காக வாங்குகிற வரையில் எனக்குப் பால் கசக்கும், படுக்கை நோகும், உறக்கம் மறக்கும்!

மங்களம்: என்னமோ பழமொழி சொல்வாங்க. 'பக்கத்து வீட்டுக்காரிக்'குன்னு! அதுமாதிரி இருக்கு நீங்க பேசறது. 'டைப்பிஸ்ட்'ன்னு 'கலைவாசல்' பத்திரிகையில் வாரம் தவறாமல் கதைகள் எழுதறாரே, அவரைத்தானே சொல்றீங்க?.... முருகவேல்'னு?

நம்பி (பொறுமையுடன்): அவனைத்தான் சொல்கிறேன். பெயரைப் பார் பெயரை, 'ஷாப்புக் கடை' என்கிற மாதிரி!

மங்களம்: ஏன், அவரு பேருக்கென்ன?... பெயரும் நல்லாத்தான் இருக்கு. அவருடைய கதைகளும் நல்லாத்தான் இருக்கு!.... போன வாரம் 'கலை வாசல்'லே 'மண்ணோ,



மரகதமோ'ன்னு ஒரு கதை எழுதியிருந்தாரு பாருங்க, படிச்சேன், அப்படியே கண்ணுலே தண்ணி வந்திடுச்சு!

நம்பி (விழுந்து விழுந்து சிரித்து): ஓகோ, அந்தக் கதையா, நானும்தான் படிச்சேன். ஒரு டாக்டர் ஒரு குழந்தைக்கு ஆபரேஷன் செய்வாரு; குழந்தை இறந்து போயிடும்; அதனுடைய அம்மா வந்து....

மங்களம்: ஆமாம், அதே கதைதாங்க! அருமையான கதைங்க! சிறுகதைக்கு அது ஒரு இலக்கணம்; அல்லது அதே ஒரு சிறு கதை இலக்கியம்.

நம்பி (எரிச்சலுடன்): மண்ணாங்கட்டி! கதையா அது? அப்பட்டமான 'போர்'! அவனுடைய பெயருக்காக அதை வெளியிட்டிருக்காங்க!

மங்களம்: இந்தப் பாருங்க, அபாண்டமா ஒருத்தரைப் பத்திப் பேசினு, எனக்குக் கோபம் வரும்!... இந்தக் கலைஞர்களுக்கே ஒரு பிறவிக் குணம், பிற கலைஞர்களுடைய நல்ல படைப்புக்களை மனசாரப் பாராட்ட மாட்டாங்க!.... அந்தக் கதை மட்டுமா? இந்த வாரம் 'மயில்'லே ஒரு சிறுகதை எழுதியிருக்காரு. 'வான வீதியில்' ஒரு நாடகம் வந்திருக்கு. 'கனகாம்பரத்தி'லும் ஒரு கதை பிரசுரமாகியிருக்கு! ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்து நிக்குது! என்ன ஒயிலான நடை! என்ன கருத்து! என்ன ஆழம்! என்ன வர்ணனை?

நம்பி: போதும், போதும் உன் கனாரசனை! சொந்தக் கணவன் எழுதறதை ரசிக்கத் தெரியலே, எவனோ எழுதறானும்! (எழுந்து நின்று, நாடக பாணியில்) டேய், முருகவேலா, இன்னும் இரண்டு மாதம் பொறுடா! அதுக்குள் என் கதைகளுக்கு ஒரு 'செக்'கா





வது வரலே, நான் நம்பிராஜன் இல்லே! ஆமாம், இது இந்த எழுத்தாளனின் சபதம்; அல்லது சூளுரை!

மங்களம்: ஐயா, எழுத்தாளக் கணவரே! நிறைவேற்ற முடியாத சபதம் ஒன்றைப் போட்டுவிட்டீர்களல்லவா? அதுவே போதும். பேசாமல் விளக்கை அணைத்துவிட்டுத் தூங்குங்கள். நீங்க போட்ட 'மங்கம்மா சபதத்தில்' குழந்தை கோமதி கூட விழித்துக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது!

நம்பி: அதுதான் நடக்காது! கதையை எழுதி முடிக்காமல் தூக்கமா? மணி நாலானாலும் சரி, கதை எழுதி முடித்துவிட்டுத் தான் தூக்கம்! 'கலைவாச'லுக்கு நாளையத் தபாலில் சேர வேண்டுமே, இந்தக் கதை!

மங்களம்: நான் தூங்கப்போறேன். நீங்க எழுதுங்க, இல்லே, சும்மா விளக்கைப் போட்டுக் கிட்டு உட்கார்ந்து தவம் பண்ணுங்க! எனக்கென்ன, நானு நாளைக்கு ஆபீசிலே கொட்டாவி விட்டுட்டு மானேஜர் கிட்டே வசவு வாங்கிக் கட்டிக்கப் போறேன்?

காட்சி 2

[பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். நம்பிராஜன் குமாஸ்தாவாகப் பணியாற்றும் கம்பெனியில் ஆபீஸ் அறை. நம்பிராஜன் அவனுடைய இருக்கையில் சோர்வோடு உட்கார்ந் திருக்கிறான். அவனுக்குச் சற்றுத் தள்ளி டைப்பிஸ்ட் முருகவேலன் அமர்ந்து அலுவலகக் காரியத்தில் கண்ணாக இருக்கிறான். நம்பிராஜனின் உற்ற நண்ப னான 'டெஸ்பாட்ச்' குமாஸ்தா இராம லிங்கம் வருகிறான்.]

இராமலிங்கம் (நம்பிராஜன் முதுகில் தட்டி, மெல்ல): என்னப்பா! முருகவேலனை எரிச்சுடற மாதிரி பார்த்துக்கிட்டு உட் கார்ந்திருக்கே? 'கலைவாசல்'லே அவனுடைய தொடர் கதை ஒன்று இந்த வாரம் ஆரம்ப மாயிருக்கே, பாத்தியா? ஆரம்பமே படு ஜோரா இருக்கப்பா!

நம்பி: அது கிடக்கட்டும் இராமு! ஒரு சோகமான சமாசாரம்!.... என்னுடைய ஐம் பதாவது கதையும் 'கலைவாசல்'லேயிருந்து இன்னைக்குத் திரும்பி வந்துடுச்சு!

இராமு (மெல்ல நகைத்து): இந்தப் பாரு, உன்மேல் நான் உண்மையிலேயே அனுதாபப் படறேன். ஆனால் எந்தக் காரியத்தையும் எந்த வழியில் போனால் சாதிக்கலாமுன்னு தெரியாமல் எத்தனை காலம் முயன்றாலும் தோல்விதான் கிட்டும்! ....ஒண்ணு செய்: இன்னைக்கே லீவு எடுத்துக்கிட்டு நேரே மத ராசுக்குப் போய்க் 'கலைவாசல்' ஆசிரியரைப் பாரு. உன்னுடைய எல்லாக் கதைகளையும் மறுபடியும் காட்டு. இதுவரையில் நீ எழுதி எழுதிப் பட்டிருக்கிற கஷ்டங்களைக் கூறு. உன் கதைகளுக்காக இல்லாவிட்டாலும் உனக்காகவாவது அனுதாபப்பட்டு ஒரு 'சான்ஸ்' கொடுக்கலாம்!

நம்பி (நம்பிக்கையுடன்): அப்போ, இன் னைக்கு ராத்திரியே மதராஸுக்குப் புறப்பட வேண்டியதுதான்...

காட்சி 3

[அதே இரவு. மணி எட்டு. சென்னை செல்ல ஆயத்தம் செய்துகொண்டிருக் கிறான். அந்த நேரத்தில் அவனுடைய பள்ளிக்கூடப் பழைய நண்பன் வேணு உள்ளே நுழைகிறான்.]

நம்பி (மகிழ்ந்து): அடடே, வேணுவா? என்னப்பா அடையாளம் தெரியாமல் உப்பிப் போயிட்டே! உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சில்லே?...

வேணு : ஆமாம்! பக்கத்துத் தெரு விலே என் அத்தை வீடு இருக்கு. அங்கே வந்தேன்; வழியிலே நம்முடைய பழைய சிநேகிதன் 'பம்பளிமாஸ்' — நம் — இராம லிங்கத்தைப் பார்த்தேன். அவனும் உன் கூடத்தான் கம்பெனியிலே இருக்கானாம்! அவன் நீ இங்கே இருக்கிறதாச் சொன்னான். அப்படியே உன்னையும் பார்த்துவிட்டுப் போக லாம்னு வந்தேன்.... அவ்வளவுதான்!

நம்பி: அவ்வளவுதானா?... நீ என்ன வேலை யிலே இருக்கே? எந்த ஊரிலே இருக்கே?

வேணு: ரொம்பவும் சின்ன வேலையப்பா. சென்னையிலே ஒரு பத்திரிகையிலே துணை யாசிரியரா இருந்து இலக்கியத் தொண்டு செஞ்சிக்கிட்டு இருக்கேன். ஆனால் என் மனத்துக்குப் பிடித்தமான வேலை.

நம்பி: என்ன? பத்திரிகையிலே துணை யாசிரியரா இருக்கயா? பள்ளிக்கூட நாட் களிலே தமிழ்ப் பத்திரிகைகளைக் கையாலே கூடத் தொட மாட்டியே!... எந்தப் பத்தி ரிகையிலே இருக்கே நீ?

வேணு (அடக்கமாக): சின்னப் பத்திரிகை அப்பா; 'கலைவாசல்'னு பேரு!

நம்பி (மயங்கி விழாத குறையாக): என்ன 'கலைவாசலா?'.... சின்னப் பத்திரிகையா அது? தமிழ் நாட்டிலேயே பெரிய பத்திரிகை ஆச்சே! (அடுக்களைப் பக்கம் திரும்பி) மங் களம், ஏ, மங்களம், இங்கே ஓடி வாயேன், 'செக்கு' வந்திருக்கு 'செக்கு', வந்து பாரேன்!



மங்களம் (வந்துகொண்டே): செக்கு, மாடு, என்னு, பிண்ணுக்கு என்கிறீர்களே, என்ன விசயம்?...உங்கள் மதராஸ் பயணம் என்ன வாச்சு?

வேணு: என்ன நம்பி, ரயிலுக்கா புறப்பட்டுக்கிட்டு இருக்கே?

நம்பி: இனிமே நான் ஏனப்பா ரயிலுக்குப் போறேன்?... கும்பிடப் போன தெய்வம் தான் குறுக்கே வந்துடுச்சே! (எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாகச் சொல்லி) நீதான் வேணு என் சபதம் நிறைவேற உதவி செய்யணும்.

வேணு (நம்பிராஜனின் ஒரு சிறு கதையை மேலோட்டமாகப் பார்த்தவாறு): 'கலைவாச'லுக்கு வர்ற கதைகளையெல்லாம் ஆசிரியரும் இன்னொரு துணையாசிரியருமான 'தோணு'வும்தான் பார்க்கிறது வழக்கம். ஆனால் அடுத்த வாரம் 'தோணு' விடுமுறையில் போக இருக்கிறார். இனி அவர் அதுவல்களையும் நான்தான் பார்க்க வேண்டும்.

நம்பி (குதித்து): மங்களம், நமக்கு 'டைம்' வந்துடுச்சு மங்களம், 'டைம்!' நம்ம கதைகளுக்கு நல்ல காலம் வந்திடுச்சு.

வேணு (நம்பிராஜனின் ஒரு கதையைப் படித்து முடித்தவன், கதை தரக் குறைவாக இருப்பதைக் கண்டு தயக்குன்): இப்படிக் கதை எழுதினால் யார் வெளியிடுவார்கள்! (உரக்க) நம்பி, உன் கதைகளெல்லாம் நன்றாகவே இருக்கின்றன. பரவாயில்லை. இன்னும் கொஞ்சம் முயன்று திருத்திக் கவனமாக எழுதினால் சரியாகி விடும்...

நம்பி: அப்போது, எல்லாக் கதைகளையும் கட்டி உன்னிடமே தந்துவிடவா? எல்லாவற்றையும் படித்துப் பார்த்து ஒன்றையாவது வெளியிட்டு ஒரு 'செக்'கை அனுப்பு.

வேணு: அவசரப்படாதே நம்பி!... நான் இங்கிருந்து திருநெல்வேலிக்குப் போறேன். அங்கிருந்து குற்றாலம் போய்விட்டு அடுத்த வார முதலில் சென்னையில் இருப்பேன். நீ கதைகளையெல்லாம் நேரே 'கலைவாசல்' காரியாலய முகவரிக்குத் தபாலில் அனுப்பிவை. அப்படி அனுப்பு முன் மீண்டும் ஒரு முறை அவைகளைப் படித்துத் திருத்து. நான் சென்னை போனவுடன் பார்க்கிறேன்!

நம்பி: நீ சொல்றபடியே செய்துடறேன்!

மங்களம்: பாவங்க, எப்படியாவது ஒரு 'செக்'கை அனுப்பி வையுங்க.

நம்பி: ஹாஹாம்... நீயே எனக்கு என் சிநேகிதன் கிட்டேயே சிபாரிசு செய்யற அளவுக்கு வந்துட்டியா?

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]

காட்சி 4

[ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள். நம்பிராஜனின் வீடு. கையிலே தபாலில் வந்த 'செக்'கைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவாறு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். மங்களம் வருகிறாள்.]

மங்களம்: ஆ. 'செக்'கா? எழுத்தாளருக்கு 'செக்' வந்திருக்கிறது!

நம்பி: ஆமாம், செக்கு, மாடு என்னு, புண்ணுக்கு எல்லாம் வந்திருக்கு ஐந்நூறு ரூபாய்க்கு! நீ போய் 'என் வீட்டுக்காரருக்கு 'செக்' வந்திருக்கிறதுன்னு' தண்டோரா போட்டுட்டு வா. எல்லாரும் வந்து என் முகத்தில் காரி உமிழட்டும்!

மங்களம்: என்னுங்க, என்னமோ மாதிரி பேசறீங்க? என்ன விசயம்? ஒரு கதைக்கா ஐந்நூறு ரூபாய்?

நம்பி (சுவையில்லாமல்): நல்லா நீயே பாரு! ('செக்'கைத் தூக்கி மேஜை மேல் அலட்சியமாகப் போடுகிறான்.)

மங்களம் (செக்கை எடுத்துப் பார்த்து): ஆமாம். நீங்க சொன்னது உண்மைதான்! ஐந்நூறு ரூபாய்க்குத்தான் வந்திருக்கு! எல்லாக் கதைகளுக்கும் மொத்தமாக அனுப்பியிருப்பாங்க போலிருக்கு. என்னங்க உங்க சிநேகிதரு வேணு ரொம்ப நல்லவருங்க!

நம்பி (அழுத்தமாக): வேணு நல்லவன் இல்லே மங்களம், 'ரயி'லுன்னு சொல்லு! இந்தச் 'செக்கை' 'கலைவாசல்' அனுப்பியிருந்தால், நான் இப்படியா 'உம்முன்னு' உட்கார்ந்திருப்பேன்? இந்த செக்கை அனுப்பியிருக்கிற 'நல்லவரு' ரயில்வே நிர்வாகமாக்கும்!

மங்களம் (புருவத்தை உயர்த்தி): நீங்க சொல்றது ஒண்ணுமே புரியலையே எனக்கு!

நம்பி: புரியாதுதான், மங்களம், புரியாதுதான்..... விளக்கமாகச் சொல்றேன். கேட்டுக்கோ.... வேணு ஐம்பது சிறு கதைகளையும் கட்டித் தபாலில் அனுப்பச் சொன்னான்?... கதைகளை மூட்டையாகக் கட்டி நேரே ரயில் நிலையம் போய்ப் 'பார்சலா'க அனுப்பினேன். 'பார்சலின் பெறுமானம் எவ்வளவு என்று பார்சல் கிளார்க் எழுதச் சொன்னார். ரூபாய் ஐந்நூறு என்று குத்து மதிப்பாய் எழுதி வைச்சேன். அதோடா? மதராஸ் போகும் திருவனந்தபுரம் ரயில் வரும் வரை நானும் இருந்து, பார்சல் கிளார்க்குடன் போய், நமது கதை மூட்டையைப் பார்சல் வானில் அலுங்காமல் குலுங்காமல் வைக்கச் சொல்லிவிட்டுத்தான் திரும்பினேன்...இவ்வளவும் அக்கறையோடு செய்துவிட்டு வந்தேனா? என்னடா என்றால், மறு நாள் காலை பேப்பரைப் பார்க்கிறேன்: 'சென்னை செல்லும் திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியில் தீவிபத்து. 'பார்சல்வான்' முழுவதும் தீக்கு இரையாயிற்று. விபத்துக்குக் காரணம் புலன் விசாரணையில் இருக்கிறது' என்றிருந்தது! எனக்கு எப்படி இருக்கும்?... நேரே போய்ப் பார்சல் கிளார்க்கைத் தண்டினேன். அவர் நஷ்ட ஈடு கோரி ரயில்வே நிர்வாகத்துக்கு எழுத ஆலோசனை தந்ததோடு தம் ஆழ்ந்த அனுதாபத்தையும் எனக்குத் தந்தார்!... ரயில்வே நிர்வாகம் என்னுடைய 'விலைமதிப்பற்ற' கதைகளுக்கு விலையாக இந்த ஐந்நூறு ரூபாய் 'செக்'கை அனுப்பியிருக்கிறது! என்ன துரதிர்ஷ்டம்!

மங்களம் (மகிழ்ந்து): அதிர்ஷ்டம்னு சொல்லுங்க! உங்க கதைக்கு ஒரு 'செக்'குன்னு சபதம் போட்டீங்க. அது நிறைவேறிடுச்சு! அதோட, ஒரு 'செக்' வாங்கிட்டா அப்புறம் எழுதறதையே விட்டுடறேன்னு சொன்னீங்க இல்லையா?... அப்படியே செய்துடுங்க, 'கலைவாசல்' வாசகர்களுக்கும் அதிருஷ்டமாக இருக்கட்டும்!

நம்பி (தன்னையும் மீறிச் சிரித்து): ஏய், ஏய்.. .மங்களம்... கேலி செய்யறியே!

பிடுங்கல்



கோதைக்குப் பஸ் ஸ்டாண்டில் நின்று நின்று கால் கடுத்து விட்டது. வெய்யிலோ மண்டையைப் பிளந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் பஸ் வரும் சுவடே தெரிய வில்லை. கோதை பொறுமை இழந்தாள்.... அவள் கால்கள் தள்ளாடின. தலை சுற்றியது. ''மயங்கி விழுந்து விடுவோமோ'' என்று எண்ணினாள். மெதுவாக, 'பஸ் ஸ்டாண்ட்' கம்பத்தைப் பற்றிக் கொள்ளக் கையை நீட்டி னாள். ஆனால்... ஆனால்... அவள் கையில் சிக்கியது.....

வெற்றி முழக்கம் விண்ணைத் தொட் டது. படைகள் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன. ஜெயசிம்மனின் ரதம் காற்றிலும் கடிதாகப் பறந்தது. அவனது உள்ளம்.... தன் வரவை எதிர்நோக்கி நிற்கும் இரு நீள் விழிகளைக் கற்பனை செய்வதில் முனைந் திருந்தது. எங்கு நோக்கினாலும்... களிப்பு... வெற்றியின் ஆரவாரம்.... ஜனத் திரள்.... வீர மன்னன்.... ஜெயசிம்மனுக்கு ஜே....! ஜே....! என்ற கோஷம் வானை எட்டியது.

அத்தனை வீர முழக்கத்திலும் அவன் சிந்தனை யில் நிறைந்து நின்றது அவனது இருதய ராணிதான். வெற்றிக் களிப்போடு வரும் தன்னை அவள் வரவேற்கும் காட்சி கண் முன்னே எழுந்தது! இந்த நினைவு முடிந்த போது அவனுக்குக் காற்றிலும் விரைந்து செல்லும் ரதம் ஊர்ந்து செல்லுவதாகவே பட்டது. ரதம் அரண்மனை வாயிலில் வந்து நின்றது. ஆனால் அங்கிருந்தோர் முகத்தில் மட்டும் ஏன் இந்தக் கலக்கம்...! தயக்கம்....! ஜெயசிம்மனின் கண்கள், ராணியை... தன் இருதய ராணியைத் தேடி அலைந்தன. விரை வாக ரதத்தை விட்டு இறங்கினான். ஐயோ! இதென்ன......!

மழை 'சோ'வென்று கொட்டிக் கொண் டிருந்தது. கோபு ஆனந்தமாக அதில் நனைந்து கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் வாய், ''மழையே! மழையே! வா...வா... வா...... என் தலையின் மேலே வழிந்து வா!'' என்ற பாட்டைப் பாடிக் கொண்டிருந்தது. அவன் கை பரபரப்பாகக் காகிதக் கப்பல் களை நீரில் மிதக்கவிட்டுக் கொண்டிருந்தது. இதோ...ஒரு கப்பல், இரண்டு கப்பல்கள்... மூன்று கப்பல்கள்....நான்கு....ஐந்து..... எல்லாம் அழகாக...ஆடி அசைந்து சென்றன. கோபு சந்தோஷம் தாங்காமல் கைகளைக் கொட்டிச் சிரித்தான்.

அடுத்த நிமிடம், 'வீ'லென்று...... 'வீ'லென்று...ஆனால் அவள் கையில் சிக்கி யது...மற்றொரு கை...கோதை நடுநடுங்கி விட்டாள். இவ்வளவு தைரியமாக பஸ்– ஸ்டாண்டில் தன் கையைப் பிடிப்பது யார்? மயக்கம் பறந்து விட்டது. கண்களைத் திறந்து பார்த்தாள். எதிரே...எதிரே...

ஐயோ! இதென்ன! ராணியின் தோழி அமுதவல்லி நிற்கிறாளே! மந்திரி பிர தானிகளும் முகம் கவிழ்ந்து நிற்கின்றனரே! ஜெயசிம்மன் துடிதுடித்து விட்டான். அவன் வாய் ''ராணி! ராணி! என் ராணி எங்கே?'' என்று அலறியது. மந்திரி மெதுவாக முன் வந்து. ''அரசே! தாங்கள் போரில் இறந்து விட்டீர்கள் என்று தவறான செய்தி வந்தது. எதிரிகளின் சூழ்ச்சி என்று எவ்வளவோ சொல்லியும்...ராணி அதை நம்பாமல் தன் உயிரை.... உயிரை....

அடுத்த நிமிடம் 'வீல்' என்று அலறினான் கோபு. காரணம் கோபுவின் அம்மா வின் 'கை' அவனுடைய முதுகில் பதிந்ததுதான்..... ''ராஸ்கல்! எவ்வளவு தடவை உனக்குச் சொன் னேன். மழையில் நனை யாதே....! நனையாதே....! என்று.....உடம்புக்கு வந் தால் யார் அவஸ்தை...?''

எதிரே தன் தோழி மங்களம் நிற்பதைப் பார்த் ததும்தான் கோதைக்கு நிம்மதி...நிம்மதி...

ராணி.... அதை நம்பாமல் தன் உயிரை மாய்த்து...... உடம்புக்கு வந்தால் யார் அவஸ்தை...... படுவது.....படுவது...

''சீ! கழுதை! கையில் எந்தப் புத்தகம் படிக்க எடுத்தாலும் மாறி மாறி.... 'பிடுங்கி'க் கொண்டே இருந்தால் நான் படித்து முடித்த மாதிரிதான்.... இந்தா! இந்தா! எல்லாம் நீயே பார்த்துக் கிழி..... அப்பப்பா! படிக்கிற ஆசையே போய் விட்டது. ஒரு சிறு கதைகூட முழுதும் படிக்க முடிவதில்லை....'' என்று பொரிந்து தள்ளி விட்டுத் தன் கையிலிருந்த புத்தகங் களை வீசித் தன் மூன்று வயதுப் பெண் ரமா முன்னால் எறிந்து விட்டு வனஜா எழுந்து உள்ளே சென்றாள்.

— எஸ். பத்மாவதி

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

ஃபாஸ்ஃபோமின்

உங்கள் குடும்பத்தினர் அனைவரும் வலிவும் ஆரோக்கியமும் பெற்றுத் தெம்புடன் திகழ வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ ஃபாஸ்பேட்கள் கலந்துள்ளது.

ஃபாஸ்ஃபோமின் அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. களைப்பை நீக்கும். பசியைத் தூண்டும். வலிவை பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமயமாய் வாழ உதவுவது பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக் ஃபாஸ்ஃபோமின்.



ERED NO. M. 4392
ed as a Newspaper in Ceylon

